

மாதப் பத்திரிகை

ஆசிரியர்

கா. வே. ராமசந்திரன்

நான்காவது வால்யூம் விக்கிரம வருஷம் கார்த்திகைப் பகுதி

15—11—1940.

விஷய ஸூசிகை.

விஷயம்: பக்கம்.

கவிதா விமர்சம்

1. தலைவன் பின் சென்ற தனி நெஞ்சம் ... தமிழ் வித்துவான், கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ... 641
2. குறளன் கூனி நாடகம் ... வரகூர் வேணுகோபாலன் ... 644
3. ஸ்ரீராம சரிதம் ... விசாரதன் ... 655

சிறுவர் பகுதி

1. துளவமாலை ... S. ரங்கஸ்வாமி B. A., அவர்கள் தொகுத்தது ... 646

பெண்டிர் பகுதி

1. வாயாடி ... R. S. V. மயில் நாச்சியார் ... 649

புதுக் கற்பனைகள்

1. கடற்காட்சி .... தமிழ் வித்துவான், கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ... 657
2. பிரதாபஸிம்மர் (நாடகம்) ... K. வரதாச்சாரி B.A., B. L., ... 661
3. குருதக்ஷிணை ... குருகுலக் கிலிட்டன் ... 674
4. ராமனும் ஸீதையும் .... ஸ்ரீராஜநாயகி ... 676
5. கோபம்—பாபம்—சாபம்: அஹல்யை யார்? ... குருதத்தன் ... 684
6. மழை காலம் ... மா. கிருஷ்ணன் ... 689

மொழிபெயர்ப்புப் பகுதி

1. நீர்ப்பூ விரியும் நிலையம் ... தமிழ் வித்துவான், கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர் ... 691
2. கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் 651
3. உமர்கையூமின் ருபையத்து ... "பாரத்வாஜன்" ... 693
4. நீலகண்ட தீக்ஷிதரது கலி விடம்பனம் ... R. S. ஸுந்தரேச சாஸ்திரிகள் ... 694

கீதப் பகுதி

1. ஸ்ரீஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களது கிருதி விளக்கம்: ராஸக்கிரீடை .... தமிழ் வித்துவான், R. முத்துவையர். ... 698

அறிவிப்பு.

'சில்பஸ்ரீ'க்குக் கட்டுரை எழுத விரும்புவோர் முதல் வால்யூம்தைப்பகுதியில் 2, 3-வது பக்கங்களில் உள்ள 'சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் நோக்கங்கள்' 'சில்பஸ்ரீயில் எழுதப்படும் விஷயங்கள்' என்னும் குறிப்புகளைக் காண்க. அனுப்பப்படும் கட்டுரைகளைத் தாளின் ஒரு பக்கத்திலே மட்டும் எழுதுமாறு பிரார்த்திக்கிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகளைத் திரும்பப் பெறவிரும்புவோர் தபால் தலையும் உடன் அனுப்புமாறு பிரார்த்திக்கிறோம்.

இப் பத்திரிகையில் வெளிவரும் புனைந்துரைகளிலுள்ள பெயர்கள் யாரையும் குறிப்பன அல்ல; எல்லாம் கற்பனைப் பெயர்களே அவை. கட்டுரைகளிலே கூறப்படும் அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்கள் அபிப்பிராயங்களே; அவைகளுக்கு பத்திரிகாசிரியர் ஜவாப்தாரி யல்ல.

சில்பஸ்ரீ

தமிழ் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்காகவே அமைந்ததொரு பத்திரிகை. டபிள் க்ரௌன் (Double Crown) அளவில் 64 பக்கங்கள் கொண்டு, மாதந்தோறும் வெளிவரும்.

தனிப்பிரதி	விலை அணா 4.
வருஷ சந்தா (உள்நாட்டுத் தபால் சார்ஜு உள்பட)	ரூ. 3.



கவிதா விமர்சம்.

தலைவன் பின்சென்ற தனி நெஞ்சம்.

(தமிழ் வித்துவான் கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர்)

மணமிகு மலரும், சுவைநிறை கனியும், மகிழ்தரு நிழலும், கண்கவர் வனப்பும் கண்டவர்க் களிக்கும் வளமிகு மரங்களும், செடிகளும், கொடிகளும் மலிந்து விளங்கும் ஓர் நந்தவனம், தன் நடுவில், குளிர்ந்த நீர் நிறைந்து, தாமரை, அல்லி, செங்கழுநீர் முதலிய மலர்களால் மூடுண்ட தடாகமொன்றைப் பெற்றுக் கம்பீரமாகக் காட்சி யளிக்கின்றது. அங்கு, மலர்களிலுள்ள மதுவைக் குடித்து வேத வொலிபோல் கீதவொலி செய்யும் மதுகரங்களும், செம்மையான அலகுகளால் பழங்களைக் கோதி யுண்டு களித்துத் தம் உற்றார் உறவினருடன் கொஞ்சிக் குலாவும் பைங்கிளிகளும், பளிக்கு நீரில் சிறகை யடித்துக்கொண்டு நிரை நிரையாக நீந்தித் திரியும் பாலன்ன அன்னப் பறவைகளும் பார்க்கப் பார்க்க நமது மனத்தைப் பரவசஞ் செய்யும். ஓர்கால் அங்குச் சென்று நோக்கினும், அக்காட்சி, நம் வாழ்நாளிடையில் வரும் மனக்கவலைகளை மாய்க்கும் மருந்தென அவ்வப்போது தோன்றி யுதவும் எனின், அதன் பெருமையை யளவிட்டுக் கூற வியலாமை தெள்ளிதின் தெரிய வரும்.

இத்தகைய எழிலமைந்த பூங்காவில், பளிக்குப்பீட மொன்றின்மேல், அழகின் அவதாரமோ என்று அதிசயிக்கத் தக்க அரிவை யொருத்தி, கவலையே குடிகொண்ட முகத்தினளாய்க் கற்பதுமைபோல் அசைவற்று உட்கார்ந்திருக்கின்றனள். அவளைச் சுற்றிலும், அவள் தோழியர் தலைவியின் வாயிலிருந்து என்ன கட்டளை எப்போது பிறக்குமோ என்று எதிர் பார்த்தவண்ணம் மௌனமாய் நின்றிருக்கின்றனர். அவள் நிலைமையை நோக்கின், அவள் செல்வமும், செல்வாக்குமுள்ள ஓர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவளாகவே காணப்படுகின்றாள்.

அவளோ எதையுங் கவனித்தாளில்லை. அவள் கண்களும் அசைவற்று எதையோ நோக்கி நிற்கின்றன. சில்லென்று குளிர்ந்த காற்று நீர்த்துளிகளுடன் வீசுந்தோறும் அவள்

மார்பு புடைத்துப் புடைத்து வடிவதனல், அவள் பெருமூச்சு விடுகின்ருள் என்பது, கூர்மையாய்க் கவனித்து நோக்கின் நன்கு புலனுகும்.

இவ்வளவு சீரும் சிறப்பும் நிறைந்த அவளுக்கு இத்தகைய கொடிய சிந்தனை எங்கிருந்து வந்தது?

அத் தளிர்கொடிக்குப் பற்றுக்கோடு ஆவான் அவள் காதலனே யன்ரு! ஓங்கி நிறையும் செல்வமும், உரைகேட்கும் தோழியரும், மற்றும் எண்ணில சௌகரியங்களும் இருப்பினும், காதலன் அருகில் இல்லாக் கவலை தலைவிக்குத் தனிக்குறையே யன்ரு!

அவள் காதலன் அவளிடம் ஏதோ சொல்லிவிட்டு, எங்கோ சென்றிருக்கின்ருன். அவன் திரும்பி வருவதாகக் குறிப்பிட்டுச் சென்ற நாளும் கடந்துவிட்டிருக்கவேண்டும். அதனல், அவன் வருகையை நோக்கி நோக்கி அவள் ஏங்கிக் கிடக்கின்ருள். அவளுக்கு ஓர் நாள் ஓர் யுகமாக நீள்கின்றது. தலைவனை விரைவில் பெற விரும்புகின்ருள் அவள். எப்படி?—தலைவன் இருப்பிடத்தை பொருவாறு தெரிந்து, அவன் பால் தூது அனுப்ப எண்ணுகின்ருள் அவள். யாரை?—தன்னைச் சூழ்ந்துள்ள தோழிகளில் யாரையாவது ஒருத்தியை யனுப்பலா மென்ருலோ, அவள் மனஞ் சம்மதிக்கவில்லை. ஏன்?—தோழியும் ஓர் பெண்தானே! அவளை யனுப்பினல், என்னவாகுமோ என்று எண்ணுகிறது அவள் உள்ளம். அச்சோலையிலுள்ள அன்னங்கள், கிளிகள், வண்டுகள் முதலியவைகளில் ஏதாவது ஒன்றையேனும் அனுப்பலாமே! அதுவும், தன் மனத்தை அவனிடஞ் சரியாகச் சொல்லுமோ சொல்லாதோ என்று ஐயம் உண்டாகின்றது அவட்கு.

அவள் கடைசியாக ஓர் தீர்மானஞ் செய்து கொள்கின்ருள். என்ன அது? 'நெஞ்சையொளித் தொரு வஞ்சக மில்லை' என்ற முதுமொழி யவளுக்கு ஞாபகம் வருகின்றது. தன் நெஞ்சே தன் துயரைப் போக்கத் தக்க துணையென்று அவள் நினைக்கின்ருள். ஆதலால், அவள் தன் நெஞ்சையே தன் தலைவனிடந் தூதாக அனுப்புவது என்று நிச்சயித்து, நெஞ்சினிடம் நம்பிக்கையோடு, அதை நோக்கி, 'நெஞ்சமே! நீ விரைவிற் சென்று என் தலைவரிடம் என் நிலைமையைக் கூறி, அவரைக் கையோடு அழைத்து வா; அப்படி அவர் வருவதற்கு அசந்தர்ப்ப மேற்பட்டால், அவர் ஞாபகார்த்தமாக, அவர் அணிந்திருக்கும் மாலையை யாவது வாங்கிவா; நீயும் அவரோடு இருந்து விடாதே; 'போனேன்; வந்தேன்' என்று வர வேண்டும்' என்று கூறித் தூது விடுக்கின்ருள்.

அந்தோ! எந்த நெஞ்சினை அவள் நம்பியிருந்தாளோ, அந்த நெஞ்சமும் அவளை வஞ்சித்து விடுகின்றது. சென்ற தன் நெஞ்சம் நாயகனைக் கண்டு விரைவில் வரும் வரும் என்று எதிர்பார்த்து ஏமாற்ற மடைகின்ருள் நாயகி. அதுவோ தலைவனிடஞ் சென்று நின்று நிலைத்து விடுகின்றது. அப்போது, அவள் நிலை மிகவும் கேவலமாகி விடுகின்றது. தன் நெஞ்சே தன்னைச் சதி செய்து விட்டதை நினைந்து நினைந்து அவள் வருந்துகின்ருள். அவளால் அத்துயரத்தை உள்ளடக்கிக் கொண்டிருக்கவும் முடியவில்லை. உள்ளக் குறையை உற்றவரிடத்தில் உரைத்தால் மட்டுமே தீரும். அவள் மெதுவாக வாய் திறந்து தன் தோழிகளை நோக்கி,

(தாழிசை)

'நீரிருக்க மடநங்கைமீர்! கிளிகள் தாமிருக்க
மதுகரமெலாம் நிறைந்திருக்க மடவன்ன
முன்னம் நிரை யாயிருக்க வுரையாமல்
யான்

ஆரிருக்கிலு மென்னெஞ்ச மல்லதொரு
வஞ்ச மற்ற துணையில்லை யென்று ஆதரத்
தினேடு தூது விட்டபிழை யாரிடத்
துரைசெய்து ஆறுவேன்?

சீரிருக்கு மறைமுடிவு தேடரிய திருவரங்
கரை வணங்கியே திருத்துழாய் தரில்
விரும்பியே கோடு திரும்பியே வருத
லின்றியே

வாரிருக்கு முலே மலர்மடந்தை யுறை
மார்பிலே பெரிய தோளிலே மயங்கி
யின்புற முயங்கி யென்னையும் மறந்து
தன்னையும் மறந்ததே."

என்று புலம்புகின்றாள்.

"இளமை பொருந்திய தோழியரே! எனக்குற்ற துன்பத்தை யென்ன வென்று சொல்லுவேன்! நீங்கள் எல்லாம் இருக்கின்றீர்கள்; கிளிகள் இருக்கின்றன; வண்டுகள் இருக்கின்றன; அன்னங்களும் அணியணியாக வுள்ளன; ஆரிருந்தால்தான் என்ன! 'என் நெஞ்சமல்லதொரு வஞ்சமற்ற துணையில்லை' என்று, அன்போடு அதை அவரிடம் தூது விட்டேன்; அப்பிழையை யாரிடத்தில் சொல்லி, என் துக்கத்தை யாற்றிக் கொள்வேன்! "சிறந்த வேதங்களும் தேடியறியாத திருவரங்க நகரில் உள்ள தலைவரை வணங்கி, அவர் தரும் திருத்துழாயைப் பெற்று அது திரும்பி விடும்" என்று நினைத்தேன். ஐயோ! அது அவ்வாறு வந்திலது; இரவிக்கை யணிந்த இலக்குமி தேவி வசிக்கும் அவருடைய மார்பையும், பெரிய தோள்களையுங் கண்டு மயங்கி, இன்பம் உண்டாக அவைகளைத் தழுவிக் கொண்டு, என்னை மறந்து விட்டது மல்லாமல், தன்னையும் மறந்து அங்கேயே நின்று விட்டது. இப்படியும் ஒன்று செய்யுமோ? இனி யான் என்ன செய்வேன்?"

என்று தலைவி, தன் தலைவன் பின் சென்ற தனி நெஞ்சைக் குறித்துப் பெருமூச்சு வாங்கப் பேசுகின்றாள்.

இக் கருத்து அடங்கிய இன்னொரு பாடல் வருமாறு:—

"மட நெஞ்ச மென்றுந் தமதென்றும்
ஓர் கருமங்கருதி
விடநெஞ்சை யுற்றார் விடவோ வமையும்
அப்பொன் பெயரோன்
தடநெஞ்சங் கீண்ட பிரானார் தமதடிக் கீழ்
விடப் போய்த்
திடநெஞ்ச மாயெம்மை நீத்து இன்று தாறுந்
திரிகின்றதே."

"எம் நெஞ்சம் அறியாமை யுடையது என்றும், எமக்கு மனமொத்தது என்றும், ஓர் காரியத்தைக் கருதி, அந்நெஞ்சைத் தூது விடத் துணிந்தவர் அவ்வெண்ணத்தை அடியோடு விட்டொழிதலே தகுதி யுடையதாம்:— ஏனெனில், அந்தக் கொடிய இரணியனுடைய பெரிய மார்பைச் சுலபமாகக் கீண்ட பராக்கிரமசாலியான தலைவனுடைய திருவடிகளிலே யாம் எமது நெஞ்சைத் தூதுவிட, அது விரைந்து சென்று, அவரிடமே யிருக்கும் உறுதி கொண்டதாகி, தூது விட்டவரும், தனக்கு உடையவருமான எம்மை நினையாமற் கைவிட்டு, இன்று வரையில் அத்தலைவனையே தொடர்ந்து உல்லாசமாக உலாவிக் கொண்டிருக்கின்றது. அதனால், எவரும் தம் நெஞ்சைத் தூதுவிட நினையாமலிருப்பது நல்லது" என்று சடகோப நாயகி தம் அனுபவத்தை உலகத்தோர்க்கு உபதேசிக்கின்றாள்.

குறளன் கூனி நாடகம்.

(வரகூர் வேணுகோபலன்)

இடம்—மருதநிலம். காலம்—இளவேனில்.

குறளன் :—கோடாரிபோல் வளைந்த முதுகுடைய கூனியே! சற்று நில்; உனது கூன் முதுகானது, நீரின்மேல் வளைவுடன் தோன்றும் நிழல் போல் நிரம்ப அழகாக உள்ளது காண்! இந்த கூனுடன் நீ அசைந்தசைந்து நடப்பது என் கண்ணைக் கவர்கின்றது! ஆதலால் உன்னோடு ஒரு காரியம் சொல்கிறேன், கேள்; அவ்விதம் நான் உன்னுடன் பேசுவதற்கு நீ என்ன பாக்கியம் செய்தாய், கூனியே! சற்று நில்.

கூனி :—(சிரித்துக்கொண்டே) ஏ ஆயா! இவன் பேச்சு அழகாயிருக்கிறது! கண்ணுற்பார்க்கத் தகுதியில்லாத ஏ குறளா! ஆண்டலைப் பறவைக்குத் தன் பெடையீன்ற பறழ் போன்ற குறளா! உன்னை யான் விரும்புவேன் என்றோ என்னை வழியிற் போவதைத் தடுத்தாய்! அடே அறிவிலி! நின்னைப்போற் குறளாயிருப்போர், அழகில் உருப்பசி போன்ற என்னைத் தீண்ட எண்ணமும் கொள்வார்களோ! உன் பேச்சு மிக அழகுதான்!

குறளன் :—கலப்பையில் சொருகிய கொழுவைப்போல ஓரிடம் கூனாய்ப் புறப்பட்டு, ஓரிடம் முன்னே வளைந்து, முறிந்து தொங்கும் உடம்பைப் படைத்த கூனியே! உன் அழகாலும், உடம்பமைப்பாலும் என்னை பொறுக்க முடியாத காம பரவசனாக்கினாய்; நான் இக் காம நோயை இனி பொறுக்கமாட்டேன்; நீ அருள் செய்தால் என்னுயிர் தங்கி நிற்கும்; விரைவில் உன் விருப்பத்தைக் கூறுவாயாக!

கூனி :— ஒ! இவன் எண்ணம் நன்றுதான்! அடே குறளா! நெத்தப் பலகையை எடுத்து நிறுத்தினாற்போன்ற உடம்புடைய குறளா! என்போன்ற அழகுள்ள மகளிரைக் கூடும் முறையைக் கல்லாதவன் நீ! இப்பொழுதோ சூரியன் உச்சியில் இருக்கிறான்; இங்கு மக்கள் சஞ்சரிக்கவே இயலாத வெயிற்காலமிது; இதில் நீ என்னைக் கைப்பிடித்து நின் வீட்டிற்கு வா என்று சொல்லுதற்கு எவ்வளவு துணிவு! என்னைப் போன்று உனக்கு பல பெண்டிர் உளரோ! பதில் சொல்லடா.

குறளன் :—என் விருப்பத்திற்குகந்த நல்லாளே! நான் உன்னை விரும்பினும், உன் உடப்பு, புல்லுதற்கு முடியாதபடி அமைந்துள்ளதை நீயறியாயோ! தலைவரையில் வளைவுள்ளதாய், கதலி போன்ற வளைவையுடைய கொக்கை உரித்தது போன்ற வளைந்த மடுப்புடையாய்! யான் சொல்வதைக் கேள்; நின்னை என் மார்பிடத்தே புல்லுவேனாயின், என் நெஞ்சின்மேல் உன் கூன் உறுத்தும்; உன் முதுகின்மேல் புல்லுவேனாயின் முதுகுக் கூன் அக்குளைக் காட்டும். ஆதலால், யான் முயன்றாலும், உன் சரீரம் இடம் தராது; இனி ஒரு பக்கமாக சிறிது யான் புல்லும்படியாக நீ என்னைப் புல்லுவாயாக.

கூனி :—எடா! உன் அறிவு களிமண்ணோ! சீ! கெட்டதன்மையுடையவனே! இங்கு விட்டு ஓடிப்போ! (ஓடுகிறாள்.)

குறளன் :—ஏடீ, ஓடாதே. இங்கு வா, உன்னை விடேன் (கூனியைப் பின்தொடர்கிறான்.)

கூனி :—(நின்று) அடா! குறளா! உன் உடம்பு ஆமையை எடுத்து பூமியில் நிறுத்தினாற் போன்று அவ்வளவு உயரம் உள்ளது. யானோ உயரமும், பூவைப் போன்ற மென்மையும் உடையேன்; ஆதலின் என்னைப் புல்லுதல் உனக்கு முடியாத காரியம். இக் காரியத்தைக் கைவிட்டு விடு நீ!

குறளன் :—அம்மே! கோடாரி போன்ற உனது கூனுடம்பு, யான் புல்லுவதற்கு இனிதாக இருக்கும்; தடை செய்யாதீர்!

கூனி :—ஏடா, யான் சொல்லவும் வீம்பு செய்கின்றனை; எம்மைப் புல்லி, இன்பந்தர எத்தனையோ கூனர்கள் உள்ளனர்; சுவையுள்ள பணியாரங்கள் வைத்துக் கொண்டு எமக்காகக் காத்திருக்கும் கூனர்கள் வழியில் பலருளர்; பாதையைப் புல்லும் நீ எமை விரும்பாதே செல்.

குறளன் :—ஏடீ, உன் அழகு நன்றுதான் உன் அழகிற்கு யான் தகுதியல்லனே! அவ்விதமாயின் எனக்குள்ள குறைதான் என்ன? கூறுவாயாக.

கூனி :—ஓ, நீ மிகவும் கெட்டிதான்; உன் உடல் குறளாயினும், பேச்சு அதிகமாயுள்ளதே! ஏடா, உன் குறட் சாதியினை விட, எம் கூன் சாதியினுடைய பிறப்பு தாழ்ந்ததோ! (ஒரு மரத்தின் பக்கத்தில் மறைந்து நின்றாள்.)

குறளன்:—ஏடீ! உன்னை விரும்பி யான் இவ்வளவு தூரம் சிரமப்பட்டு உன்னுடன் ஓடி வந்தும், நீ, மரத்தைப் புல்லுகின்றனையே! என்னைக் காட்டிலும் மரம் இனிதாயிருக்குமோ!

கூனி :—ஏடா! உழுந்து போல் ஏன் ஓடி வந்தனை? ஆமையை நேராய் நிறுத்தினாற் போன்ற நெடியோய்! தோளிரண்டையும் விலாவுக்குள்ளே வீசிக்கொண்டு என்னைத் தொடர்ந்து காமனார் போன்று நடை போடுகின்றனையே! இந் நடை மிகவும் அழகுதான். (சிரித்து நிற்கிறாள்.)

குறளன் :—ஏடி! என்னை யாரென்று நினைத்தாய்? ஒருவரை ஒருவர் புல்லுதற்கு காரணமான சாமனார் தமையனார் காமனார் நடையை நீ பார்த்ததில்லை போலும்; அவ்விதமாயின் இதோ பார், காமனார் நடையை. (என்று நடந்து காட்டுகிறான்.)

கூனி :—ஓ ஓ! இவன் நடை காணத் தகுந்தது; இக் காட்சியை, பறவைகள் விலங்குகளும் கூட கண்டு நகைக்கின்றன. (சிரிக்கிறாள்.)

குறளன் :—அம்மே! நாம், கூடி இன்புறுதற்கு யான் நின் மெய்யைத் தீண்டுதற்கு குறியிடம் இன்ன இடம் என்று நம்முளே பேசுவோம்.

கூனி :—ஏடா! இனி நீ எம்மை இகழ்ந்து கூறுதலைத் தவிர்வாயாயின், உடன்படுவேன்.

குறளன் :—அம்மே! நன்று. இதோ சூரியனைப் பார்த்துச், சூளுறற்றேன்; இனி உன்னை இகழேன்.

கூனி :—அப்படியே யானும் நின்னை இனி இகழேன்.

புல்லுதற்கு இனிய மார்பனே! இனி, "பேயும் பேயும் துள்ளுவதுபோல் இக் கூனும் குறளும் துள்ளுகின்றன" என்று பிறர் நகை செய்து கூறுதபடி நாம் சுகித்திருப்போம் வா. சோலைக்குப் போவோம்; (குறளனைக் குனிந்து கட்டி யிழுக்கிறாள்.)

குறளன் :—சரிபோலும் அம்மே! (சிரிப்புடன்) நல்லது. (இருவரும் தழுவிக்கொண்டு செல்லுகின்றனர்.)

(விதூஷகக்கூத்துக்கு உதாரணமான ஹாஸ்ய ரஸமுள்ள இந் நாடகம் கலித் தொகையிலுள்ள ஒரு பாடலிலே அமைந்துள்ளது.)

சிறுவர் பகுதி.

துளவமாலை.

(S. ரங்கஸ்வாமி B. A. அவர்கள் தொகுத்தது)

துளவ மாலை சூடிய தேவனை அளவி லழகனை யடிப ணிகுவாம்.

அரியாயிருந்தான் திருநாம மெண்.
ஆதி காண்பு ஆர்க்கு மரிது.
இனியவன் மாயனென வுரைப்பர்.
ஈருருவ னென்பர் இருநிலத்தோர்.
உணர் வென்னும் ஒளிகொள் விளக்கேற்று.
ஊனக்குரம்பையினுள் புக்கிருள் நீக்கு.
எம் பிரானைத் தொழாய், மட நெஞ்சமே.
ஏத்த வல்லவர்க்கில்லை ஒரூனமே.
ஐம் பூதம் ஐந்தும் அகத்தடக்கு.
ஒருவனையே நோக்கு முணர்வு.
ஓராழியானடியே யோது.
ஔவிய பிறப்பில் அழுந்தி வாடாதே.
வெஃகாவில் திருமாலைப் பாடு.

கண்ணன் தாள் வாழ்த்துவதே கல்.
காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே?
கிளரொளிமாயன் தாள் பற்று.
கீத முழவிட்டு அணங்காடுதல் கீழ்மையே.
குன்றனைய குற்றஞ் செய்யினும் குணங் கொள்ளும்.
கூத்தனாய் நின்றான் குறை கழலே கூறு.
கெடுமிடராய வெல்லாம் கேசவா வென்ன.
கேசவன் பேரிட்டு நீங்கள் தேனித் திருமினே.
கைச்சக்கரத் தண்ணல் கள்வம் பெரிதுடையன்.
கொண்டானை யல்லாற் கொடுத்தாரை யார் மதிப்பார்?
கோணைகணையான் குறை கழலே கூறு.
கௌத்துவ முடைக் கோவிந்தனோடு கூடு.

ஓங்கி யுலகளந்த வுத்தமன் பேர் பாடு.

சமயங்கள் கண்டான் அவை காப்பான்.
சார்வு நமக்கென்றும் சக்கரத்தான்.
சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே?
சீதனையே தொழுவார் விண்ணுளாரிலுஞ் சீரியரே.
சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானை.
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.
செயல் தீரச் சிந்தித்து வாழ்வாரே வாழ்வார்.
சேமம் செங்கோனருளே.
ஆசைப்பட் டாழ்வார் பலர்.
சொன் மாலை யெப்பொழுதும் சூட்டு.
சோலைக் கிளியவள் தூயநற்பாதம் துணை நமக்கே.

நெஞ்சில் தொழுவாரைத் தொழாய்.

ஆட்செய் தாழிப் பிரானைச் சேர்.

கண்கள் காண்டற் கரியன், கருத்துக்கு நன்று மெளியன்.

தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர்.
தாம் செய்யும் தீவினைக்கே தாழ்வுறுவர்.
திருமறு மார்வனைச் சிந்தையுள் திகழ வைப்பீர்.
தீதில் நன்னெறி நில்.
துஞ்சும்போ தழைம்மின், துயர்வரில் நினைமின்.
தூமாண்சேர் பொன்னடிமேற் சூட்டுமின் மாலை.
தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கு.
தேருங்கால் தேவ னொருவனே யென்றுரைப்பர்.
தையொரு திங்களும் தரை விளக்கு.
தொழுது மலர் கொண்டு தூபங் கையேந்து.
தோய்விலன் புலனைந்துக்கும் சொலப்படான் உணர்வின் மூர்த்தி.

நல்லானுடைய நாமம் சொல்லில் நமோ நாராயணமே.
நாராயணனே நமக்கே பறைதருவான்.
நினைப்பார் பிறப்பொன்றும் நேரார்.
நீரணைமேல் பள்ளியடைந்தானை நாளு மடை.
நுந்துணைக் கையால் தொழுது நிற்பீர்.
நூற் கடலான் நுண்ணறி வினன்.
நெஞ்சமே பேசாய் நினைக்குங்கால்.
நேசமிலாதவர்க்கும் நினையாதவர்க்கு மரியன்.
நைவளம் நவிற்று பொழில் நந்திபுர விண்ணகரம் நண்ணு.
நொந்தாராக் காதல் நோய் மெல்லாவி யுள்ளுலர்த்தும்.
நோய்க்கும் அருமருந்தாகுமே.

பணி நெஞ்சே நாளும் பரம பரம்பரனை.
பாத நாளும் பணியத் தணியும் பிணி.
பிணி யொன்றும் சாரா; பிறவி கெடுத்தாளும்.
பீதக வாடைப் பிரானார் பிரம குருவாகும்.
புலனைந்து மேயும் பொறியைந்து நீக்கு.
பூந்துழாயானடிக்கே போதொடு நீரேந்து.
பெரியார்க்காட் பட்டக்கால் பெறாத பயன் பெறுவீர்.
பேசுமின் திருநாம மெட்டெழுத்தும்.
பையரவணையான் நாமம் பரவு.
பொருளால் அமருலகம் புக்கியல லாகாது.
போதவிழ் மலையே புகுவது பொருளே.
பௌவத்திரையுலவு புல்லாணி கைதொழு.

மணியுருவங் காண்பாய் மகிழ்ந்து.
மாயவனையே மனத்து வை.
மின்னின் நிலையில மன்னுயி ராக்கைகள்.
மீனா யுயிரளிக்கும் வித்து.
முக்குணத்தி ரண்டவை யகற்று.
மூரி நீர்வண்ணன் முதலாவான்.
மெய்ம்மையே காண விரும்பு.
மேலாத் தாய்தந்தையும் மவரே.

மைம்மான வண்ணம் மகிழ்ந்தேத்து.

மொய்கழலே யேத்தமுயல்.

மோகூர் நாளும்மேவி நன்கமர்ந்து நில்.

மௌவல் குழலாய்ச்சி நயந்த திருமார்பனைச் சிந்தையுள் வை.

வாய்கொண்டு மானிடம் பாடாதே.

அரணும் நமக்கென்றும் ஆழிவலவன்.

அலமும் ஆழிப்படையும் உடையார் நமக்கன்பர்.

வணங்குந் துறைகள் பல பல வாகும்.

வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பரென்பதில்லை.

விழுமுடம்பு செல்லுந்தனையுந் திருமாலைத் தொழுமின்.

வீடுடையானிடை வீடு செய்மினே.

வெற்பென்று வேங்கடம் பாடு.

வேங்கடமே விண்ணோர் தொழுவதும்.

வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே.

வாழ்வார் வினை கெடுத்து வீற்றிருப்பார்.

உள்கலந்தார்க் கோரமுதே.

அற்றது பற்றெனில் உற்றது வீடு.

பொன்னப்பன் மணியப்பன் முத்தப்பன் என்னப்பன்.

பெண்டிர் பகுதி.

வாயாடி

R. S. V. மயில் நாச்சியார்

(சிங்கம்பட்டி ஜமீந்தாரிணி.)

மூன்றெழுத்து வார்த்தை! யார் வாயாடி? பொருளைக் கவனித்தால், யாதாமொருவர் பேச்சுத் திறமை அதிகம் பெற்று அத்திறமையைத் தருணம் தப்பி உபயோகப் படுத்துகிறார்களோ அவர்களை 'வாயாடி' எனலாம். வார்த்தையின் விகுதி 'இ'யைக் கவனிக்குங் கால், பெண்பாலுக்கே உரியதோ அடைமொழி எனத் தோன்றுகிறது. நாட்டு வழக்கத்திலும் இது பெண்பாலர்களுக்கே அதிகம் உபயோகப்படுத்தப் படுகிறது.

என்னே! வார்த்தையின் விநோதம்! வாக்குத்திறமை வாய்ந்தவர்களை வாயாடி என அழைக்கலாகுமா? தருணம் தப்பி அசம்பாவிதமாகவும், பிறர் மனம் நோகும்படியும் பேசும் பெண்மணிகளை 'வாயாடி' என்றழைப்பது சற்று அறிந்து கொள்ளக்கூடியதே. ஆனால், மனிதவர்க்கத்தில் ஆண் என அகந்தை கொண்டு, ஆரணங்குகளை வாய் திறக்க வொட்டாமற் செய்து, 'வாயாடி' என்று பட்டம் கட்டும் மாபெரும் ஆத்துமாக்களை என்னென்று சொல்வது!

தற்காலப்போக்கை யனுசரித்து, பெண்களும் கல்வி கற்று, வாக்கு வன்மை பெற்று வருவது சிறிதளவாக நடக்கிறது. அத்தகைய பெண்மணிகளை, "இந்தப் பெண் என்ன வாயாடியிருக்குடி, சேஷி!" என்று கூறும் கர்நாடகப் பாட்டிமார்களும் உளர். முக்கியமாக, "சேஷா! அந்தப் பெண் உனக்கு வேண்டாம். அது பெருத்த 'வாயாடி' இன்னா!" என்று கூறும் ஆண்கள் பலர் இன்னும் இருக்கிறார்களே! அந்தோ! பரிதாபம்!

ஆண்கள் தெருத்திண்ணைகளிலும், கோவில் குளங்களிலும், கூட்டங்கூடி தங்கட்குச் சம்பந்தம் சிறிதளவு மில்லாத விஷயங்களைப் பேசி வீண் பொழுது போக்கும் காட்சி, அவர்களுக்கு ஈனமில்லையோ? யாவும் கற்றறிந்து விட்டதாக எண்ணி, இல்லாளைத் தன் மனம் போனபடி நடத்திப் பின் அவ்வில்லாள் கூறும் மறுமொழிகளைச் செவியுற்றவுடன், "ஐயோ! இத்தனை வாயாடியா நீ?" என்று சொல்வது நியாயமோ? கேட்ட கேள்விகளுக்குப் பட்டுப் பட்டெனப் பதில் கூறும் புத்தியும், வாக்கு

வன்மையும் கொண்ட பெண்மணிகள் 'வாயாடி' யாவரோ? அல்லது, ஆண்பாலர் செய்யும் அக்கிரமங்களை ஆதரிக்காமல் அதட்டிப் பேசும் ஆரணங்குகளை 'வாயாடி' யெனலாமோ? உண்மையில், வாக்குவன்மையில்லாத விடத்து, அறிவொளி மங்குவது யாவருமறிந்த விஷயம்.

சகோதரிகளே! "அழுத பிள்ளையே பால் குடிக்கும்." வாயாடாத பிள்ளை பால் பெறாது. 'வாயாடி' யென்ற பதத்தைத் தற்காலத்தில் உபயோகிக்கப்படும் பொருளில் உபயோகப் படுத்தாமல், அகராதியினின்றும் எடுபடுவதற்காக, யாவரும் 'வாயாடி' யாவீர்கள்! எழுமின்!

ஆதிகாலத்தில் இருந்த 'சஹதர்மிணி' முறையை உற்று நோக்கினால், பெண்களுக்கு எத்துணையோ சுதந்தரம் வழங்கப் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. அக்காலத்திய வாழ்க்கைக்கு அத்தகைய சுதந்திரம் போதுமானதா யிருந்தது. ஆனால், இப்பொழுது இருபதாம் நூற்றாண்டு. முற்காலத்திய தத்துவங்களை இக்காலத்தில் அனுசரிக்க இயலுமோ? இராவணன் செய்த அக்கிரமங்களை யெடுத்து இடித்துக் கூறிய சீதாதேவி வாயாடியாவளோ? கணவனைக் காணத் தனி முயற்சி யெடுத்த தமயந்தி வாயாடியோ? அன்னார் மரபில் உதித்த இந்தியப் பெண்மணிகள் தங்கள் வாக்குச் சுதந்திரத்தையுங்கூட, இம்மாதிரியான 'வாயாடி' என்ற 144 ஸெக்ஷன் போட்டு இழக்கச் செய்து தற்கால நவநாகரீகப் பெம்மான்களுக்கழகல்லவே.

சகோதரர்களே! 'வாயாடி' என்ற பதத்தைக் கையாடாமல் விட்டு, கண்ணியமாய்ப் பாரத நாட்டு ஸ்த்ரீரத்தினங்களுக்கு உரிய வாக்குவன்மையையும், கல்விப் பெருக்கையும் நாடி நலம் பெற மனமுவந்து ஊட்டுவீராக!

கதைக் கடல்.

மதனமஞ்சுகா என்ற ஆறுவது லம்பகம்.

ஆறுவது அலை.

(டாக்டர் வே. ராகவன்.)

(640-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள் தானே விளங்கும்படி அவனுக்கு ஏற்பட்ட பெயரையும் பிறப்பையும் முனிவர் அரசனிடம் தெரிவித்தார். மேனகையை நினைத்ததால் முனிவருக்குப் பிறந்த அப்பெண் அப்ஸரஸ்த்ரீயாவாள் என்று கொண்டு அரசன் முனிவரிடம் அவளை யாசித்தான். முனிவரும் அரசனுக்குப் பெண்ணை அளித்தார். முன்னோரின் திவ்விய மஹிமை வாய்ந்த காரியத்தை நாம் விசாரிக்கலாகாதல்லவா?

இதைத் தம் சக்தியால் அறிந்த தேவமாதர்கள், மேனகையிடமுள்ள அன்பினால் அங்கு வந்து கதளீகர்ப்பைக்கு விவாஹ அலங்காரங்களைச் செய்தனர். கையில் கடுகைக்கொடுத்துச் சொன்னார்கள் "வழி தெரிந்து கொள்வதற்காக நீ போகும் போது இக்கடுகு விதைகளை போட்டுக்கொண்டு போ; ஒருவேளை கணவன் உன்னை நிராகரித்து நீ இங்கு வரும்படியாயிருந்தால் இந்த முளைத்த கடுகுப்பயிர்வழியே வந்தால் உனக்கு வழி தெரியும்" என்று. கலியாணத்தை செய்து கொண்டு த்ருடவர்மன் கதளீகர்ப்பையை தன் குதிரையின்மேல் வைத்துக்கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டான். ஸைன்யம் பின் தொடர, மனைவி வழியெல்லாம் கடுகை விதைத்துவர, அரசன் தலைநகரை யடைந்தான். அங்கு தன் மந்திரிகளிடம் கதளீகர்ப்பையின் வரலாற்றைச் சொல்லி, மற்ற மனைவியரைப் பார்க்காதவனாக அரசன் கதளீகர்ப்பையுடனேயே இருந்து வந்தான்.

அதன்மேல் திரிடவர்மனுடைய முக்கியபட்டமஹிஷி மந்திரியை ஏகாந்தத்தில் தான் அவனுக்குச் செய்த உதவிகளை நினைவு மூட்டி, மிக வருந்தினவளாய் அவனிடம் சொன்னாள்: "புதுமனைவி யொருத்தியிடமே ஈடுபட்ட அரசனால் நான் இப்போது விலக்கப்பட்டவளானேன். இந்த சக்களத்தி திரும்பிப்போய் விடுமாறு நீ செய்." இதைக் கேட்டு மந்திரி பதிலுரைத்தான்: "மஹாராணி, என்போன்றவர்கள் அரசனது மனைவியை ஒழித்துவிடுவதோ பிரித்துவிடுவதோ செய்யத்தகாத காரியம். சூது முதலிய சூழ்ச்சிகளில் பிரவிருத்திப்பவர்களாயும் அதுபோன்றவருடன் சேருபவராயு மிருக்கும் சந்நியாசினிகள் செய்யவேண்டிய காரியம் அது. அந்த போலித் துறவிகள் தடையின்றி வீடுகளில் புகுந்து மாயைகளில் தேர்ந்தவராயிருந்து என்னென்னதான் செய்கிறதில்லை!" இப்படி மந்திரியால் சொல்லப்பட்ட ராணி வெட்கத்தால் தலைகுனிந்தவள் போலிருந்து "ஆனால் நல்லோர் இழிவாகக் கருதும் காரியம் வேண்டாம்" என்றாள். மந்திரி சொன்னதைமட்டும் மனதில் வைத்துக்கொண்டு, மந்திரியை அனுப்பிவிட்டு, தன் சேடியை அனுப்பி, ஒரு கபட சந்நியாசினியை யழைத்துவரச் செய்தாள். அவளிடம் தான் எண்ணியிருப்பதனைத்தையும் அடியிலிருந்து சொல்லி, காரியம் முடிந்ததும் நிரம்பப் பணம் கொடுப்பதாய்ச் சொன்னாள். பணப் பேராசை கொண்ட துஷ்டதாபஸியும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மஹாராணியிடம் சொன்னாள்: "தேவி, இதென்ன பெரிய காரியம், இதோ உனக்கு ஸாதித்துக் கொடுக்கிறேன். எனக்கு பலவகைப்பட்ட சூழ்ச்சிகள் ஏராளமாய் தெரியும்." இப்படி ராணியை ஆச்வாஸப்படுத்திவிட்டு அந்த தாபஸி சென்றாள். தன் மடத்தை யடைந்து பயந்தவள் போல் நினைத்துக்கொண்டாள்: "அந்தோ!

ஸுகம் அனுபவிக்க வேண்டுமென்ற பேராசை யாரைத்தான் கேலிக்கு ஆளாக்காது? ராணி யின் முன் திடீரென யோஜியாமல் பிரதிக்ஞை செய்து விட்டேனே? இவ்விஷயத்தில் நான் ஒப்புக்கொண்டபடி எனக்கு ஒன்றும் நன்ருய்த் தெரியாதே? மற்றவிடங்களில் போல் ராஜ கரத்தில் பாசாங்கு செய்ய முடியாது. பிர புக்களாயிருப்பவர்கள் என்னை உள்ளபடி கண்டுபிடித்து விட்டால், சிறையில் அடைத்து விடுவார்கள். ஆனல் இவ்விஷயத்தில் ஒரே வழிதானிருக்கிறது; இந்த வேலை செய்யத் தெரிந்த நாவிதன் ஒருவன் என் சிநேகித னிருக்கிறுன்; அவன் ஒரு வேளை இக் காரியத் தில் முயற்சி செய்வானே என்னமோ?" இப் படி யோஜனை செய்தவளாய் அவள் அந்த நா விதனிடம் சென்ருள். காரியத்தை கை கூட வைக்க வேண்டியதற்காகத் தான் எண்ணியவற் றை யெல்லாம் அவனிடம் சொன்னுள். அதன் மேல் அக்கிழ நாவிதன் போக்கிரியானதால் யோஜித்தான்: "அதிருஷ்டவசத்தால் லாபம் கிடைக்கும் ஸந்தர்ப்பம் இப்பொழுது நமக்கு நேர்ந்திருக்கிறது. புதிதாய் அரசன் மணந்து வந்திருக்கும் பெண்ணை நாம் கஷ்டப்படுத்தக் கூடாது; அவளை (ஜாக்கிரதையாய்) பாதுகாக்க வேண்டும்; ஏனெனில் திவ்விய திருஷ்டியுள்ள அவளுடைய தந்தை எல்லாவற்றையும் உணர் ந்து அரசனிடம் வெளிப்படுத்தி விடுவார். கதளீகர்ப்பையை அரசனிடமிருந்து பிரித்து நாம் மஹாராணியை அண்டி ஜீவித்திருப் போம்; இப்படிப்பட்ட கெட்ட ரஹஸ்ய காரி யங்களுக்கு உதவி செய்யும் அடிமைகளிடம் யஜமானரும் அடிமையாயிருப்பர். பின் ஒரு காலத்தில் அரசனையும் கதளீ கர்ப்பையையும் சேர்த்து வைத்து அரசனும் கதளீகர்ப்பையும் நம்மைப் போற்றி ஆதரிக்கும்படி அவர்களி டம் கதையை வெளிப்படுத்த வேண்டும். இப் படிச் செய்தால் பாபமும் அதிகமில்லை; நமக் கும் நீண்ட ஜீவனோபாயம் ஏற்படும்." இப்படி யோஜனை செய்து கொண்டு நாவிதன் அப்போ லித் துறவியிடம் சொன்னுன்: "அம்மா, இக் காரியத்தை முழுதும் நான் செய்கிறேன்; ஆனல் மருந்துகளைக் கொண்டு அரசனுடைய புது மனைவியைக் கொன்று விடுவது மட்டும் தகாத காரியம். ஒரு ஸமயம் இதைத் தெரிந்து கொண்டு அரசன் நம்மை யெல்லோரையும் கொன்று விடுவான்; மேலும் ஸ்த்ரீயைக் கொன்ற பாபமும் மஹரிஷியின் சாபமும் வந்து சேரும். ஆகையால் கேவலம் புத்தி பலத்தினலேயே அக் கதளீகர்ப்பையை அரச னிடமிருந்து பிரிப்போம்; அதன் மூலம் ராணி, ஸுகமாயிருப்பாள்; நமக்கும் பணம் கிடைக்கும். இதென்ன பெரிய காரியம் என க்கு? என் மதியால் நான் எதைத்தான் ஸாதி க்க மாட்டேன்? என் அறிவை வர்ணிக்கிறேன், கேள்:

"இந்த த்ருடவர்ம மஹாராஜனுக்கு கெட்ட நடத்தையுள்ள தகப்பன் இருந்தான்; அவ னுக்கு க்ஷெளரகார்யம் செய்து கொண்டிருக் கும் ஆளாக இருந்தேன் நான். அவன் ஒரு ஸமயம் திரிந்து கொண்டிருக்கையில் இவ்விடத் தில் என் மனைவியைக் கண்டான். அவள் அழ கியவளாயும் யௌவனப் பருவத்திலுள்ள வளாயு மிருந்ததால் அரசன் மனம் அவளி டம் சென்றது. வேலை யாட்களிடம் கேட்டு அவள் தன் நாவிதனுடைய மனைவி யென்று தெரிந்து கொண்டு 'நாவிதன் என்ன செய்யப் போகிறுன்' என்று என் வீட்டிற்குள் நுழை ந்து அக்கெட்ட அரசன் என் மனைவியைத் தன் இஷ்டப்படி அனுபவித்துவிட்டுச் சென்ருன். விதி வசத்தால் நான் அன்று வீட்டிலில்லாமல் எங்கேயோ வெளியே போயிருந்தேன். மறு நாள் திரும்பிவந்த நான் மனைவி என்னமோ போலிருப்பதைப் பார்த்து, என்ன வென்று கேட்க, அவள் தான் செய்த காரியத்தில் மதிப்புக் கொண்டவள் போல் நடந்தவற்றை நடந்தபடி சொன்னுள். நான் தடுக்க முடியாத வனு யிருக்க, அரசன் நாளடைவில் திமிர் பிடித்தவனுய் தினந்தோறும் என் மனைவியை அனுபவித்து வந்தான். கெட்ட நடத்தையில் பித்துப் பிடித்த பிரபுவுக்கு போகக் கூடியது போகக் கூடாதது என்று ஏது? காற்றுல் வீசப் பட்ட காட்டுத்தீ புல் என்றும் காடு என்றுமா பார்க்கும்? அரசனைத் தடுக்க எனக்கு வழி யில்லாமற் போனதும் நான் மிகவும் கொஞ்ச மாய் சாப்பிட்டுக் கொண்டு அதன் மூலம் இளைத்தவனுய், வயிற்று மந்தம் என்று பாசா ங்கு செய்ய ஆரம்பித்தேன். அப்படி இளைத்த வனுய் அரசனிடம் சென்றேன். "டேய், என்

இப்படி ஆய்விட்டாய் சொல்?'' என்று அரசன் கேட்டான். அவன் நிர்ப்பந்தித்துக்கேட்க, நான் ஏகாந்தத்தில் அரசனிடம் அபயப் பிச்சை கேட்டுக்கொண்டு சொன்னேன்: ''ஸ்வாமி, எனக்கு டாகினி (என்ற ஒரு வகை பூதம்) ஒன்று மனைவியாய் வாய்த்திருக்கிறது. நான் உறங்கும் போது என் நரம்புகளை ஆஸனவாய் மூலம் இழுத்து உறிஞ்சி விட்டு, உள்ளே தள்ளி விடுகிறது. அதனால் நான் இளைத்து விட்டேன். புஷ்டியாய் நான் பெருக்கும்படியான ஆகாரம் நிதமும் எனக்கு எப்படிக் கிடைக்கும்?'' இப்படித் தெரிவிக்கப்பட்ட அரசன் பயம் உண்டானவனாய் யோஜித்தான்: ''அவள் உண்மையில் டாகினியாய் இருப்பவளா? அதனால்தானே அவள் என்னை வசப்படுத்திக் கொண்டாள்? ஆஹாரத்தால் புஷ்டியாயிருக்கும் என்னுடைய நரம்பையும் அவள் உறிஞ்சி விடுவாளோ? யுக்தியாய் நானே இன்றிரவு அவளைத் தெரிந்து கொள்ளுகிறேன்'' என்று யோஜனை செய்து அரசன் எனக்கு உணவை அளிக்கச் செய்தான். அதன் பிறகு வீட்டுக்குச் சென்று என் மனைவிமுன் கண்ணீர் விட்டேன். அவள் 'ஏன்' என்று கேட்க, சொன்னேன்: ''என் அன்பான மனைவி, ஒருவரிடமும் சொல்லக் கூடாது, கேள், சொல்லுகிறேன். இவ்வரசனுக்குப் பின் பக்கத்தில் வஜ்ரத்தின் நுனி போன்ற பற்கள் உண்டாயிருக்கின்றன. அவற்றால் நல்லதாயிருந்தும் என் கத்தி க்ஷௌரம் செய்யும் போது ஒடிந்து போய்விட்டது. இப்படியே ஒவ்வொரு தரமும் என் கத்தி ஒடிந்து போகும். எப்படி எங்கிருந்து நான் ஒவ்வொரு நாளும் புதிது புதிதாய்க் கத்தியைக் கொண்டு வருவேன்? அதனால்தான் அழுகிறேன்; என் வம்சத்தில் என்னுடன் இத் தொழில் ஒழிந்து போகிறது.'' இப்படி நான் சொல்ல, மனைவி அன்றிரவும் வரப்போகும் அரசனுடைய பின் பக்கத்துப் பற்களின் விந்தையை அரசன் தூங்கும் போது பார்த்துவிடுவதென்று மனங் கொண்டாள். உலகம் ஏற்பட்டது முதல் பார்க்கப்படாத அதைப் பொய் யென்று அவள் உணர வில்லை; கெட்டிக்கார ஸ்த்ரீகளும் விடர்களுடைய வர்ணனைகளால் ஏமாற்ற மடைகின்றனர். பிறகு இரவில் வந்து இஷ்டப்படி என் மனைவியை அனுபவித்து விட்டு அரசன் களைப்பினால் போல் நான் சொன்னதை நினைத்துக் கொண்டு தூங்குவது போலப் பாசாங்கு செய்தான். என் மனைவியும் அரசன் தூங்குவதாய் நினைத்து, பற்களைக் கிட்டமெள்ள மெள்ள பின் பக்கத்தில் தன் கையை நீட்டினாள். தன் ஆஸன வாயிடம் அவள்கை வந்ததும் திடீரென எழுந்திருந்து அரசன் ''டாகினி, டாகினி'' என்று அலறிக் கொண்டு பயந்து அவ்விடம் விட்டுச் சென்றான். அதன் மேல் அரசன் பயத்தால் அவளை விட்டு விட்டான். என்னிடமே திருப்தியையடைந்து எனக்கே ஸ்வாதீனமாக என் மனைவி ஆனாள்.

''இப்படி முன் என் மதியைக் கொண்டு அரசனிடமிருந்து நான் என் மனைவியை மீட்டுக் கொண்டேன். பெரியவளே, நீ நினைக்கும் இக் காரியத்தை புத்தியைக் கொண்டு செய்ய வேண்டும். அதை எப்படிச் செய்யப் போகிறேனோ அதைச் சொல்லுகிறேன், கேள்: அந்தப்புரத்திலுள்ள கிழவனொருவனைப் பிடிக்க வேண்டும்; அவன் ரஹஸ்யமாய் அரசனிடம் கதளீகர்ப்பை டாகினீ என்று சொல்ல வேண்டும். காட்டிலிருந்து வந்த கதளீகர்ப்பைக்கு ஸொந்த வேலைக்காரர் ஒருவனும் இல்லை; மற்றவர் எல்லோரையும் பிரித்து விடலாம்; பண ஆசையால் என்னதான் அவர்கள் செய்யமாட்டார்கள்? கேள்வி மூலம் அரசன் கதளீகர்ப்பை டாகினீ என்று பயந்திருக்கையில், இரவில் கதளீகர்ப்பையின் அறையில் நாம் முயற்சிசெய்து கை கால் மாம்ஸத் துண்டுகளை வைக்க வேண்டும். அவற்றை காலையில் கண்டு அரசன் கிழவன் சொன்னது உண்மை என்று தெரிந்து கொண்டு, கதளீகர்ப்பையை துஷ்டை என்று தானே விட்டுவிடுவான். இப்படி சக்களத்தி விலகியதும் மஹாராணி ஸுகமடைவாள்; உன்னை அவள் வெகு மதிப்பாள்; நமக்கு லாபமும் ஏற்படும்.'' இப்படி நாவிதன் சொல்ல, அத்துறவி சரி யென்று சொல்லி மஹாராணியிடம் ஏற்படுத்தியிருப்பதை அப்படியே சொன்னாள். மஹாராணியும் அதன்படி செய்தாள். இந்த சூழ்ச்சியினால் அரசனும் தான் கண்ணாலேயே கதளீகர்ப்பை துஷ்டையென்று கண்டவனாய்

அவளை விலக்கினன். திருப்தியடைந்த மஹாராணி மறைவாய்க் கொடுத்த பொருளை சந்நியாசினி நாவிதனோடுகூட அனுபவித்தாள். அந்த த்ருடவர்ம மஹாராஜனால் கை விடப்பட்ட கதளீகர்ப்பை தனக்கு வந்துசேர்ந்த அபவாதத்தால் தவித்தவளாக அரண்மனையை விட்டு வெளியே போனாள். முன் தான் வந்ததும் முன் தான் விதைத்து வளர்ந்திருந்த கடுகுப் பயிரை அடையாளமாக வுடையதுமான அவ்வழியே தந்தையின் ஆச்ரமத்தை யடைந்தாள். திடீரென அங்கு வந்த கதளீகர்ப்பையைப் பார்த்து அவள் தந்தை மங்கணகமுனிவர் ஒரு நொடிப்போது அவள் நடத்தை தவறி விட்டாளோ என்று பயந்தார். ஆனால் தியானத்தில் நடந்த வற்றை யெல்லாம் தெரிந்து கொண்டு, அவளைத் தேற்றி, அவளிடமுள்ள அன்பினால் தானே அவளை அழைத்துக்கொண்டு அரசனிடம் வந்தார். வணக்கத்துடனிருந்த அரசனிடம் தானே சக்களத்தி தோஷத்தால் மஹாராணி நடத்திய கபட நாடகத்தைத் தெரிவித்தார். அச்சமயம் நாவிதன் தானாகவே வந்து அரசனிம் நடந்ததை நடந்தபடி சொல்லி விட்டு, மேலும் தெரிவித்துக் கொண்டான்: “பிரபோ, இம் முறையில் நான் தேவி கதளீகர்ப்பையைப் பிரித்துவிட்டு, மஹாராணியையும் திருப்தி செய்து, கதளீகர்ப்பையையும் (மஹாராணி செய்யச் சொன்ன) சூன்ய பிரயோகத்தால் ஏற்படக்கூடும் மரணத்திலிருந்தும் என் யுக்தியினால் காப்பாற்றினேன்,” என்று. அதைக் கேட்டதும் முனிவர் சொன்னது உண்மை என்று கண்டு, நம்பிக்கை உண்டாகி, அரசன் கதளீகர்ப்பையை ஏற்றுக் கொண்டான். முனிவரை வழி தொடர்ந்து விட்டு, நாவிதனுக்கும், “இவன் நம்மிடம் பக்தி கொண்டவன்” என்று பொருள்களை தானஞ் செய்தான். பிரபுக்களிடம், அந்தோ, போக்கிரிகள் (எப்படித்) தின்கிறார்கள்!

பிறகு தன் மஹாராணியிடம் பாராமுகமாகி, த்ருடவர்ம மஹாராஜன் மிகவும் திருப்தி யடைந்தவனாய் கதளீகர்ப்பையுடனேயே இருந்தான்.

“உத்தமமான அங்கங்களைப் பெற்ற களிங்கஸேனா! இதுபோல் பொய்யாய்க்கூட சக்களத்திகள் பலவிதமான குற்றங்களைச் சாட்டுவர்; நீயோ கன்னிகை; முகூர்த்தமோ நாள் கழித்தே வரப்போகிறது; எண்ண முடியாதபடி வந்து போகும் தேவர்களும் உன்னை அடைய ஆசைப்படுகின்றனர். ஆகையால் வத்ஸராஜன் ஒருவனுக்கே அர்ப்பணஞ் செய்யப்பட்டதாயும், இவ்வுலகிற்கே ஒற்றை ரத்தினம் போலுமுள்ள உன்னை நீயே இப்பொழுது எல்லோரிடமிருந்தும் காப்பாற்றிக் கொள். உன் உயர்வே உனக்குப் பகை. நான் உன் ஸமீபம் வந்து கொண்டிருக்க மாட்டேன்; நீ உன் கணவன் வீட்டில் இருக்கிறாயல்லவா? நல்ல ஸ்த்ரீகள் தம் தோழியருடைய கணவரின் வீட்டிற்குப் போகமாட்டார்கள். அழகிய சரீரமுள்ளவளே, கணவனும் என்னைத் தடுத்திருக்கிறார். உன்னிடமுள்ள நட்பு மிகையால் நான் மறைவாய் இவ்விடம் வருவதும் முடியாது; என் கணவன் திவ்யதிருஷ்டி யுள்ளவராததால் நான் வருவதை எப்படியாவது தெரிந்து கொள்வார்; இப்பொழுது அவரிடம் அனுமதி கேட்டுக் கொண்டு நான் வந்திருக்கிறேன். இங்கு இப்பொழுது நான் செய்யக் கூடிய காரியம் ஒன்று மில்லை. ஆகையால், தோழி, நான் என் அகத்திற்குப்போகிறேன். மறுபடியும் என் கணவன் அனுமதித்தால் வெட்கத்தை விட்டு இங்கு வருவேன்.”

இப்படிக் கண்ணீரால் அலம்பப்பட்ட முகத்தோடிருக்கும் அந்த ராஜகுமாரியை தேற்றி விட்டு, அஸ்தமன வேளையில் அஸுரபுத்திரி ஸோமப்பிரபை வானவழியாகவே தன்னிருப்பிடம் சென்றாள்.

ஆறும் அலை முற்றிற்று.

ஸ்ரீராமசரிதம்

(விசாரதன்)

பல நூற்றுண்டுகளுக்கு முன் நம் தமிழ் நாட்டிலே வாழ்ந்த வைஷ்ணவப் பெரியார் ஒருவர் ஒரு நாள் தம்முடைய வீட்டுப் புறக்கடையிலிருந்த குட்டிச்சுவரின் மறைவிலே தியானத்தில் அமர்ந்து தமது இதயகமலத்திலே வீற்றிருந்த பகவானை ஸாக்ஷாத்காரஞ் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவரைக் காண அவரினும் பரமபாகவதரான இன்னொரு பெரியார் குட்டிச்சுவருக்கு வெளிப்புறத்தினின்றும் வந்துகொண்டிருந்தார். தியானத்தில் அமர்ந்திருந்த பெரியாரின் இதயகமலத்துப் பகவானுடைய தாமரைக் கண்கள் குட்டிச்சுவருக்கு அப்பால் வந்துகொண்டிருந்த பாகவதரை நாடவே தியானஞ்செய்துகொண்டிருந்த பெரியார் தம்மினும் இனியரான பக்தர் வருவதைக்காண விரும்பியே பகவானுடைய கடைக்கண் நோக்கம் குட்டிச்சுவரைப் பார்த்துத் திரும்பியது என்று கண்டு தியானத்தை நீக்கித் தாம் அக்குட்டிச்சுவர்ப் பக்கமாக நோக்கினாராம். இக்கதை ஈடு என்னும் வியாக்யானத்தில் உள்ளது.

இக்கதையிலே கூறிய வைஷ்ணவப் பெரியார் போலவே, ஸ்ரீராமனை தியான யோகத்தால் தங்கள் மனதிலே கண்டு ஸ்ரீராம சரிதம் முழுவதையும் யோக பலத்தாலே ஸாக்ஷாத்கரித்த பெரியார் பலரை ஸ்ரீவால்மீகி ராமாயண மூலமாகவே நாம் அறிகிறோம்.

தபோபலத்தாலே பகவானை ஸாக்ஷாத்கரித்து, ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட வஸ்து பரந்தாமனே என்பதையும் அவனே ஸ்ரீராமபிரானாக அவதரித்துள்ளான் என்பதையும் தம்முடைய ஸ்வாத்தியாய பூர்த்தியாலே உணர்ந்த நாரதபகவானை நோக்கி யன்றோ ஆதிகவி துர்லபமான பல குணங்களையுடைய குணவானைப் பற்றி வினவினார்? அவர் வினவியதற்கு "இக்ஷ்வாகு வமிசத்தில் உதித்த இராமன் நீ சொன்ன குணங்கள் அனைத்தும் உடையவன்" என்று விடை கூறுவதோடு அமையாது ஸம்க்ஷேபமாக ஸ்ரீராம சரிதத்தை நாரத பகவான் சொன்னதற்குக் காரணம் வால்மீகி வினவியதுமே நாரதபகவான் தம்முடைய யோக திருஷ்டியாலே ராமசரிதம் முழுவதையும் கண்டறிந்தது பரமானந்த மடைந்ததேயாகும்.

நாரத பகவானைப் பின்பற்றிய வால்மீகி முனிவரும் தர்ப்பைகளை கிழக்கு முகமாகப் பரப்பி அவற்றில் பகவானைத் தியானித்து அஞ்சலி செய்த வண்ணம் நின்றுகொண்டு தருமயோகத்தால் ஸ்ரீராமன் லக்ஷ்மணன் சீதை தசரதர் முதலானோர்க்கு நிகழ்ந்ததையெல்லாம்—ஸ்ரீராமன் முறுவல் பூத்தது திருவாய் மலர்ந்தது நடந்தது செய்தது—யாவையும் உள்ளங்கை நெல்லிக் கனியைப் போல வியக்தமாய் தம் நெஞ்சினால் நோக்கிக் கண்டார். தாம் கண்டது நாரதர் கூறியதை ஒத்திருப்பதைக்கண்டு மகிழ்ந்து நாரதர் கூறியதையே விரித்து ஒரு காவியமாகச் செய்தார்.

வாமனாவதாரஞ் செய்த இடமாகிய சித்தாசிரமத்திலே தவஞ்செய்து பிரம்மரிஷியான விசுவாமித்திர முனிவர் பகவானுடைய ராமாவதாரத்தை தமது ஞானக்கண்களால் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தார். ஸ்ரீராமனை திருமணக்கோலத்திலே ஞானக்கண்ணாலே மட்டும் காண்பது போதாது, பகவானைக்காண விடாய்க்கும் புறக்கண்ணாலும் காணவேண்டும் என்றே யாக ஸம்ரக்ஷணத்தை ஒரு வியாஜமாகக் கொண்டு தசரதமன்னனிடம் ஸ்ரீராமனை யாசித்துப் பெறச் சென்றார். திருமணமான பின்பு நிகழ்ந்த செய்திகளையும் இம்முனிவர் இமயாசலத்தில் தமது ஆசிரமத்திலிருந்து கொண்டே யோகக்கண்களால் கண்டு களித்தார் என்று உறுதி கூறலாம்படி யுள்ளது இம்முனிவர் பெற்ற ராமசரிதானுபவம்.

இம் முனிவரைப் போலவே அகஸ்திய பகவானும் ராமஜனனம் முதற்கொண்டு ஸ்ரீராம தரிசனத்தை எதிர் பார்த்தவண்ணமாய் ராம சரிதங்களை யோகக் கண்களால் கண்டு கொண்டிருந்தவர். ஸ்ரீராமன் தண்டகாரணியம் புகுந்து பத்து வருஷமாயும் தம்மைக் காண வரவில்லையே என்று ஏங்கிய மனதோடு இவர் இருப்பதை அறிந்தே ஸ்ரீராமனும் ஸுதீக்ஷண முனிவரை அகஸ்தியாசிரமம் எங்கு உள்ளது?'' என்று வினவியதும், அம்முனிவரும் "அகஸ்திய மாமுனிவரைக்காண விரும்பினையாயின் இன்று விடை கொள்வாயாக'' என்று வழி காட்டியனுப்பியதும்.

ஸ்ரீராமாவதார சரிதத்தை யெல்லாம் ஒன்று விடாது யோகதிருஷ்டியிற் கண்டு ஆனந்தித்தவர்களுள் பரத்வாஜமுனிவரும் ஒருவர். ஸ்ரீராமன் தம்முடைய ஆசிரமத்திற்கு வந்தபோது உபசரித்து, "காகுத்தனே! உன்னைக் கண்ணுற் காணவேண்டு மென்று எனக்கு வெகுநாட்களாக ஆசை இவ்வளவு காலமாயிற்று உன்னைக் காண்பதற்கு நிகழ்ந்தையெல்லாம் நான் அறிந்து கொண்டேன்'' என்றார். தமக்கு சதா தரிசனம் கொடுத்துக்கொண்டு அங்கேயே இருக்க வேண்டுமென்று பாரத்வாஜ முனிவர் செய்த பிரார்த்தனை அங்கிகரிக்கப்படாவிட்டாலும் அம் முனிவரர் ஸ்ரீராமனுடைய இளமுறுவலையும் நடையையும் இன்மொழிகளையும் மற்றும் எல்லா வற்றையுமே தமது மனக் கண்ணாலே கண்டு கொண்டிருந்தார். இராவண வதமான பின் ஸ்ரீராமசந்திரன் இவருடைய ஆசிரமத்திற்கு வந்தபோது நிகழ்ந்த ஸம்பாஷணையினின்றும் இவ்வுண்மை வெளிப்படுகின்றது. கைகேயியின் சொற் கொண்டு நீ முன்பு சகல போகங்களையும் இராச்சியத்தையும் துறந்து தம்பியோடும் தருமபத்தினியோடும் கால் நடையாய் காட்டுக்குச் செல்வதைக் கண்டபோது என் நெஞ்சம் இடிந்து குலைந்தது. இப்பொழுது பகைவரைக் கொன்று வெற்றி மாலை சூடி பந்துமித்திரர்கள் புடை சூழ நீ வருவதைக் காண என் மனம் பரமப்பிரீதியடைகின்றது இராகவா! முனிவர்களை இரட்சிப்பதற்காக நீ ஜனஸ்தானத்திலே கடும்போர் புரிந்து வெற்றி பெற்றது, உன் தூய மனைவி இராவணனாலே அபகரிக்கப் பட்ட மாரீசதரிசனம், சீதையின் மயக்கம், கபந்த தரிசனம், பம்பா தரிசனம், சுக்கிரீவன் நட்பு, வாலிவதம், சீதையை நாடவிட்டது, அனுமானின் அருஞ் செயல், சேது பந்தனம் லங்காதஹனம், ராவண வதம், தேவர்களுடைய ஸமாகமம், நீ பெற்ற வரம், ஆகியவற்றை யெல்லாம்—உனக்கு நேர்ந்த சகல சுக துக்கங்களை[illegible]ன் என் தபோ மகிமையால் கண்டு கொண்டேன். என்று இம் முனிவர் தாமே தாம் பெற்ற பேற்றினை எடுத்துக் கூறி மகிழ்ச்சி யடைகிறார் அல்லவா?

ஸ்ரீராமாவதார ஸமகாலத்திலே வாழும் பெரும் பேறு பெற்ற இம் முனிவர்கள் மட்டுமே யன்றி இதர பக்தர்களும் மனதிலே நினைந்து அனன்னிய பக்தியாலே ஸ்ரீராம சரிதம் முழுவதையும் யோகமகிமையாலே ஸாக்ஷாத்கரிக்க இயலும். ஸாக்ஷாத் கரித்து பரமானந்தம் அடைவதற்கு இயலாதவர்க்கும் உதவவேண்டும் என்பதே ஆதிகவி இராமாயணம் பாடியதின் நோக்கம் என்பது குசலவர்களைக் கொண்டு முனிவர் சூழாங்களுக்கு முன் தமது காவியத்தைப் பாடுவித்து, அவர்களால் நாம் யோகஸாக்ஷாத்காரத்தால் வெகு காலத்திற்கு முன் கண்டதை காவிய கதியாலேயே பிரத்தியக்ஷமாகக் காட்டும் "இது என்னே!'' என்று வியப்புடன் அங்கீகரிக்கப் பெற்றதாய் விளங்குகிறது.

புதுக் கற்பனைகள்.

கடற் காட்சி.

தமிழ் வித்துவான், கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர்,

நீலக் கடலே! நீலக் கடலே!
உலகெலாஞ் சூழ்ந்த வொருபெருங் கடலே!
ஓவா தொலிக்கு முறுதிரைக் கடலே!
மாயோ னுருப்போல் மகிழ் தருங் கடலே!
நீரின் நிலையாய் நிற்குங் கடலே!

காண்போர் கருத்தினைக் கவர்தருங் காட்சியை;
அவரிரு விழிக்கு மருவிருந் தாகுவை;
ஒருகாற் காணினு முன்னுரு வவர்கணில்
புகைப்படம் பிடித்த புதுமையின் நிற்குமே!
உற்று நோக்குவோர்க் கொருபால் மகிழ்வும்,

ஒருபா லச்சமு முற்றிடச் செய்குவை!
வானுற வோங்கிய வரையினைக் காணுவோர்
அகலமு முயரமு மளந்துபின் னதன்பால்
மன்னிடு மணியும் பொன்னு மெடுப்பர்;
அதனிடன் தெரியா தகற்றினு மகழ்குவர்;

ஆனால்,
உன்னிலை கண்டோ ருலகினி லுளரோ?
உன்னகட் டுறையு முறைபெறு மணிகள்
எடுத்தற் கெளியதோ! இயம்புதற் கொணுமோ!
கப்ப லேறிக் கடந்திடு மவரும்

ஒருபா லன்றி யுன்னள வெல்லாஞ்
செல்குத லில்லாச் சிறுமையு மறிகுவோம்!
அளக்க லாகா வாழ முடையை!
மலைபுரை யுயிர்கள் மன்னிய வுன்பால்
ஒருபொழு தோய்வு முறாமற் கலக்கினும்,

கலங்குத லில்லாக் கண்ணிய வுருவினை!
கணக்கில கலங்க ளுன்மேற் கடவினும்,
கணக்கில குண்டுக ளெறியினுங் காட்டிட
ஊறென லறியா வுயர்நீர் உடலினை!
எண்ணி லுலக மெழுந்திடச் செய்யும்

ஆற்ற லுடையைய தனா லுன்னைத்
திசைமா முகனெனச் செப்பினென் னிழுக்கே?
உன்னுவி தந்துநீ யுலகினை யூட்டுதல்
காணலு முன்னைக் கண்ணனே யென்று
கழறினு மதிலோர் கசடில தன்றே!

ஊழியின் முடிவி னுலகம் யாவையும்
பொங்கி யெழுந்து பொன்றிடச் செய்யும்
குணத்தினை யதனாற் குன்றவில் லெடுத்த
கண்ணுத லென்றுனைக் கழறலு மாமே!
எண்ணில நதிக ளிடைவிடாப் பெருக்கின்

நீரினைக் கொணர்ந்து நிரப்பினு மோயாப்
பெருமழை பெய்யினு மமைதியின் நீயும்
முழுமுதற் கடவுள் முன்னாள் விதித்த
வரையினைக் கடவா வகையில் வாழ்க்கையை!
நீசினந் தெழினே நிலமிசை யுள்ளோர்

கரையிட வொண்ணுமோ! கழறவும் போமோ?
இயற்கை யன்னையின் இயல்பறிந் தியல்குவை
அளக்க லாகா வளவும் பொருளும்
துளக்க லாகாத் தோற்றமு முடையைநீ
அமைதியின் விளங்கிடு மமையத்து நோக்கின்,

அறிவனை யறிய வைம்பொறி யடக்கித்
தவம்புரி முனிவரின், தன்மையுங் காட்டுமே!
அதான்று;
சிற்றலை யென்னுஞ் சிறகாம் நீட்டி நீ
சிறகச் சிறகச் சேர்ந்திடுங் காட்சி

கரையிற் கூடியோர் கழிமகிழ் வெய்த
அவரொடு மாட வருவதை மானுமே!
அதான்று;
தன்னிரை யதன்மேற் றாவுதற் கெண்ணுந்
தனிப்பெருஞ் சீயந் தன்னிலை தேற

ஓர் நிலை யிருந்துநேர் உற்றுநோக் குதல்போல்
உளதென உரைக்கினு முரைக்க லாமே!
புயலிலுன் றோற்றம் புகலப் போமோ!
நீர்மலை நிகர நிரை நிரை யலைகள்
ஓங்கி யெழுந்து மோதியு முறாய்ந்தும்

ஒன்றுட னொன்று யுரைத்திட வரிதாய்
மோதியு முடைந்தும், முன்புறக் கூடித்
திடுந்திடு மென்றே திடுக்கிடக் குதித்தும்,
மடிந்தும் விழுந்தும், மடமட வென்றே
கரைகடந் தெழுந்துங் கதறிப் புரண்டும்,

நுரையெனும் பற்களை நொறில்படக் கடித்தும்,
துளியெனும் பொறிகளைத் தூவிபற் றிசையும்,
கொந்தளிப் புடனே கொதித்துநீ யெழுதலைக்
கூறப் புகினுங் கூசுமே யுள்ளம்!
கண்களாற் கண்டவர் கதறுதல் செய்யக்

கருத்தினில் மாறாக் கடும்பயங் கொள்ளக்
கடும்போர் நிகழுங் களமென லாமோ!
பயங்கரப் பேய்கள் பதம் பெயர்த் தாடும்
காணற் கரியவோர் கடுவெளி யாமோ!
காலன் படையுடன் காசினி மீதிற்

கடுகடுத் தெழுந்த காலமி தாமோ!
என்றுபல் லெண்ண மிதயத் தெழுமே!
உன்றன் சீற்ற முலகினை யழித்தும்
ஓயுந் தன்மை யுளதென வெண்ணுமோ!
இன்ன தோற்றத் தினையை யெனினும்

உலகெலாங் களிக்க உவாமதி யெழுதலும்,
தண்ணிய நிலவுன் தனிப்பே ருடல்மேல்
முகிலிடை மறைந்து முறை முறை யெழுந்து
படுந்தொறும் படுந்தொறும் பளிச் பளிச் சென்னல்
மின்விளக் கதனை மேதகு மாடியின்

படுமா பதித்துப் பிரதி பலித்துக்
காட்டு மொளியின் கவினுறு காட்சி
எழுதப் போமோ! எழுதுவா ருளரோ!
திரைக்கர மெடுத்துத் திசை திசை நீட்டி
அந்தரத் தெழுதண் ணம்புலி தன்னை

ஒளிர்ந்துன் காட்டியு முறுகளி பொங்க
அங்கு மிங்கு மாடிடும் பெருமை
உன்றனைக் கன்றி யொருவர்க் குளதோ!
பகலவன் சுடுகரம் பரப்பி வெயிலெனும்
பெட்டியைத் திறந்து பெருந்திசை யெழுதலைக்

கண்டவுன் னுள்ளங் கழிதளர் வெய்த
ஆட்டுவோன் கரத்தில் அகல விரித்த
பெட்டியைக் காணும் பெருந்துயர்ப் பாம்பென
அடங்கி யொடுங்கி யார வாரம்
ஏது மின்றி யிருந்திடு குணத்தினை!

எவ்வெப் பொழுதி லெவ்வெவர் நோக்கினும்
அவ்வப் பொழுதி லரியவோர் காட்சி
அவ்வவர்க் களிக்கும் அரியவோ ராற்றலை!
எண்ணி லுயிர்கட் கிடமாய் மேவினை;
தண்டுளி கெழுமிய தகைசால் மென்கால்

உன்னிட மெழுந்தெம் முடல்மேற் படுந்தொறும்
உண்டாம் மகிழ்ச்சிக் கோரள வுண்டோ!
கடலின் காற்றாற் கடும்பிணி கணக்கில
மாய்த லுண்டென மருத்துவர் கூறுவர்;
உணவுக் குயிராம் உப்பெனும் பண்டம்

நீயளித் திலையேல் நிலம்படு பாடென்?
ஆண்டவன் படைத்த அரும்பே ருலகில்
அனைவர்க்கு மவனருஞ் சக்தியின் பெருமை
தெரியக் காட்டுந் தெளிகடால்!
உரையி லடங்குமோ உன்புகழ் தானே!

பிரதாபஸிம்மர்.

(K. வரதாச்சாரி, B., A., B., L.,)

(707—ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 3. காட்சி 1.

(ஹல்தீகாட் போர்க்களம். பிரதாபஸிம்மரும் ராஜபுத்திரத் தலைவர்களும். காலை)

பிரதாப :—ஸஹோதரர்களே! இன்று யுத்தம்: இத்தனை நாட்களாக நாம் பயின்று வந்த பயிற்சியும் கற்றுவந்த வித்தையும் இன்று பயனுறவேண்டும். முகலாயர்கள் சேனை நம் சேனையைவிட எண்ணிக்கையில் சிறந்திருக்கலாம். வீரத்தில் சிறந்தவர் நாமே. ராஜபுத்திரர்கள் நாம். ஆம், நம்மவர்களை, நம் அரச குலத்தைச் சேர்ந்த சிலரே, எதிரியுடன் சேர்ந்துகொண்டு விட்டனர். என் உடன் பிறந்தோனே முகலாயர்களைத் தூண்டிவிடுகிறான். என் ஸஹோதரியின் புதல்வனே முகலாய சேனையை நடத்துகிறான். பிராத்ருத்துரோஹம், தேசத்துரோஹம்! நினைத்தாலே கண்ணீர் பொங்குகிறது, தொண்டை உலர்கிறது, தலை குனிகிறது...ஆயினும் என்ன? நாம் வீரர்கள் அல்லவா? தோல்வியறியாத சூரர்கள் அல்லவா? ஸாலூம்பர்பதி நம்முடனே நிற்கிறார். ஜாலாபதி நம்முடனே இருக்கிறார். சண்டாவின்புதல்வர் நம்முடனே நிற்கிறார். புத்தாவின் புத்திரன் நம்முடனே இருக்கிறார். வெற்றி நமதே, நிச்சயம். ஆம். நியாயம் நம் பக்கலிலே நிற்கிறது. தர்மம் நம் கக்ஷியிலேயே. ராஜபுத்திர குலதேவதை நம்முடனேயே இருக்கிறாள். கவலையேன்? தேசத்துக்காகவும் சுதந்திரத்துக்காகவும் தொடங்கிய போர் இது. நம் குலமகளிரைக் காக்க, செய்யும் யுத்தமிது. இவையாவையும் நம்மிடமிருந்து பறித்துக்கொள்ள வந்திருக்கின்றனர் நம் பகைவர்கள்; துராக்ருதமாய் எதிர்த்து வந்திருக்கின்றனர். யுத்தம் ,செய்யவேண்டியது நமது கடமையாயிற்று. வெற்றியோ தோல்வியோ நமது கடமையை நாம் செய்வோம்; உலகம் கண்டு வியக்கச் செய்வோம், முகலாய சிங்காதனம் சிதறச்செய்வோம், சரித்திரத்தில் தங்க எழுத்துக்களால் பதியச் செய்வோம்!

எல்லோரும் :—ஜேய், ராணாபிரதாபஸிம்ஹகி ஜேய்!

பிரதாப :—ராமஸிம்மரே! ஜயஸிம்மரே; பேதனூர் ஜயமல்லரின் புத்திரர்கள் நீங்கள்!; சித்தூரைக்காத்த ஜயமல்லரின் புத்திரர்கள்! ; வஞ்சகமாக அக்பரால் சதி செய்யப்பட்ட ஜயமல்லரின் புத்திரர்கள் நீங்கள்!...ஸங்கிராமஸிம்மரே! ஸிஸோதிய வீரரே! 16 வயதிலே, மனைவியும் தாயும் தானுமாக சித்தூரைக்காக்கப் பிராணனை விட்ட புத்தாவின் வம்சத்தவர் நீர்! அவர்கள் கீர்த்தி மங்குவதா?...ஸாலூம்பர் கோவிந்த ஸிம்மரே! சந்தாவத் ரோஹிதாஸரே! ஜாலாபதி மானா! உங்கள் முன்னோர்கள் போராடிப் பெற்று, சேமித்த இச்சுதந்திரம், பழுதாகாமல் பின்னோர்களுக் களிப்பீர்களா? அவர்கள் நாமத்தை ஜபித்துக்கொண்டே, கீர்த்தியைப் பாடிக்கொண்டே, குதிப்போம் இச் சமராக்கினியில்! வெற்றி நிச்சயம். வாருங்கள்.

எல்லோரும் :—ஜேய், ராணாபிரதாப ஸிம்ஹகி ஜேய்!

(ரணபேரி முழங்க முன்செல்கின்றனர்)

காட்சி 2

(ஹல்தீகாட் யுத்தகளம். வேறு இடம். காலை. ஸலீமும் மஹாபத்கானும்)

மஹாபத் :—அதோ, அவர்தான் பிரதாபஸிம்மர்.

ஸலீம் :—எங்கே, எங்கே?

மஹாபத் :—அதோ, சிவப்புக் கொடியின் கீழ், கருப்புக் குதிரைமேல். அவர்தான். எவ்வளவு கம்பீரமான தோற்றம் பாருங்கள்? அகன்ற மார்பும் ஒளி வீசும் முகமும். ஆஹா! வீரமூர்த்தி அவரே; உறுவிய வாள் கையில், கூரிய வேல் முதுகில்!

ஸலீம் :—அவர் அருகில் இருப்பது ?

மஹாபத் :—வலது புறம் ஜாலாவட் மானா; இடது புறம் ஸாலூம்பூர் கோவிந்த ஸிம்ஹர்.

ஸலீம் :—பெருமிதம் மேலிட்டு நம்மைத் தாக்கி வருகிறார்கள். நாமோ கல்லாகச் சமைந்து இங்கேயே வேர் ஊன்றி விட்டோம். நாமும் முன் சென்று தாக்குவோம்.

மஹாபத் :—கூடாது. மானஸிம்ஹர் கட்டளை.

ஸலீம் :—எனக்குமா அவர் கட்டளை? கொண்டுவா, என் குதிரைப் படையை. இதோ புறப்பட்டோம்.

மஹாபத் :—நிதானியுங்கள். ஆத்திரப்பட்டு அல்லலுக்குள்ளாக வேண்டாம். கவசம் பூண்டு வாட்கள் ஏந்தும் தங்கள் போர் யானையும், அவர் குதிரை 'சேடக்கு'க்கு முன் நிற்காது.

ஸலீம் :—எல்லாம் நான் அறிவேன், நான் கூறியபடி நீ செய்தால் போதும். போய் அழைத்துவா...போகமாட்டாயா? நான் மண் பொம்மையா? என் உத்தரவை நீயுமா மதிக்கமாட்டாய்?

மஹாபத் :—இதோ போகிறேன். போர் புக்கு முழங்கும் அப்பிரதாபரைத் தங்கள் 5000 குதிரை வீரர்களா பொருதுப் புகழ் ஈட்டப்போகின்றனர்? பிறகு உங்கள் இஷ்டம்!

(போகிறார்)

காட்சி 3.

(ஹல்திகாட் யுத்தகளம். வேறு ஓர் பாகம். மாலை. வென்றுவரும் பிரதாப ஸிம்மரும் ஸேனைத்தலைவர்களும்)

பிரதாப :—எங்கே மானஸிம்மர்? மானஸிம்மர் எங்கே!

மானா :—அவர் தன் கூடாரத்துக்குள் இருப்பார். உங்களைப்போல் சேனையின் முன் அணியிலா நிற்பார்? நான் சொல்வதைச் சற்றுக் கேளுங்கள். உங்கள் முகுடத்தை என்னிடம் கொடுங்கள்.

பிரதாப :—ஏன்? எதற்காக?

மானா :—இதனால் யாவரும் உங்களை எளிதில் அறிந்துகொண்டு விடுகின்றனர். துப்பாக்கிகளும் ஈட்டிகளும் உங்களையே நோக்குகின்றன.

பிரதாப :—அதற்காக ஒளிந்து மறைந்து உயிர்வாழவேண்டு மென்கிறாயோ? சே! வாருங்கள் முன்னால். மானஸிம்மர் கூடாரத்துக்குள் நுழைவோம். நம்மைத் தடுக்க வல்லவன் எவன், பார்ப்போம். மஹாபத்கானோ ஸலீமோ வரட்டும்!

மானா :—ராணா!

பிரதாப :—இதோ, வருவது ஸலீமல்லவா?

மானா :—ஆம், அவரே. நேற்று உங்கள் ஈட்டியினின்றும் தப்பினார். 'சேடக்'கின் முன் கால் குளம்புகளைத் தன் மஸ்தகத்தில் தாங்கி பின்னிட்டோடிய போர்யானை அளித்த பிச்சையால் உயிர்பெற்று, இன்று உங்கள் வாளுக்கு இரையாக வேண்டி வருகிறார்!

(படைவீரர்கள் சூழ உருவிய கத்தியுடன் ஸலீம் வருகிறார்)

ஸலீம் :—ஸம பூமியில் காட்டும் உம் திறனை பார்ப்போம் உம் வாள் வலியை!

பிரதாப :—ஓ! தடு இதை! (இருவரும் யுத்தம் செய்கின்றனர். ஸலீம் பின் வாங்குகிறார். ஓர் பெரிய படையுடன் மஹாபத்கான் வந்து சேர்கிறார். நான்குபுறமும் பிரதாபரை வளைத்துக்கொள்கிறார், ஸலீம் தப்பி ஓடுகிறார்.)

பிரதாப :—யார்? குலத்துரோஹ மஹாபத்! என் கண்கள் உன்னைப் பார்க்க மறுக்கின்றன. (கண்ணை மூடிக்கொள்கிறார்),

மஹாபத் :—ஏனப்படி? என்னைத்தேடித் தானே வந்தீர்கள். தடுங்கள் இதை; பார்ப்போம்!

(பிரதாப ஸிம்மர் மீது பாய்கிறார். பின்புறமிருந்து வேறு சில முகலாய வீரர்கள் பிரதாப ஸிம்மரையே தாக்குகின்றனர். ஏக காலத்தில் எல்லோருடனும் போர் புரிந்து பிரதாபஸிம்மர் களைத்து விடுகிறார். மானா காக்க வருகிறார், காயங்களை ஏற்கிறார். குத்துண்டு விழுகிறார்.)

மானா :—இனி இயலாது! விழுந்து விட்டேன்.

பிரதாப :—மானுவா விழுவது!

மானு :—பாதகமில்லை. நான் போகிறேன். இனியாவது தாங்கள் திரும்பிவிடக் கூடாதா? இவ்வளவு செய்ததே போதும். அவமானமில்லை. திரும்புங்கள். படைமேல் படையாக, பீரங்கிகள் வந்துகொண்டிருக்கின்றன. திரும்புங்கள்.

பிரதாப :—உனக்குத்தான் இறக்கத் தெரியுமோ? எனக்கும் தெரியும். வரட்டும், வேண்டியமட்டில் பீரங்கிகள்.

(மஹாபத்கான் மீது சீறி விழுகிறார். மஹாபத்கான் பின்னிடுகிறார். பிரதாபஸிம்மர் அவரைத் துரத்திச் செல்கிறார். பிணக்குவியல்களில் கால் இடறி விழுகிறார். மஹாபத்கான் அச்சமயம் அவர்மீது பாய்ந்து தலையைக் கொய்ய முற்படுகிறார். அதற்குள் வீரர்கள் சூழ கோவிந்த ஸிம்மர் வந்து சேருகிறார்)

மானு :—நல்ல வேளையில் வந்தீர். ராணுவைச் சூழ்ந்து கொள்ளுங்கள். கத்திக் காயமும் துப்பாக்கிக் குண்டுகளும் ஏற்றுச் சோர்ந்து கிடக்கிறார். காப்பாற்றிக் கொள்ளும், நம் குலவிளக்கை.

(மஹாபத்கானும் கோவிந்த ஸிம்மரும் போர் புரிகிறார்கள். மஹாபத்கான் பின்னிடுகிறார். கோவிந்த ஸிம்மர் துரத்திக்கொண்டே செல்கிறார். பிரதாப ஸிம்மர் கண் விழித்து எழுந்திருக்க முயல்கிறார். முடியாமல் கீழே சாய்கிறார்.)

மானு :—ராணு! வெல்வோம் என்று ஆசை இனி இல்லை. நமது சைனியம் துப்பாக்கிகளுக்கு இரையாகி விட்டது. இனித் திரும்ப வேண்டியதே.

பிரதாப :—திரும்புவதா? பிரதாப ஸிம்மனு திரும்புவது? (தள்ளாடி எழுந்து) கொடு, என் வாளை.

மானு :—வேண்டாம். ராணு! பீரங்கிகளுக்கு முன்பா புஜபலபராக்கிரமம்! போதும்! திரும்புங்கள். அதோ மற்றொரு பீரங்கிப் படை வருவதற்கு முன் திரும்புங்கள்.

பிரதாப :—எங்கே என் வாள்? (ஒடிந்து கிடந்த ஓர் வாளைக் கைக்கொண்டு). பார்ப்போம் பீரங்கிகளை !

(போகிறார்)

மானு :—என்ன பைத்தியமிது? ஒருவராக இவ்வளவு திரள்களையும் எப்படித் தடுக்கப் போகிறார்! ஈசுவரா! இது தான் உன் திருவுள்ளமோ ?

காட்சி 4.

(ஹல்தீகாட் யுத்தகளம். வேறு ஓர் பாகம் சக்தஸிம்மர் கூடாரம். சாயங்காலம்.)

சக்தஸிம்மர் :—(தனக்குள்) பயங்கரமான யுத்தம். வெறிகொண்டு கர்ஜிக்கின்றன இப்பீரங்கிகள். எண்ணற்ற முகலாயப் படைகளை 20,000 ராஜபுத்திரர்கள் எதிர்க்கின்றனர்; வீழ்ந்து மடிகின்றனர்; துப்பாக்கிகளுக்கு இரை; அவ்வளவுதான்! ஆயினும், என்னே இப்பிரதாபரின் பராக்கிரமம்! என்ன துணிவு! என்ன உறுதி! தன்யர் நீரே! கண்டு கொண்டேன் என் கண்களால். உம் திறனும் தீரமும் கண்டறிந்தேன். உம்மேன்மையை உணர்ந்தவர் நீரே! உத்தமர் நீரே! கண்கள் நீர்மல்க, நெஞ்சம் குழைய உம்மை ஆலிங்கனம் செய்துகொள்ள வேண்டும், பக்தி பெருக உம் பாதங்களில் பணிய வேண்டும். வீரப்பிரதாபரே! இருதிறத்திலும் உம்மைப் புகழாத வீரனில்லை. உம் மாண்பைக்கண்டு மகிழாத முகலாயனில்லை. கேட்கக் கேட்க எனக்கு அபிமானம் பொங்குகிறது, கர்வம் கொழிக்கிறது. இவ்வுலகம் தொழுதேத்தும் புண்ணியன், என் அண்ணன் அல்லவா? இராஜ புத்திர குலவிளக்கின் இளவல் நான்! அவர் உடன்பிறந்தோன் என்பதே எனக்கு போதும். ஆயினும், நானே துவம்ஸம் செய்து விட்டேனே இவ்வழகிய பூமியை; அன்னியர்களைக் கொண்டு அழித்தேன்; அதமன் நான். பிழைக்கு வருந்துவதாலும் இனி, நாணிக்கவிழ்வதாலும் இனி ஆவதென்ன? போயிற்று இப்புண்ணிய பூமி! போயிற்று.

(மஹாபத்கான் வருகிறார்)

சக்த :—போர் இன்னும் நடந்து கொண்டு தான் இருக்கிறதா?

மஹாபத் :—நல்ல கேள்வி! யுத்தம் மும்முரமாய் நடந்து கொண்டிருக்க, நீங்கள் படைவீட்டிலே விழுந்து கிடக்கின்றீர்களே, இதுதான் தங்கள் வீரமோ?

சக்த :—என்னைக் குறை கூறவோ கேள்வி கேட்கவோ உங்கள் ஒருவருக்கும் அதிகாரமில்லை. நானாக வந்து சேர்ந்து கொண்டேன், விலகியும் கொள்வேன் விரும்பினால்; உங்கள் அடிமை நான் அல்லவே!

மஹாபத் :—அடிமையன்று? இவ்வளவு நாட்களும் பாதுஷாவைப் போற்றினீர், புகழ்ந்தீர், குறை இரந்தீர். இன்று போர் முனையில்?

சக்த :—என்ன, என்ன சொன்னாய்? நாக்கை அடக்கியே பேசு.

மஹாபத் :—ஏன்? என்ன செய்து விடுவீர்?

சக்த :—எனக்கே தெரியாது. அலையெறிந்தாடுங் கடலென என் சீற்றங் கணப்பொழுதில் கரை கடக்கும்.

மஹாபத் :—போதுமே! அதுதான் தெரிந்து விட்டதே; வாய்ச் சொல்லில் வீரர்தான்!

சக்த :—நில்! ஆனால், கைச் செயல் வீரத்தையும் காண்! (சக்தஸிம்மர் கத்தியை உருவி மஹாபத்கானை எதிர்க்கிறார்.)

மஹாபத் :—தயார்; வாருங்கள் (கத்தியை உருவிப் போருக்கு ஆயத்தமாகிறார்கள்.)

(திரைக்குப் பின்னால் "பிரதாபனைத் தொடருங்கள்' அவர் தலையை கொய்து வாருங்கள்" என்று ஓர் குரல் கேட்கிறது.)

சக்த :—ஸலீமின் குரல் அல்லவா அது? பிரதாபஸிம்மரா ரணகளத்தை விட்டு ஓடுகிறார்? முகலாயர்களா அவரைத் துரத்துவது? சற்று நில், மஹாபத் இதோ வந்தேன். குதிரை! எங்கே, என் குதிரை? (விரைந்து செல்கிறார்.)

என்ன விந்தை யிது? பிரதாபஸிம்மரைக் கொல்லவே இவர் ஓடுகிறார். ஈசுவரா! இப்படியுமா? ஐயோ மருமகன் வாளால் காய முண்டு விழுந்தார். ஸோதரர் வீச்சால் விண் சேர்வார். விதிவலி! வேறு என்ன? (கவலையாகச் செல்கிறார்.)

காட்சி 5.

(ஹல்திகாட் மலைத்தொடர்; ஓர் அருவியின் அருகில் இறக்கும் குதிரை மீது தன் தலையை வைத்துப் படுத்துக் கிடக்கிறார் பிரதாபஸிம்மர்.)

பிரதாப :—(சற்றுப் பிறகு) போய்விட்டது! யாவும் மூன்றே நாட்களில் முடிந்தது. 15000 வீரர்களும் வெட்டுண்டனரே! என் அருமை சேடக்கும் போயிற்றே!......இங்கு எப்படி வந்து சேர்ந்தேன்? சேடக், சேடக்! ஒரு நாளும் இல்லாமல் இன்று மட்டும் நீ ஏன் இப்படிச் செய்து விட்டாய்?......கட்டளைக் கடங்காது, கடிவாளத்தையும் கருதாது ஓடி வந்து விட்டது. மலைகளையும் ஆறுகளையும் தானாகவே தாண்டிக் கொண்டு என்னை இங்கு கொண்டு வந்து விட்டது. ஐயோ, என் உற்ற உறவினன் நீ, ஒரே மூச்சில் இப்படி ஓடியும் வந்தனையே! எல்லோரும் என்ன சொல்வார்கள்! நீ அஞ்சி ஓடி விடவில்லை, உயிர் தப்ப ஒளிந்துகொள்ள வில்லை; என்னைக் காக்கவே உன் உயிரை இழக்கிறாய்; ஆயினும் நீ இதைக் கவனிக்கவில்லையே. பின்னால் ஓர் குரல் என்னைத் துரத்திக் கொண்டே வந்ததே "கருப்புக் குதிரைக்காரா, ஓடாதே, நில், நில்" என்று ஒலித்துக் கொண்டே இருக்க வில்லையா? பழகிய குரல் அது. அவன் என்ன நினைத்திருப்பான்? புறமுது கிட்டான் பிரதாபஸிம்மன் என்று எண்ணுவானே—சொல்வானே! சேடக்! என் சேடக்! ஏன் இப்படிச் செய்தாய்? நாம் இருவரும் சேர்ந்தே யன்றோ இறக்கவேண்டும் போர்க்களத்திலேயே அன்றோ மரிக்கவேண்டும்! சத்துரு நகையாடுகிறானே, ஓடி உயிர் உய்கிறான் பிரதாபன் என்று கேலி செய்கிறானே! ஐயோ இருதயம் வெதும்பிப் புழுங்கி அலமந்து அழிகிறேன், பார்! இது தகுமா உனக்கு? உயிர் உள்ளவரையில் எனக்கு உழைத்து, கீர்த்தியையும் அளித்து, இன்று சாகும் தறுவாயில் ஏன் இவ்வழவைத் தேடிக் கொண்டாய்?

(இராஸானி, முல்தானி என்றும் இரு முகலாயர்கள் உருவிய வாளுடன் வருகிறார்கள்.)

குராஸானி :—இதோ விழுந்து கிடக்கிறனே!

முல்தானி :—இறந்து விட்டதோ?

பிரதாப :—இல்லை (எழுந்து) இறக்க வில்லை. உயிர் இருக்கிறது. யுத்தம் முடிவுற வில்லை, இன்னும். எடுத்துக் கொள்ளுங்கள் வாளை.

முல்தானி :—ஆமாம், ஆமாம்; வா, வா.

பிரதாப :—எங்கே உன் வாள்? எடுத்துக் கொள்.

(இருவருடனும் பிரதாபஸிம்மர் போரிடுகிறார்.)

(திரைக்குப் பின்னல் "கருப்புக் குதிரை வீரா நில் நில்")

பிரதாப :—உங்கள் உதவிக்கு இன்னும் சிலரா? ஆனுல், இனி முடியாது; களைத்தேன்.

முல்தானி :—பின் போடு கத்தியை கீழே!

பிரதாப :—முடியுமோ, பார்.

(போர் புரிந்து பிரதாபர் மூர்ச்சித்து விழுகிறார்; சக்தஸிம்மர் வந்து சேர்கிறார்.)

சக்த :—போதும். நிறுத்துங்கள்!

குராஸா :—இன்னொரு காபிரியா!

முல்தானி :—அவனையும் சேர்த்தே கொல்லுவோம். இவன் தலை எனக்கு; அவன் தலை உமக்கு; எடுத்து வாரும்.

(பிரதாபஸிம்மரின் தலையைத் துண்டிக்கப் போகிறான்.)

சக்த :—ஒ, மிஞ்சிவிட்டதே! ஆனல் மாளுங்கள் சேர்ந்தே! (ஒரே வீச்சில் இருவரும் விழுகின்றனர்.)

சக்த :—அப்பா! பிழைத்தோம். இனிப் பயமில்லை. அண்ணு, அண்ணு!......பிரக்ஞை இல்லையே!......உயிர் இருக்கிறது. அருவி ஜலம் பட்டால் எழுந்து விடுவார். (சென்று கையில் ஜலம் கொண்டு வந்து முகத்தில் தெளிக்கிறான்.)......அண்ணு, அண்ணு!

பிரதாப :—(தெளிந்து) யார்?......சக்தனு?

சக்த :—பிழைத்தேன்! அப்பா! மேவார் இன்னும் அழியவில்லை. அண்ணு! நான் தான், அண்ணு.

பிரதாப :—சக்தா......உன் கைதியா நான்? போனுல் போகட்டும். உன் கையில் தானே அகப்பட்டுக் கொண்டேன், பாதகமில்லை. என்னை விலங்கிட்டு முகலாய தர்பாருக் கழைத்துச் சென்று விடுவாயோ? வேண்டாம், உயிருடன் வேண்டாம். என் தலையை அக்பருக்குக் காணிக்கையாகக் எடுத்துக் கொள். உயிருடன் மட்டில் என்னைக் கொண்டு அங்கு நிறுத்த வேண்டாம். என் செய்வேன்? போர்க் களத்தில் மடியும் பேறு நான் பெறவில்லை. என் சொல்லை மதிக்காமல் லகானுக்கும் அடங்காமல், என் குதிரை என்னை இங்கு இழுத்து வந்து விட்டது. அவச் சொல்லுக்கு இலக்கானேன். அவமானத்துக்கு ஆளானேன்...... தம்பீ, சக்தா, உயிருடன் தான் கொண்டு போக வேண்டுமா? 'தம்பி' என்று உன்னை உறவு கூறி அழைத்து, உன் நெஞ்சில் தயையைப் பெருக்க முயல்கிறேன் என்று நினைத்து விட்டாயா? இல்லை. அவமானமடைந்து, போரில் முறிபட்டு, கழல் பணியும் இப்புல்லன். உன் மனது இளக மன்றாடவில்லை. நான் செய்வதல்ல அது. உன்னை ஒன்றே ஒன்று தான் கேட்டுக் கொள்ளுகிறேன். உயிருடன் என்னைக் கொண்டு போக வேண்டாம். இதை எனக்கு அருள், போதும். இதுவே என் பிரார்த்தனை; முதலும் கடைசியும் இதுவே. உனக்கு, நான் எப்பொழுதாகிலும் ஏதோ, கிஞ்சித்தாவது, உபகரித்திருப்பதாகத் தோன்றினல் இவ்வரத்தை எனக்களிப்பாய்! இந்தா, இதோ என் வாள். மார்பைத் திறந்து கொண்டேன். ஒரே குத்து! குத்து.

சக்த :—(வாளைப் பிடுங்கி எறிந்து) அண்ணு! இவ் விசால வக்ஷஸ்தலத்தில் எனக்கு இடம் அளிக்கலாகாதா!

பிரதாப —(திகைத்து)......ஆனுல் என்னைக் காப்பாற்றவா நீ வந்தாய்?

சக்த :—ஆம். அண்ணு! வீரர்களுக்கும் வீரத்துக்கும் ஆதாரமான தாங்கள், ராஜபுத்திர குலத்துக்கும், ஸ்வதேச ரக்ஷணத்துக்கும்,

நந்தாவிளக்கான தாங்கள். இவ்வற்பர்கள் வாளுக்கா இரையாவது?......இவ்வளவு காட்களும் நான் தங்களை அறிய மறுத்து உயர்ந்து வாழ வெண்ணினேன். தங்கள் மேன்மையைக் கண்டு கொள்ளவில்லை. நானே மேலோன் என்ற அகந்தைக்கு ஆட்பட்டு, அறிவிழந்து அலைந்தேன்......சிறுமையும் சினமும், செருக்கும் இகலும் கொண்ட, கயவன் நான். தன்னைத் தனிப் போருக்கு அழைத்த துரிசன். பழிவாங்குவதாக நினைத்து ஜன்ம பூமியை அழித்த அற்பன். தாங்கள் காப்பாற்றுகிறவர். நான் அழிப்பவன்; ஐயோ, எவ்வளவு நீசன் நான்! ஆயினும் இன்னும் மீறிவிட வில்லை. இந் நிலைமையிலாவது தங்களைக் கண்டு காக்கும் பாக்கியம் பெற்றேனே! இனிக் கவலையில்லை. மேவார் அறியவில்லை! ராஜ புத்திர குலப்பிரதீப! வீரகேஸரீ, புருஷோத்தமா! (முழந்தாளிடுகிறார்.)

பிரதாப :—என் தம்பி! (கட்டிக் கொள்கிறார்.)

அங்கம் 4. காட்சி 1

(ஸலீமின் டோா: கோபாவேசமாக ஸலீம், பிருத்வீராஜ் அமேர், பிகானீர் மார்வாட் சந்தேரி அரசர்கள் சூழ, வீற்றிருக்கிறார். எதிரில், காவலாளிகள் நடுவே சக்தஸிம்மர் நிற்கிறார்).

ஸலீம் :—பிரதாப ஸிம்மரைத் தப்பவைத்தது யார்? உண்மையைக் கூறிவிடு. அவர் உயிர் பெற்றது யாரால்?

சக்த :—தானாக ஓடிவிடவில்லை யென்று கண்டுகொண்டீர்களே, அதுவே போதும். அந்தக் களங்கத்துக்கு அவர் பொறுப்பாளியல்ல, அதுதான் உண்மை.

ஸலீம் :—ஸரியாக ஜவாப் சொல்லமாட்டாய்? அவர் ஓடினதற்குக் காரணம் யார்? சொல்.

சக்த :—அவர் குதிரை சேடக்!

பிருத்வீ :—(சிரிப்பை அடக்கிக்கொள்வதற்காக இருமுகிறார்).

ஸலீம் :—மறுமுறை கேட்கிறேன்; ஸரியாகச் சொல்வாயா, மாட்டாயா?

சக்த :—அதுதான் சொல்கிறேனே. சேடக் தான். தங்களுக்கு சேடக்கை தெரியாதா? உங்கள் யானையை யெதிர்த்து அதன் தலையில் தன் அடியை வைத்து நிற்கவில்லையா, அந்தப் பொல்லாத சேடக்!

ஸலீம் :—நீ அவருக்கு ஓர் உதவியும் செய்து அவரைத் தப்பவைக்க வில்லை?

சக்த :—இல்லை.

பிகானிர் :—பின் குராஸானியும் முல்தானியும் எப்படி மாண்டனர்?

சக்த :—உயிர் போனதால் மாண்டனர்.

பிருத்வீ :—(சிரிப்பை அடக்க முடியாமல் தவிக்கிறார்).

ஆமேர் :—கேளிக் கூத்து நடக்கும் கோமாளியின் அரங்க மேடையல்ல இது. குற்ற விசாரணை நடக்கும் நியாயசபை இது!

சக்த :—ஓ! மாமனார் வீடு என்று அல்லவோ எண்ணி விட்டேன். நான் மாட்டுப் பெண், ஸலீம் மணமகன், நீங்கள் யாவரும் நாத்தனார்கள் என்று நினைத்துக்கொண்டு விட்டேன். இல்லையா ஆனால்!

பிருத்வீ :—(அடக்க முடியாமல் சிரிக்கிறார்).

ஸலீம் :—(சீறி) கேட்டதற்கு பதில் சொல்லமாட்டாய்?

சக்த :—கேட்கவேண்டியதைத் தாங்களே கேட்டுக்கொள்வது தானே. இம்முகஸ்துதிக்காரர்கள் பேச்சு என்னை ஆத்திரப்படுத்துகிறது.

ஸலீம் :—நானே கேட்கிறேன். பாதுஷாவின் சேனைத் தலைவர்களான அவ்விருவர்களையும் கொன்றது யார்?

சக்த :—நான்.

சந்தேரி :—நான் சொல்லவில்லையா, அப்பொழுதே? எனக்குத் தெரியுமே!

சக்த :—ஸந்தேக மென்ன? பிரஹஸ்பதியல்லவா நீர்?

பிருத்வீ :—(மார்வாடை நோக்கிச் சிரிக்கிறார்).

ஸலீம் :—அவர்களை ஏன் கொன்றாய்?

சக்த :—பிரக்ஞையற்று விழுந்த என் அண்ணனைப் படுகொலை செய்யத் துணிந்தனர் அவர்கள். அவரைக் காக்கவே இவர்களைக் கொல்ல வேண்டியதாயிற்று.

ஆமேர் :—நீயே கொல்வதா? வஞ்சகப் பேயே! நன்றிகெட்ட கோழை!

சக்த :—நன்று, நன்று! உன் முகலாய மருமகனுக்குப் பரிந்து பேசவேண்டியது தான்! (பிருத்விராஜர் உரக்கச் சிரிக்கிறார்) ஆயினும் பகவன்தாஸ்! பகுத்தறிவுடனேயே பேசு. வஞ்சகனாகவுமிருக்கலாம் செய் நன்றி கொன்றவனாகவுமிருக்கலாம் நான். கோழை நான் அல்லன். இரண்டு முரட்டுப் பட்டாணிகள் சேர்ந்துகொண்டு செயலற்று விழுந்த ஒருவரைக் கொலை செய்ய முற்பட்டனர். ஒருவனாகவே அவ்விருவர்களையும் நான் வென்றேன். கொலை புரிந்தல்ல, போர் புரிந்து!

ஸலீம் :—நன்றி கெட்டவன்தான் என்று ஒப்புக்கொள்கிறாயல்லவா?

சக்த :—ஸந்தேகமென்ன?...ஏன் ஆச்சரியமுறுகிறீர்கள்? ஆதிமுதலே நான் விசுவாஸ காதகன் தானே! தமயனுக்கும் தேசத்துக்கும் விசுவாஸகாதகம் செய்து உங்களுடன் சேர்ந்துகொண்டேன். மற்றொரு விசுவாஸ காதகம் செய்து என் தமையனிடம் சென்று சேர்ந்துகொண்டு விட்டேன். இப்பொழுது திரும்பிவிட்டேன், அவ்வளவுதானே! இதில் உங்களுக்கு உண்டான நஷ்டம்தான் என்ன? நான் விசுவாஸகாதகன் என்று விசாரித்துத் தெரிந்துகொண்ட பிறகே என்னை பாதுஷா தன்னுடன் சேர்த்துக்கொண்டார்...பிரதாபஸிம்மரை எதிர்த்துப் போர் புரியச் சென்றபொழுதும் நான் செய் நன்றி மறந்தவன்தான். பட்டாணிகளிடமிருந்து அவரை மீட்ட பொழுதும், செய் நன்றி மறந்தவன்தான். புதிய விஷயம் என்னவெனில், அவர் என் அண்ணன் என்று உணர்ந்து கொண்டேன், ஸாதாரணமான அண்ணனன்று; பதின்மடங்கு எதிரிகளுடன் நிராயுதமாய்ப் போர் புரியும் அண்ணன்; ஸ்வதேசரக்ஷணத்துக்காகப் போராடும் அண்ணன், ஸ்வஜாதி மேன்மைக்காக, தன்னலந்துறந்து காடும் மலையுமாக அலையும் அண்ணன்!

பிருத்வீ :—('எல்லாம் வீண்' என்று கையை ஆட்டுகிறார்).

மார்வாட் :—(மெதுவாக சந்தேரியின் காதில் சொல்லுகிறார்).

ஆமேர் :—எல்லாம் தெரியும், உங்கள் பிரதாபரை! அகப்பட்டதைச் சூறையாடும் மலைக் கொள்ளைக்காரன்!

சக்த :—ஆம்! அவர் கொள்ளைக்காரர், தாங்கள் தேசத்துக்கே உழைத்து இளைத்தவர்! ஐயோ!

ஸலீம் :—பிரதாபஸிம்மர் கலகம் புரிந்து தானே கோட்டைகளைக் கைப்பற்றியது? அதை மறுக்க வியலாது.

சக்த :—பிரதாபஸிம்மர் கலகக்காரர்; பாதுஷா அக்பர், ஆதி முதல் அரசன் அல்லவா சித்தூருக்கு? ஏன் வீண் வாதம்! உங்கள் அரசாட்சியின் போக்கே தனி! அன்னிய தேசத்தை எதிர்த்துச் சென்று ஆக்கிரமிப்பது விஜய யாத்திரை; பலாத்காரமாகப் பிடுங்கிக்கொள்வது பாதுஷாவின் பாஹுபலம்; அந்நாட்டுமக்களை செழிக்க விடாது கசக்கிப் பிழிவது, சாம்ராஜ்யஸ்தாபனம்! நன்று நன்று! எல்லாவற்றையும் பறிகொடுத்து அடிமையாகிக் குடிவாழ்ந்தால் அது இராஜபக்தி யென்று கொண்டாடப்படும்; அப்படிக்கின்றி இழந்ததை மீண்டும் பெற முயன்றால் அது கலகம், பலாத்காரம் புரட்சி என்று தீர்மானிக்கப்படும். இதுதான் தங்கள் ராஜநீதியோ?

பிருத்வீ :—இல்லை, இல்லை! (தலையசைக்கிறார்).

ஸலீம் :—அதனால் பாதுஷாவை பாதுஷா அல்ல என்கிறாயா? பின் அவர் யார்?

சக்த :—கொள்ளைக்காரர் என்று சொல்லுகிறேன். ஹிந்துஸ்தானத்தையே கொள்ளை கொள்ள வந்த பெருங் கொள்ளைக்காரர். குடிகளையே கொள்ளை கொள்ளும்......

பிருத்வீ :—(ஆச்சரியமாக வாயைப் பிளக்கிறார்).

ஸலீம் :—போதும். இவனை உடனே கைது செய்யுங்கள்.

(சிபாய்கள் விலங்கிடுகின்றனர்)

ஸலீம் :—இதற்கு என்ன தண்டனை தெரியுமா ?

சக்த :—மரணத்துக்கும் மேற்பட்ட தண்டனையும் உளதோ? இறக்க அஞ்சுபவன் நானல்லன்! க்ஷத்திரியன் நான். உயிருக்கு மன்றாடுவதானால் உண்மையை உரைப்பேனா, அல்லது நானாகவே இங்கு வருவேனோ? அல்லது முகலாய மனப்போக்குத்தான் தெரியாதவனா நான்? உண்மையைக் கூறுவதற்காக என்னைக் கொண்டாடுவீர்கள் என்று எண்ணி ஏமாந்துவிடவில்லை. இவ்வளவு காலமும் பழகியதில் அக்பரையும் கண்டு கொண்டேன். அவர் கபடதந்திர வஞ்சக வன்மையையும் கண்டறிந்தேன். விஷயமறியாது வீண் கர்வம் கொண்டு ரத்தவெறி பிடித்துத் திரியும் உன்னையும் கண்டுகொண்டேன்!

பிருத்வீ :—(இரக்கமாக சக்தஸிம்மரைப் பார்த்து பரிதவிக்கிறார்).

ஸலீம் :— என்ன சொன்னாய்? வீடுவாசலின்றி நாடும் காடுமாய் அலையும் நாயே! முகலாய எச்சிலை யுண்டு வாழும் நன்றி கெட்ட பதரே! என்னையா எதிர்க்க எண்ணினாய்? விசுவாஸ காதகத்துக்கு உரிய தண்டனை மரணம். அத்துடன் இதையும் பெற்று மனம் புழுங்கி, மரி! (தன் காலால் உதைக்கிறார்).

சிற்றரசர்கள் வெறுத்து முகத்தைத் திருப்பிக்கொள்கிறார்கள். பிருத்வீ ராஜர் திகைத்து நிற்கிறார். சக்தஸிம்மர் சீறி விலங்குகளை உதறி எறிகிறார். உடனே காவலாளிகள் அவர் மீது விழுந்து கட்டிக்கொள்கிறார்கள்).

ஸலீம் :—ஏன் நிற்கிறீர்கள்? உடனே இவனைச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லுங்கள். காலையில் வேட்டை நாய்களை இவன் மீது அவிழ்த்து விடுங்கள்.

(வேகமாகப் போய்விடுகிறார்).

சக்த :—ஒரு நிமிஷம்! ஒரே நிமிஷம், என்னை விடுங்கள்! எந்த தண்டனையும் பிறகு அனுபவிக்கிறேன். இதோ ஒரு நிமிஷம் என்னை விடுங்கள். (திமிரி ஸலீமைத் தொடரப் பிரயத்தனப் படுகிறார். காவலாளிகள் பலமாகக் கட்டுகிறார்கள். சிற்றரசர்கள் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.)

காட்சி 2.

(உதயபுரத்தில் ஓர் மலை குகை. ஸாயங்காலம். பிரதாபஸிம்மர் தனியாக நின்றுகொண்டிருக்கிறார்).

பிரதாப :—கும்பல்மேரும் போய்விட்டது. தூர்மடீகோகுண்டாவும் எதிரி வசமாயின. உதயபுரத்துக்குள் மஹாபத்கான் பிரவேசித்து விட்டான்...போகட்டும். எல்லாம் போகட்டும். இன்று போகும், நாளை வரும். அதில் வருத்தமில்லை யெனக்கு. என் மானம் போய் விட்டதே! என் ரோஹிதாஸை யிழந்தேனே! ஹல்தீகாட்! உன்னிடம் எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டேன்.

(ஈரா வருகிறான்)

பிரதாப :—சாப்பிட்டாயா ?

ஈரா :—சாப்பிட்டேன். இது எந்த இடம் ?

பிரதாப :—உதயபுரத்தைச் சேர்ந்த காடு தான் இது.

ஈரா :—நேர்த்தியான இடம்! இம்மலையின் அழகே அழகு! பேச்சு மூச்சற்ற கம்பீரம்! செங்குத்தாய் ஓங்கி வளர்ந்து வானைப் பிளக்கவே விரும்புகிறதா?

(லக்ஷ்மி வருகிறாள் ஓர் சிறு கூடையில் சில காய்கனிகளை, பிரதாபஸிம்மர் முன் வைக்கிறாள்).

பிரதாப :—குழந்தைகள் சாப்பிட்டாயிற்றா?

லக்ஷ்மி :—ஆயிற்று. தாங்களும் சிறிது அருந்தலாமே!

பிரதாப :—பசியே இல்லை.

லக்ஷ்மி :—காலையிலிருந்தே ஒன்றும் உட்கொள்ளவில்லையே, ஏன் பசிக்காது? ஏதாவது சாப்பிடுங்கள்.

ஈரா :—சாப்பிடுங்கள் அப்பா—எனக்காக.

பிரதாப :—ஸரி, வை.

லக்ஷ்மி :—(பாத்திரங்களில் தீர்த்தம் கொண்டு வந்து வைக்கிறாள்) குழந்தைகளைக் கவனித்து விட்டு வருகிறேன். (லக்ஷ்மி போகிறாள். பிரதாபஸிம்மர் அனுஷ்டானம் செய்து விட்டு இரண்டு கிழங்குகளை எடுத்துக் கொள்கிறார். பிறகு ஆசமனம் செய்கிறார்.)

பிரதாப :—இது தான் இராஜபுத்திர வாழ்க்கை! பகல் முழுவதும் பட்டினி, இரவு இரண்டு கனிகள் உண்ணக் கிடைக்கும்; நாள் முழுவதும் பிரயாணை; இரவு தரையில் படுக்கை. இதுவே நமக்கு உகந்தது. ஸ்வதேசத்துக்காகப் படும் துன்பமும் துயரமும் ஸ்வர்க்கபோகத்தை விட இனியன, புஷ்பசயனத்தை விட பெரிதும் விரும்பத்தக்கதாகும்.

(பில்லர்களின் தலைவர் மாஹூ வருகிறார். நமஸ்கரிக்கிறார்.)

பிரதாப :—மாஹூ, வா! வா!

மாஹூ :—தாங்கள் இங்கு இருப்பதாகக் கேள்வியுற்றேன். காண வந்தேன்.

பிரதாப :—ஸந்தோஷம். ஸௌக்கியமா?

ஈரா :—மாஹூ! குழந்தைகளெல்லாம் சுகமா?

மாஹூ :—ஸௌக்யம் அம்மா, நீ ஏன் இப்படி இளைத்து விட்டாய்?

பிரதாப :—ஏதோ இன்னும், உயிர் இருக்கிறதே அதுவே பெரிது. நோய் வாய்ப்பட்டு நலிந்தும், பிடிவாதமாய் எனக்குப் பணி செய்து வருவதில் வேளையில் உணவு மில்லை. வேண்டிய ஔஷதமும் இல்லை. இன்று இப்பொழுது தான் சாப்பிட்டாள்.

மாஹூ :—எவ்வளவு நாள் தான் இப்படியே நடக்கும்?

பிரதாப :—நாமென்ன செய்வது? சமையலுக்கு அவகாசம் கிடைத்தாலும் சாப்பிட அவகாசம் கிடைப்பதில்லை; பீட்டுர்க்காட்டில் உணவு தயாராகி யிருந்தது. உண்ண உட்கார்ந்தோம். உடனே 5000 முகலாயர்கள் எங்களை வளைத்துக் கொண்டனர். அப்படியே எழுந்தோம். டோலிகளில் குழந்தைகளை ஏற்றிக் கொண்டோம்; ஓடினோம்; பத்து காதமும் மலை வழியாகவே, இங்கு வந்து சேர்ந்தோம்.

மாஹூ :—குழந்தைகள், பாவம், என்ன செய்யும்!.......ஓர் முக்கியத் தகவல் தெரிவிக்கலாமோ?

பிரதாப :—என்ன, என்ன? சொல்.

மாஹூ :—பரீத்கான் தன் சேனையை யெல்லாம் சாய்காட்டுக்கு அனுப்பிவிட்டு 1000 பேர்களுடன் இங்கு ஆனந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கிறான்.

பிரதாப :—யார்? பரீத்கானா? எங்கே, எங்கே?

மாஹூ :—இதோ, அருகில். அவன் பிறந்த நாள் இன்று. களிக்கூத்துக்களில் முழுகிக் கிடக்கிறான். இப்பொழுதே நாம் அவனைத் தாக்கினால்.

பிரதாப :—எப்படி முடியும்? என்னிடம் இருப்பதே இருநூறு வீரர்கள்.

மாஹூ :—என்னிடம் ஆயிரம் பில்லர்கள் இருக்கின்றனர். தங்களுக்குத் தொண்டு செய்து தன்யராகத் துடித்துக் கொண்டு நிற்கின்றனர். உத்தரவா?

பிரதாப :—ஆனால் ஸரி! செய்வதானால் இப்பொழுதே செய்ய வேண்டும். உடனே புறப்படத் தயார் செய்.

மாஹூ :—இதோ—(ஈராவை) உடம்பைப் பார்த்துக் கொள், அம்மா (போகிறார்.)

பிரதாப :—இவனைப் போன்ற துணைவனும் உண்டோ? எனக்கு ஆபத்ஸமயம் என்றால் எப்படியோ அறிந்து கொண்டு எங்கிருந்தாலும் வந்து விடுவான், உதவி அளிக்க.

ஈரா .—அப்பா!

பிரதாப :—ஏனம்மா!

ஈரா :—யுத்தம் எதற்கு? வேண்டாமே! நீரில் குமிழி இவ்வாழ்க்கை, சில நாள் பல பிணி; சிற்றறிவு, நாளை நடப்பது நாம் அறியோம். இதில் ஒருவருக் கொருவர் சண்டையும் சச்சரவும், போரும் புன்மையுமேன்? அன்பை வளர்த்து, அருட்பணி இயற்றி, இன்னல்களை யகற்றி இனிது வாழலாகாதா? பிறருக்குத் துன்பத்தை விளைப்பதா புகழ்? அன்னியர்களுக்கு ஆபத்தை விளைவிப்பதா ஆண்

மை! வேண்டாம், அப்பா. மித்திரனுமில்லை, சத்துருவு மில்லை; தோள் தோய்ந்து வாழ் வோம். அன்பில் அமிழ்வோம்!

பிரதாப:—அப்படி மட்டில் முடிந்தால் இதுவே சுவர்க்கமாயிற்றே!

ஈரா:—இது தான், அப்பா, சுவர்க்கம். தனி யாக எங்கோ இருக்கிறதா? இல்லையப்பா. அன்னியன் என்று எவனுமில்லை. தன் நலத் தைத் துறப்போம். தரணியில் வாழும் எவ் வுயிரும் நம் உயிரென்று கொள்வோம்.

பிரதாப:—அந் நாள் எந்நாளோ? கண் ணுக் கெட்டிய தூரத்தில் இல்லை.

ஈரா:—நாம் இரத்த நதிகளையே பெருக்கி வந்தால் அந் நாள் எப்படி நெருங்கி வருமோ அறியேன்.

(போகிறார்கள்.)

காட்சி 3.

சிறைச்சாலை. விடியும் முன். (விலங்கிடப் பட்ட சக்தஸிம்மர் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்.)

சக்த:—இரவும் கழிந்தது; அதனுடனே என் அற்ப ஆயுளும்! இதோ நான் காணும் இவ்வைகறையே என் கடைசி வைகறை! செழி த்துக் கொழுத்த இவ்வெழில் மிகு யாக்கை காக்கை கழுகுக்கு உணவு, குருதி வெள்ளத் தில் புரளும். யாவரும் கண் கொண்ட மட்டில் காண்பர். நான் மட்டில் காணமுடியாது அக் காட்சியை. ஆம். இந்த "நான்" என்பது யார்? 'செத்ததின் சிறியது' எனில் எங்கிருந்து வந் தேன், எங்கு சென்று மறைவேன்? இவ்வளவு சிந்தித்தும் அறியலாகாத இவ் விஷயத்தை இனி எளிதில் கண்கூடாய்க் கண்டு கொள் வேன். ஜ்யோதிஷ சாஸ்திரத்துக்கும் ஜீவதத் துவத்துக்கும் புறம்பான உண்மை இப்பொ ழுது புலனாகும். நான் 40-வருடங்களுக்கு முன் இருந்தது எங்கு, நாளை இருக்கப் போ வது எங்கு? எல்லாம் இதோ தெரிந்து விடும் எனக்கு.........யாரது?

(முகமூடி அணிந்த கையில் வர்த்தியுடன் ஓர் மாது பிரவேசிக்கிறார்.)

சக்த:—தாங்கள் யார்?

ஸ்த்ரீ:—யாராயிருந்தாலென்ன? முஸல் மானானால் என்ன, ஹிந்துவானால் என்ன, தங் களுக்கு? தங்களை விடுவிக்கிறேன். இனி வெளியே செல்லலாம்.

சக்த:—நான் விடுதலையை விரும்ப வில் லையே!

ஸ்த்ரீ:—(திகைத்து) ஆ:—எப்படி நம்பு வது? இவ்விளவயதில் யார் சாக எண்ணுவர்? இவ்வழகிய உலகையும் அது அளிக்கும் இன்ப நுகர்ச்சிகளையும் தானாகத் துறக்கத் துணிபவ ரும் உண்டோ?

சக்த:—எனக்கு இது பண்டை உலகம், பழகி அலுத்துவிட்டது. மறு உலகைக் காணவே காத்துக் கொண்டிருக்கிறேன். அங் காவது ஏதாவது புதுமை யிருக்கிறதா, பார்க்க வேண்டும்; மரணத்தின தத்துவத்தை முதலில் அறிய வேண்டும், இப்பொழுது.

ஸ்த்ரீ:—தங்களை நம்பி வாழ்வோர், தவிக்க வேண்டியதுதானே?

சக்த:—அப்படி ஒருவரும் எனக்கில்லை; அன்பர்களுமில்லை, வைரிகளுமில்லை. (தனக் குள்) ஆயினும் ஓர் கடன் பாக்கி நிற்கிறதே! ஸலீமைப் பழிவாங்காமலே சென்று விடுவதா? மனது சாந்தி யடையாது.

ஸ்த்ரீ:—ஆனால் தாங்கள் விடுதலையை விரும்பவில்லையா? நான் போகலாமா?

சக்த:—வேண்டும். விடுதலை இரண்டு நாழி கைக்காவது வேண்டும். ஓர் கடன் பாக்கி நிற் கிறது. அதை முடித்துக் கொண்டு இங்கு நானாகவே வந்து விலங்கிட்டுக் கொள்வேன். இரண்டு நாழிகை மட்டில் எனக்குச் சுதந்திரம் அளியுங்கள், போதும்.

ஸ்த்ரீ:—காவல்! (காவலாளி வருகிறான்) இதோ பார் (ஓர் மோதிரத்தைக் காட்டுகிறார். கண்டு நமஸ்கரிக்கிறான்.) இவரை அவிழ்த்து விடு. (காவலாளி தளைகளை நீக்குகிறான்.) இனி தாஙகள் இஷ்டமான இடத்துக்குச் செல்ல லாம். இதையும் வைத்துக் கொள்ளுங்கள் (தன் கழுத்திலிருந்த ஓர் விலை மதிப்பற்ற ஹாரத் தைக் கழற்றிக் கொடுக்கிறாள்.)

சக்த :—எனக் கெதற்கு அம்மணி இது? எனக்கு வேண்டியது இரண்டு நாழிகை சுதந் திரம் அவ்வளவே!

ஸ்த்ரீ :—ஓ! இது வேண்டாமா? ஆனல் நானும் தங்களுடனே வர வேண்டியது தான். சரி! வாருங்கள்.

சக்த :—(திகைத்து) ஏன்? எனக்குச் சுதந் திரமளிப்பதாகச் சொன்னீர்களே, இப்பொ ழுது விருப்பமில்லையா?

ஸ்த்ரீ :—ஏன் வீண் காலஹரணம்? குதிரை தயாராக வெளியே நிற்கிறது. போவோம் வாருங்கள்.

(போகிறார்கள்.)

காட்சி 4.

பிருத்வீராஜர் கவி இயற்றிக் கொண்டிருக் கிறார்.)

“ப்ரஹ்மலோகமேம் அஜயதா சசிநாத ஜ்யோம் ஸவர்க்க

வைஸேஹீ அக்பர் பூமிபர் பாலத மானவ வர்க்க.”

ஆமாம்; மூன்றுவது பாதம் பொருந்த வில் லையே. ‘வைஸேதி’ என்றால் 6, மாத்திரையா யிற்றே. நான்கு மாத்திரை தானே வேண்டும், ‘த்யோம்ஹி’ என்று போட்டுவிடலாம். ஆனல் அது ஸரியாக....

(ஜோஷீ வருகிறாள்.)

பிருத்வீ :—என்ன ஜோஷீ! மேனவைப் பார்த்தாயா? எப்படி இருந்தது?

ஜோஷீ :—பார்த்தேன்.

பிருத்வீ :—எவ்வளவு நேர்த்தியான கண் காட்சி பார்த்தாயா? எப் புலன்களையும் ஒரு படித்தாய் இன்புறுத்தும் இம் மேனவுக்கு இணை இவ்வுலகிலே இல்லை யெனலாம். பாது ஷா எப்படி நிகரற்று விளங்குகிறாரோ அப் படியே தான் அவர் மேனவும். அதனல் தான்.

“ப்ரஹ்மலோகமேம் அஜயதா சசிநாத ஜ்யோம் ஸவர்க்க

வைஸே அக்பர் பூமிபர் பாலத மானவ வர்க்க.”

ஜோஷீ :—சே! வெட்கம் இல்லை? இந் நீச ஸ்துதிகளும் அற்பச் சொற்களும் தொண்டை யை அடைக்காதா?

பிருத்வீ :—இல்லை, ஜோஷீ, ஒன்றும் பொய்யே இல்லை. பார். அவருக்கு இவ்வளவும் தகும் இன்னும் அதிகம் தகும். அதிசயோக் தியே இல்லை. அவ்வளவும் வாஸ்தவமே! காபூலி லிருந்து வங்காளம் வரையிலும் தன் பாஹு பலத்தால் வென்று, ஹிந்துக்களையும் முஸல் மான்களையும் தன் அன்பு என்னும் சூத் திரத்தில் தொடுத்து வைத்து—

ஜோஷீ :—ஆமாம், அவ்வன்பை ஹிந்துக் களின் ராஜஸ்த்ரீகளிடமும் செலுத்தி, அவர்களையும் தம்முடைய போகவஸ்துக்களா கக்கொண்டு....

பிருத்வீ :—சீ, சீ! நீ அக்பரைப் பார்த்த தில்லை. அதனல்தான் இப்படி யெல்லாம் உளறுகிறாய்.

ஜோஷீ :—பார்த்தேன் இன்று. பார்த்து விட்டேன் உங்கள் அக்பரை! என் கையில் ஓர் கட்டாரி மட்டில் இல்லாதிருப்பின் இன்று உங்கள் பார்யையும் அவர் வாராங்கனை களில் ஒருத்தியாகவே ஆகி இருப்பாள் இந் நேரம்.

பிருத்வீ :—என்ன, என்ன! என்ன சொன் னாய்? மறுபடியும் சொல்!

ஜோஷீ :—சொல்லவேண்டியதுதான். உங் களிடம்! நீங்கள் க்ஷத்திரியரானல், உங்கள் முகத்தில் இருப்பது மீசையானல், பௌரு ஷம் என்பது என்ன வென்று அறிவீரானல், உடனே புறப்படுவீர் பழிவாங்க! இன்றேல், நீங்கள் என் கணவரல்ல. நான் கைம் பெண்; பயங் கொள்ளிப் பதர்களைப் பற்றிவாழும் பெண்டிர் கதி இது தான்! நாங்களே கத்தி யைக் கையில் கொண்டு, இனி காத்துக் கொண் டால் தான், எங்களுக்கு மானம்! தீண்டாத வன் ஒருவன் என் கையைப் பிடித்து இழுக் கிறான். நீங்கள் இங்கு சுகமாக அமர்ந்து, அவன் பெயருக்கு ஸ்தோத்திரம் இயற்றிக் கொண்டிருக்கிறீர்கள்!

பிருத்வீ :—இவையெல்லாம் உண்மை தானே? ஜோஷீ, ஸத்தியமா?

ஜோஷீ :—ஸத்தியம், ஸத்தியம், ஸத்தியம்! குடும்பஸ்த்ரீ ஒருத்தி, தன்னைப் பொய்யாகவும் களங்கமுற்றவளாகக்கூறிக் கொள்ள விரும்புவாளா? தெய்வச் செயலாக நான் தப்பினேன். தப்ப முடியாதவர்கள் கதியென்ன? உங்கள் தமயனிடம் சென்று கேளுங்கள். ஜாகீரும் ஆபரணங்களும் அடைந்து திரும்பவும் வீட்டுக்குள் நுழைந்திருக்கிறாள் வெட்கம் கெட்டவள்; அவளைச் சொல்ல வேண்டும்! ஐயோ, ஆர்ய ஜாதியே! இவ்வளவு தாழ்வா உனக்கு? பெண் பெண்களையுமா விற்க வேண்டும்? சே!

(கோபமாகச் செல்கிறாள்.)

பிருத்வீ :—(திகைத்து) என்ன, என்ன? உண்மைதானா? அப்படியும் நடக்குமா? நான் என்ன செய்வது.........என்னதான் செய்ய முடியும். அக்பர் ஸர்வசக்திமான்.

ப்ரஹ்மலோகமேம் அஜயதா.......

சே! ஒன்றும் தோன்றவில்லையே. (தலையைச் சொரிந்து கொண்டு செல்கிறார்.)

காட்சி 5.

(மலைக்குகை; ஸாயங்காலம் ஈரா வியாதியுற்றுப் படுத்திருக்கிறாள்.)

ஈரா :—அம்மா ஏன் அழுது கொண்டே போகிறாள்? நான் இறக்கிறேனே என்றா? அழுவானேன், சாவுதான் சத்தியம். சாவு என்னும் சமுத்திரத்தில் வாழ்வென்பது ஓர் அலை!... ஆஹா இவையெல்லாம் என்ன அழகு! உருக்கி விட்ட தங்க வெள்ளம்! வித விதமான மேகங்கள்! இவையாவும் உண்மைதானே? அல்லது ஓர் திரைமேல் வரையப்பட்ட சித்திரங்கள் தானோ? ஆம். இத்திரைக்குப் பின் இருந்து விளங்குவது ஓர் அக்ஷய ஸௌந்தர்ய ராசி, ஸத்தியமான ஸ்திரமான ஆனந்த கனம் ஆம், சூரிய வெளிச்சத்தில் நட்சத்திரங்களை நாம் காணாததுபோல, ஜீவன மென்னும் மோஹத்தில், இச் சௌந்தர்ய சிகரம் நமக்குத் தென்படவில்லை. கண்ணை மூடிக் காண வேண்டியது இது. (கண்ணை மூடிக் கொள்கிறாள்.)

(பிரதாபஸிம்மர் வருகிறார்.)

பிரதாப :—ஈரா.....தூங்குகிறாள். பாவம்! இவளருகிலேயே இவ்வளவு நேரமும் லக்ஷ்மீ உட்கார்ந்திருந்து விட்டு இப்பொழுதுதான் உள்ளே போகிறாள்.........என்ன வாழ்க்கை இது! மூன்று நாட்களாக தங்கவும் இடமின்றி அலைகிறோம்.......முகலாயர்கள் கையில் சிக்கிக் கொள்ளாமல் தப்பினோமே! அதுவே பெரிது. குழந்தைகள் பசியால் மெலிகின்றன. சமைக்க ஏது நேரம்? இவளோ படுத்திருக்கிறாள். ஈச்வரா! என்ன செய்யப் போகிறாய்? (குழந்தைகள் அழும் சப்தம் கேட்கிறது.) ஏன் அழுகின்றன? எல்லாம் என்னால் தான். எல்லோருக்கும் கஷ்டம். எவ்வளவு பில்லர்கள் மடிந்தனர்! எவ்வளவு குழந்தைகள் அனாதையாயின. எவ்வளவு குலஸ்த்ரீகள் விதவையாயினர்! என் ஒருவனுக்காகவா இவ்வளவு துயரமும் துன்பமும் சுற்றத்தோர் யாவருக்கும்? சே! வேண்டாம் இனி. போதுமே என் பிரதிஞைக்காக நான் பட்டது. நிறைவேறும் வழியையே காணேம். நானாகவே கைவிட்டுவிடுகிறேன். ஆம்.

(லக்ஷ்மி வருகிறாள்.)

லக்ஷ்மி :—உறங்கி விட்டாளா?

பிரதாப :—ஆமாம். குழந்தைகள் ஏன் அழுகின்றன?

லக்ஷ்மி :—சாப்பிட ரொட்டியைக் கையில் எடுத்துக் கொண்டன. எங்கிருந்தோ காட்டுப் பூனை ஒன்று பாய்ந்து வந்து கவ்விக் கொண்டு ஓடி விட்டது!

பிரதாப :—ஆனால் சாப்பிட இனி என்ன செய்யும்?

லக்ஷ்மி :—எனக்காக வைத்திருந்ததைக் கொடுத்தேன். சாப்பிடுகின்றன.

பிரதாப :—நீ என்ன செய்வாய்?

லக்ஷ்மி :—நமக்கு ஒரு நாளைக்கு இல்லாவிட்டால் என்ன? நாளைக்குப் பார்த்துக் கொள்வது.

பிரதாப :—(சற்று பொறுத்து) லக்ஷ்மி!

லக்ஷ்மி :—நாதா!

பிரதாப:—என்னால் உங்களுக்குக் கிட்டியது எல்லாம் கஷ்டம் தான். அளவில்லாத் துன்பம். இனிப் பொறுக்க முடியாது. வேண்டாம். நான் பணிந்து வருகிறேன்.

லக்ஷ்மி:—ஐயோ! ஏனப்படி?

பிரதாப:—முடிய வில்லையே! எவ்வளவு நாட்கள் தான் நரிகளைப்போல் குகையும் காடுமாக மறைந்து திரிவது? உண்ண உணவில்லை, உறங்க இடமில்லை. இதோ நோய்க்கு மருந்தில்லை. நானாவது பொறுத்துக் கொண்டு விடலாம். நீ என்ன செய்வாய், பாவம்!

லக்ஷ்மி:—நானா? தங்களுடன் திரிவதுதான் ஆனந்தம் எனக்கு.

பிரதாப:—அது இனி வேண்டாம். எதற்கும் எல்லையுண்டு. ஸ்த்ரீகளை இப்படி துன்புறுத்துவது தர்மமன்று.

லக்ஷ்மி:—நாதா! ஸ்த்ரீ என்று அவக்ஞை செய்ய வேண்டாம். கஷ்டங்களை ஏற்பது எங்களுக்கு ஸஹஜம்; பிறர்களுக்காகவே வாழ்கிறவர்கள்; தன்னலந் துறந்து பர்த்தாவுக்குப் பணிவிடை செய்வதே எங்கள் பரம பாக்கியம். தங்கள் திருவடியில் ஓர் காயம் பட்டால் அது என் மார்பில் பட்டதல்லவா? என் ரத்தத்தைக் கொடுத்து போஷிக்க வேண்டுமென்று பறக்கிறதே என் மனது.

பிரதாப—குழந்தைகளுமா இப்படி கஷ்டப்படவேண்டும்?

லக்ஷ்மி:—ஸ்வதேசம் பெரிதா, இக்குழந்தைகள் பெரிதா?

பிரதாப:—லக்ஷ்மி! நீ தான் தன்யை! உனக்கு இணையே இல்லை. இவ்வளவு சஞ்சலமுறும் வேளையினும், தீன துக்கித தரித்திர நிலைமையினும், மனம் சோராமலும் என்னைத் தளர விடாமலும் காப்பாற்றுகிறாயே! ஆயினும் பலம் குன்றிவிட்டது. வீரம் அயர்ந்து விட்டது. மனமுமுடைந்து விட்டது. நீதான் உத்ஸாஹ மளிக்கவேண்டும், உள்ளமும் உரமும், குலையாது பண்புறுத்த வேண்டும். இழுக்கு வாராது மகிழ்விக்க வேண்டும்.

ஈரா:—அம்மா!

லக்ஷ்மி:—(தடவிக் கொண்டே) ஏனடியம்மா, என்ன செய்கிறது?

ஈரா:—அதோ, இதோ எல்லாம் எவ்வளவு அழகு பாரம்மா!

லக்ஷ்மி:—(திகைத்து) எது, எது? (வருத்தமுற்று).

ஈரா:—இதோ இச்செங்கடல். உடல் நீத்த உயிர்கள் வந்து அடைகின்றன. ஸௌந்தர்யத் துணுக்குகள் மிதக்கின்றன. வெவ்வேறு ஸ்வரங்களும் ஒன்று பட்டு இசைக்கின்றன. உருவம் கொண்ட சிந்தை, வர்ணமிட்ட ஆசை இது. ஆனந்தமயமான....

பிரதாப:—கனவு கண்டு பிதற்றுகிறாளோ?

ஈரா:—ஆ, போய்விட்டதே! ஐயோ, அம்மா. நாம் எங்கு இருக்கிறோம்?

லக்ஷ்மி:—ஈரா, இதோ பார், என்னைப் பார்.

ஈரா:—அம்மா, ஸரி. நான் போகிறேன்... ......அப்பாவைப் பார்த்துக் கொள். சிறிது நாளாகவே அவருக்கு உடம்பு குணமில்லை. நீ ஏன் அவரைப் போருக்கே தூண்டிக் கொண்டும், ஊக்கமும் உத்ஸாஹமும் அளித்துக் கொண்டும் வருகிறாய்? வேண்டாம் யுத்தம். எதற்கு இவை யெல்லாம்? சித்தூரை மீட்கா விட்டால் தான் என்ன? இவ்வாழ்வு எவ்வளவு நாள்? இதற்காகவா இவ்வளவு பிரயாசையும் குத்தும் கொலையும்? யோசித்துப் பார். வேண்டாம். எல்லாம் போகட்டும். அப்பா, கோபித்துக் கொள்ளாதீர்கள். ஏதோ சொன்னேன். எனக்கு விடை யளியுங்கள். (இருவர் அடிகளையும் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொள்கிறாள்.) அப்பா! இது தான் ஸுக மரணம். (இறக்கிறாள்.)

லக்ஷ்மி:—ஐயோ, ஈரா, ஈரா!

பிரதாப:—பகவானே, இது தானா உமது அருள்?

(தொடரும்)

குருதக்ஷிணை.

(குருகுலக் கிலிட்டன்)

இக்ஷ்வாகு வம்சத்தில் மஹாபராக்கிரம சாலியான ரகு என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் பட்டத்திற்கு வந்ததும் 'விச்வஜித்' என்னும் யாகத்தைச் செய்தான். அந்த யாகத்தில் தன்னுடைய பொருள்களை யெல்லாம் தக்ஷிணையாகப் பலருக்கும் கொடுத்து ஆடம்பர மில்லாமல் எளிய வாழ்க்கையும் உயர்ந்த நோக்கமும் உடையவனாய் அரசாட்சி செய்து வந்தான்.

அச்சமயத்தில் எல்லா வித்தைகளையும் முற்றக் கற்ற கௌத்ஸன் என்னும் வரதந்து முனிவரின் மாணவன் குருதக்ஷிணை கேட்பதற்காக அரசனை வந்தடைந்தான். அரசனிடத்தில் என்ன இருக்கிறது? மட்கலங்களில் தன்னை வந்தடைந்த கௌத்ஸருக்கு அர்க்கியம் பாத்தியம் முதலியவற்றைக் கொடுத்து அரசன் அவரை அன்போடு வரவேற்று, முறைப்படி பூசித்து, இருக்கை யீந்து, கூப்பிய கையனாய் அருகிருந்து பின் வருமாறு பேசத் தொடங்கினன்.

ரகு :—குசையினும் கூரிய மதியுடைய கௌத்ஸரே, மந்திரங்களைச் செய்ய வல்ல ரிஷிகளுக்குள் முதன்மையானவரான தங்கள் ஆசிரியர் க்ஷேமமா? சூரியனிடமிருந்து உலகமானது சைதன்யத்தைப் பெறுவது போல நீரும் அங்ஙனம் அப் பெரியாரிடமிருந்து பெற்றீரல்லவா? உடலாலும் வாக்கினாலும் மனத்தாலும் இந்திரனது தைரியத்தையும் குறைக்கக் கூடிய முத்திறப்பட்ட தவங்கள் நன்கு நடைபெற்று வருகின்றனவா? பாத்தி கட்டி செடிகள் வைத்து அவைகளைப் பெற்ற குழந்தைகளினும் மேலாக வளர்த்து வருவது உங்களுக்கு வழக்கமே. அத்தகைய ஆச்சிரம விருக்ஷங்கள் பெருங் காற்று முதலியவைகளால் வீழ்த்தப்படாமலிருக்கின்றனவா? மான் குட்டிகளெல்லாம் நோயின்றி வளர்கின்றனவா? தென் புலத்தார்க்குக் கடனிறுக்கவும் நீராடவும் நீர்நிலைகள் நிரம்பிக் குற்றமின்றி இருக்கின்றனவா? உங்கட்கும் விருந்தினர்க்கும் பயன்படும் நீவாரங்கள் மாடு முதலியவற்றால் அழிக்கப்படாமல் வளர்கின்றனவா? எல்லாருக்கும் பயன் படக்கூடிய இல்லறத்தில் புகுவதற்கு உமக்கு இது உரியகாலமாயிற்றே. உமக்கு, உமது குருநாதன் மலர்ந்த முகத்தோடு அநுக்கிரகஞ் செய்து உத்தரவளித்தாரா? ஐயா, பெரியவரே, உங்கள் ஏவலை நிறைவேற்றுவதில் என் மனம் முனைந்து நிற்கின்றது. காட்டிலிருந்து என்னைப் பெருமைப் படுத்தத் தாங்கள் இங்கு வந்தது வரதந்துவின் ஆணையாகவா? அல்லது உமது சொந்தக் காரியமாகவா?

கௌத்ஸன் :—"பாத்திரங்களோ மண்பாத்திரங்கள்! பேசும் பேச்சோ உதாரமாயிருக்கிறது! நாமெங்கே, குருதக்ஷிணை யெங்கே?" என்று எண்ணி ஆசை யற்றவனாய், "அரசனே, யாம் அனைவரும் க்ஷேமம். நீ அரசனாயிருக்கும் போது மக்கட்குத் துன்பம் எங்கிருந்து வரும்? சூரியன் பிரகாசிக்கும் போது இருளானது பார்வையை மறைத்துவிடுமா? வேந்தனே, பெரியவர்களிடத்தில் பக்தி பண்ணுவது உங்கள் குலத்திற்கு வழி வழி வந்த பெருஞ் செயல். நீயோ உன் முன்னோர்களினும் ஒரு படி விஞ்சிக் காண்கின்றாய். நீ செல்வத்தால் செழித்து வாழும்போது வாராமல் ஓட்டாண்டியாய் இருக்கும் சமயத்தில் வந்தேனே என்று எண்ணும் போது, என்னை அறியாமல் வருத்தம் ஏற்படுகிறது. காட்டில் உள்ள நீவாரப் பயிர்கள் தங்கள் தானியமணிகளையைத் பாத்திரங்களுக்குக் கொடுத்து விட்டுத் தாளுந்தாமுமாய் நிற்பன போல நீ விளங்குகின்றாய். ஆள் தான் மிச்சம். நீ அரசன்தான். அதில் சந்தேஹ மில்லை. யாகத்தின் பயனாக ஏற்பட்ட வறுமை மாத்திரம் நன்றாய் விளங்குகின்றது. தேவர்கள் சந்திரனது கலையை தினம் ஒன்றாய் உண்டாலும் சந்திரனுக்கு எங்

தக் குறைவும் வருகிறதில்லை. அந்தக் குறைவு நிறைவினையும் தருகின்றதே. நல்லது. வேந்தர் பெருமானே, குருதக்ஷிணையை எப்படியாவது நான் ஈட்டித் தீரவேண்டும். நீயில்லை யானால் எத்தனையோ பேர்கள் உலகத்தில். பெரிதே யுலகம். பேணுவோர் பலர். நீ நோயின்றி வாழ்வாயாக. சாதகம் சரத்காலத்து மேகத்தை யா யாசிக்கும்?'' என்று கூறி இருக்கை யெழுந்து புறப்பட்டு விட்டார்.

ரகு :—அங்ஙனம் எழுந்து போகும் கௌத்ஸரைத் தடுத்து, ''வித்துவானே, தங்களால் குருவுக்கு எப்பொருள் கொடுக்கப்படவேண்டியது? எவ்வளவு?'' என்றான்

கௌத்ஸன் :—அரசே, கேட்க வேண்டும். நான் என்னுடைய குரு வரதந்துமுனிவரிடத்தில் பதினான்கு கலைகளையும் ஸம்பூர்ணமாகக் கற்ற பின்னர், அவரைப் பார்த்துப், ''பெருமானே, நான் தங்கட்கு என்ன குருதக்ஷிணை கொடுக்க வேண்டும்'' என்று கேட்டேன். அவர் என்னுடைய குருபக்தியையும், பணிவிடைகளையும் மெச்சி ''ஒன்றும் வேண்டாமப்பா. உனக்கு எல்லா மங்களங்களும் உண்டாகட்டும், போய்வா'' என்று உத்தரவு கொடுத்தார். நான் எப்படியாவது சொல்லித்தான் தீர வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தேன். அதனால் குருவுக்குக் கோபம் வந்து விட்டது. பணத்தின் அருமையை எண்ணிப் பாராது நான் கற்ற கலைகளை விரல் விட்டு எண்ணிப் பார்த்து ''அடே, நீ என்னிடத்தில் பதினான்கு கலைகளைக் கற்றாய். கலை யொன்றுக்கு ஒரு கோடி. ஆகப் பதினான்கு கோடிகள் குரு தக்ஷிணை கொண்டு வந்து வை'' என்றார். நான் உன்னிடம் வந்தேன் உன்னிடத்தில் இருப்பது சட்டிபானை. பேருக்கு மாத்திரம் பிரபுவாயிருக்கின்றாய். நான் குருவுக்குக் கொடுக்க வேண்டிய பொருளோ பெரிது. இந்தச் சமயத்தில் நான் எப்படி உன்னைத் தொந்தரவு செய்வேன்!

ரகு :—இந்த வார்த்தைகளைக் கேட்டு கௌத்ஸரை நோக்கி, ''வித்வானே, குருதக்ஷிணை பெறவந்த ஒரு வித்யார்த்தி அதனை ரகுவினிடத்தில் பெற முடியாமல் இன்னொருவரைத் தேடிப் போய் விட்டான் என்னும் ஒரு புதிய அபவாதம் உம்மால் எனக்கு ஏற்பட வேண்டாம். இதோ என் அக்கினி சாலை. அதில் நாலாவது அக்னி போல் தாங்கள் இரண்டு மூன்று நாள் வசியுங்கள். அதற்குள் உமக்கு வேண்டிய பொருளை ஈட்டித்தர முயல்கின்றேன்'' என்றான்.

கௌத்ஸன் :—அரசே, அப்படியே யாகட்டும்.

பின்னர், ரகு வசிஷ்டமுனிவரால் கொடுக்கப்பட்ட ரதத்தின் மீதேறி பூமியிலுள்ள அரசர்களெல்லோரும் வெல்லப்பட்ட காரணத்தால் குபேரனோடு போர் புரிய எண்ணிப் படைகளை யெல்லாம் திரட்டித் தேரின்மீது வைக்க ஆணையிட்டு காலையில் போருக்குப் புறப்படுவதென்று தீர்மானித்திருந்தான். இச்சமயத்தில் பொக்கிஷப் பாதுகாவலர் அரசனிடம் ஓடி வந்து ''வேந்தர் பெருமானே, என்ன ஆச்சரியம். பொன் மழை பெய்து பொக்கிஷமெல்லாம் நிரம்பி விட்டது'' என அறிவித்தார்கள். உடனே, ரகு வேந்தன் அத்தனை பொன்னையும் கௌத்ஸருக்குக் கொடுத்தான். கௌத்ஸர், ''எனக்கேன் இத்தனை திரவியம்? குருதக்ஷிணைக்காக எவ்வளவு வேண்டுமோ அதற்கு மேல் இம்மி கூடத் தொட மாட்டேன்'' என்றார். ரகுவோ, ''எனக்கேனையா பணம்? பணத்தில் ஆசை யிருந்தால் நான் எல்லாவற்றையும் பிறர்க்குக் கொடுத்து விட்டுக் கோவணாண்டியா யிருப்பேனோ? எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றார். இந்த அரசனையும் அந்த யாசகனையும் பார்த்து நின்ற அயோத்தி ஜனங்களுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. என்ன காரணம்? கேட்டதற்கு மேல் அள்ளியள்ளிக் கொடுக்கும் ஒரு பிரபு, எவ்வளவு வேண்டுமோ அதற்கு மேல் பெற்றுக் கொள்ள விரும்பாத ஒரு யாசகன், இவ்விருவரும் உலகத்தில் இருப்பது அதிசயமல்லவா? எங்கேயாவது உண்டா? எல்லாம் நம் நாட்டில் உண்டு. இதைத்தான் மஹா கவி காளிதாஸர் ரகுவம்சம் ஐந்தாவது சருக்கத்தில் சப்த சித்திரம் செய்து காட்டுகிறார். அந்தச் சிற்பத்தினைத் தான் ஸஹிருதயர்கள் படித்துப் படித்துச் சுவைத்துச் சுவைத்துத் தேக்கெறிகின்றார்கள்.

ராமனும் ஸீதையும்.

(ஸ்ரீ ராஜநாயகி)

ஸந்தி—**5.**—தினம்—**1.**—நடுப்பகல். இடம்: பஞ்சவடீ ஆசிரமத்திலிருந்து கூப்பிடுதூரம்.

(பிரவேசம் :—லக்ஷ்மணன். வேகமாய்ச் செல்லுகையில் எதிரே வேகமாய் வரும் ராமனை சற்று தூரத்திற் கண்டு நிற்கிருன்.)

ராமன் :—(பரபரப்புடன் நெருங்கி வந்து) என்ன லக்ஷ்மண! இங்கு வந்து நிற்கிறாயே! ஆசிரமத்தில் ஸீதையின் கதி யென்னவாகும்? நீ ஏன் அவளைத் தனியே விட்டு வந்தாய்? என் வார்த்தையில் உனக்கு என் அலக்ஷிய புத்தி தோன்ற வேண்டும்? சீக்கிரம் சொல்—நிற்க வேண்டாம், போய்க் கொண்டே கேட்கிறேன்.

லக்ஷ்மணன் :—அண்ணு, தங்கள் ஆக்ஞையைக் காப்பாற்றுவதனால் தேவிக்குப் பிராண ஹானி நேரிடுமோ என்று பயப்படவேண்டியிருந்ததனாலேதான் இங்கு வந்து விட்டேன்.

ரா :—அதெப்படி! செவ்வையாய்ச் சொல்.

லக் :—நான் ஆசிரமத் துவாரத்தை விட்டு விலகாமல் அரைக்ஷணம் நின்றால் கோதாவரீ நதியில் விழுந்து விடுவதாக தேவி புறப்பட்டு விட்டார்கள். நானென்ன செய்யட்டும்? தங்கள் ஆக்ஞையை விட அந்த ஸமயம் தேவியின் பிராணன் தான் எனக்கு முக்கியமாகப் பட்டது.

ரா .—ஏன், எதற்காகப் பிராணனை விட வேண்டும்?

லக் :—தங்களுக்குப் பிராண ஹானி ஏற்பட்டுவிட்டதாகவோ, ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதாகவோ பலமான பிராந்தி தேவியாருடைய மனதில் புகுந்துவிட்டது. அது நான் அங்கு நிற்பதனால் பலமாயிற்று. என் ஸமாதானம் ஒன்றும் ஏறவில்லை. நானே—அண்ணி அவர்கள் சொன்ன வார்த்தைகளைத் திருப்பிச் சொல்ல நா கூசுகிறது! அதை முழுவதும் கேட்க வேண்டாமென்றுதான் காதைப் பொத்திக் கொண்டு அவர்களுடைய ஆக்ஞைப் படியே அவ்விடம் விட்டகன்றேன். அதிக நேரமாக வில்லை! இப்பொழுதுதான் அரை நாழிகை கூட ஆயிராது, நான் அங்கிருந்து புறப்பட்டு.

ரா :—வெகு புத்திசாலி! உன் திறமையை நீ தான் மெச்சிக் கொள்ளவேண்டும். இது யுத்தஸமயம் என்பதை மறந்தாயல்லவா! பயத்தினால் புத்தி கலங்கின ஸ்திரீக்கு ஸரி ஸமானமாகிவிட்டாய் நீ. அட லக்ஷ்மண! இரண்டு தவறுகளைச் சேர்த்தால் கணக்கு லேசாகிவிடும் என்று எந்த வாத்தியாரிடம் எந்தப் பள்ளிக் கூடத்தில் கற்றாய்? உன்னை நம்பி மோசம் போனேன் போலிருக்கிறதே! அதோ, ஆசிரமத் துவாரத்தில் ஸீதையைக் காணேமே! இருந்தால் நம்மைக் கண்டதும் ஓட்டமாய் ஓடி வருவாளே! என் மனதும் என்னை மீறிக் கலங்குகிறது, தம்பி. (ஆசிரமத்துக்குள் இருவரும் நுழைகிறார்கள்) ஸீதே, ஹே ஸீதே! (முதலில் மெதுவாயும் பிறகு உரத்தும் கூப்பிடுகிறான்) நீ குடிசையின் பின்புறமாக வா, நான் முன்புறமாக வருகிறேன்! சில சமயம் அவள் ஒளிந்து பிடிக்கச் சொல்லி விளையாடுவதுண்டு! இன்றைக்கு மட்டும் விளையாட்டு வேண்டாம், ஸீதே! ஹே, ஸீதே! (அங்கு மிங்கும் ஓடிப் பார்த்து விட்டு மூர்ச்சித்து விழுகிறான். லக்ஷ்மணன் பக்கத்தில் நின்று தாங்கிக் கொண்டு, அண்ணனைத் தன் மார்பில் சாய்த்தி முகந் துடைத்து விசிறி உபசாரஞ் செய்கிறான். மூர்ச்சை தெளிந்து) லக்ஷ்மண! ஸீதை இங்கு வந்தாளா? எங்கேயோ வெகு தூரத்தில் கடற்கரையோரத்தில் நின்று கொண்டு என்னை நோக்கித் முந்தாவணியை வீசிக் கூவி யழைத்தாற்போலிருந்தது; ஆனால் அவள் குரலைக் கடலோசை விழுங்கி விட்டது. நானும் தான் கூவினேன், ஆனால் என் குரலை நானே விழுங்கி விட்டேன். அவள் நிற்காமல் தயங்கித் தயங்கி என்னைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே போய்க் கொண்டிருந்தாள். இதென்ன விளையாட்டா, விளையா, லக்ஷ்மண! அவளை எங்கே காண்பேன்? இதோ

அவளுடைய வஸ்திரங்கள் கிடக்கின்றன, போர்த்துக் கொண்டு தூங்குகிறாளோ? இவ்வளவு நேரம் எண்ணாததெல்லாம் எண்ணி வீண் சஞ்சலப்பட்டோமே! (வஸ்திரங்களை ஆவலாய்த் தூக்கிப் பார்த்து மெதுவாய் உதறிப் பார்க்கிறான்.) சீ, என்ன முட்டாள் தனம், நிச்சயமாகவே என் புத்தி தடுமாறுகிறது! நானில்லாத சமயத்தில் அவளுக்கு நிஜத் தூக்கம் வருமா? என் அவஸ்தையைக் கண்ட பிறகும் விளையாட்டுத் தூக்கம் தூங்குவாளா? ஐயோ, லக்ஷ்மண! மோசம் போனேன்! நான் அந்த மாயமான் மேல் அவ்வளவு ஆத்திரம் காட்டியிருக்க வேண்டாம்! ஹா! (கண்ணீர் உதிர்க்கிறான்.)

லக்ஷ் :—அண்ணா, இனி சற்று நிதானமாய் யோசித்துச் செய்வோம். நீங்களே இப்படிக் குழந்தைப் போல் நடந்து கொண்டால் எனக்கு மேல் யோசனை ஓடவில்லை. நாமிருவரும் இன்னும் நீங்களே தலைமைவகித்துக் காரியத்தை நடத்துவோம்; தலையிருக்க வாலாடுமா?—பூமியையும் காடுகளையும் குகைகளையும் சல்லடை போட்டுச் சலித்து எடுப்போம், சமுத்திரத்தைக் கலக்கி வடிகட்டுவோம், நதிகளை வற்ற வைப்போம், சிரவண நக்ஷத்ரங்களை எட்டிப் பார்த்து விடுவோம். துஷ்ட மிருகங்கள் அல்லது ராக்ஷஸர்கள் அவளை பக்ஷித்திருந்தா லொழிய, தேவியை எப்படியும் கண்டுக் கொள்வோம். கவலைப்படாதீர்கள். எழுந்திருங்கள்! இந்த ஆசிரமத்தைச் சுற்றிலும், முக்கியமாய் கோதாவரீ தடத்தையும், அதிலும் நம்முடைய விருத்தர், பழைய ஸ்நேஹிதர், ஜடாயுஸ்ஸின் பர்வத சிகரத்தையும் சோதிப்போம். (ராமனை மெதுவாய்க் கையைப் பிடித்து அழைத்துச் செல்லுகிறான்.)

ரா :—எனக்கு வழி காட்டுவதற்காக வழி நெடுக பாதங்களை இந்தத் தாமரை இதழ்களில் முத்திரை யிட்டிருக்கிறாள்; தன்னுடைய மிருதுவான கடைக் கண் பார்வையை இந்தப் பெண் மான்களிடம் கொடுத்து விட்டுப் போயிக்கிறாள். இந்த சந்தனச்சாகைகள் என்னைக் கைகாட்டி யழைக்கின்றன. தன் அதரங்களை இந்தக் கோவைகளில் அடையாளமாக வைத்திருக்கிறாள், பற்களின் காந்தியை இந்தத் தும்பைப் புஷ்பங்கள் ஏற்றுக் கொண்டன. அவளுடைய தேஹகாந்தியை இதோ மாந்தளிர்கள் ஆசைப்பட்டு யாசித்து விட்டன. இந்தக் கஸ்தூரிமான் தன்னினத்தைச் சேர்ந்த மற்றொரு மானைத் தேடுவது போல் மோப்பம் பிடித்துச் செல்லுகிறது. அதன் பின்னேயே போவோம், வழி கண்டுபிடிப்பதில் காட்டு மிருகங்களுக்கு நம்மைவிட ஸஹஜமான அறிவு அதிகம்.

லக்ஷ் :—ஆம், அண்ணா! தாங்கள் சொல்வது வாஸ்தவம் தான். அதோ பாருங்கள் நாம் தேடின ஜடாயுஸ்ஸின் வட விருக்ஷம் தெரிகிறது. அவரைப் பார்த்தால் நமக்கு ஸரியான யோசனை சொல்லுவார். (மரத்தை நோக்கி வேகமாய்ச் செல்லுகிறார்கள்)—என்ன இங்கே, ரத்தம் சிந்தினது போல் தெரிகிறதே! எந்தப் பக்ஷியினுடைய இறகுகள் இப்படி ஏராளமாய்ச் சிதறிக் கிடக்கின்றன? இது ஏது, இங்கே ஒரு பெரிய புதிய வாள் இரண்டாய் முறிந்து கிடக்கிறது! ஏதோ யுத்தம் நடந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

ரா :—லக்ஷ்மண! சீங்கிரம் பார், அதோ யாரோ போர்வைக்குள் படுத்துப் புரண்டு கொடுப்பது போலிருக்கிறது! (நெருங்கி வந்து மரணாவஸ்தையில் இருக்கும் ஜடாயுவைக் காண்கிறார்கள்) தாத, ஏன் தங்களுக்கு இந்தக் கதி! யார் செய்த வேலை இது? யார் தங்களுக்கு சத்துரு? (லக்ஷ்மணன் ஜடாயுஸின் வாயில் தாகத்துக்குத் தண்ணீர் ஊற்றுகிறான்).

ஜடாயுஸ்:—(ஹீனஸ்வரமாக):—தாத ராம! நல்லவேளை உன்னைக் கண்டு விட்டேன். ராவணன் பரஸ்திரீயை அபஹரித்துக் கொண்டு ஆகாசமார்க்கத்தில் ரதத்தில் போனான்—அந்த ஸ்திரீயின் பிரலாபம் உன் பெயரைக் குறித்தாற் போல் காதில் விழுந்தது. அவளை ரக்ஷிக்க எண்ணி யுத்தம் செய்து பார்த்தேன்! இது தான் என் அந்தியகாலம். கண் இருட்டுகிறது. என்னை தர்ப்பையில் போடு. உன் பிதிருஸகாவாகையால் என்னை பிதிருஸ்தானத்தில் வைத்து நீ தஹனம் முதலிய உத்தரகிரியைகளைச் செய்து விடு!—மேலே பேச முடியவில்லை, (ஜாடை காட்டி அப்பால் சிதறிக் கிடக்கும் சிலம்பு மணிகளைக் காட்டுகிறார்.)

லக்ஷ்:—(தேடிப் பொறுக்கி) அண்ணா! இதோ பாருங்கள், இவை தேவியின் பாதச் சிலம்புகள் போலில்லையா?

ரா:—(பரபரப்புடன்) ஆமப்பா, அவளா யிருக்கு மென்றே தோன்றுகிறது. அடடா, மோசம் போயிற்றே! (ஜடாயுவை மெதுவாய்த் தூக்கி அடியில் கொழுந்தான தர்ப்பைப் புல்லைப் பரப்புகிறான்) அந்த ரதம் எந்த திக்கில் சென்றது. தாத! எங்நேரமாகிறது?

ஜடாயுஸ்:—(கிழக்கே கிடத்தியபடியிருந்து தலையைத் தெற்கே திருப்பிக் கொள்கிறார். இரத்தத்தைக் காட்டி) உலரவில்லை! நானும்.... (பேச முடியாமல் தலையைத் தெற்கு நோக்கி யசைக்கிறார்.)

(எல்லோரும் நிஷ்க்ரமணம்)

(ஸந்தி 5. முற்றிற்று.)

ஸந்தி **6**:—ஸுக்ரீவ ஸக்யம்

தினம் **1**. காலை. இடம்: ரிசியமூகபர்வதம்.

பிரவேசம்: ராம லக்ஷ்மணர்கள்.

ராமன்:—லக்ஷ்மண, இங்கே வா, என் கையைப் பிடித்துப் பார். (லக்ஷ்மணன் பிடித்துப் பார்க்கிறான்) ஜில்லிட்டு இருக்கிறதா, சுட்டுக் கொண்டிருக்கிறதா?

லக்ஷ்மணன்:—இரண்டு மில்லை, சாதாரண மாகத்தான் இருக்கிறது.

ரா:—நான் ராஜ்ய ஸ்ரீயைப் பெரிதாகக் கருத வில்லை, வனவாஸம் சேர்ந்ததைப் பாராட்ட வில்லை. என்னை மடியில் வைத்து, இடுப்பிலே எடுத்துக் கொஞ்சி வளர்த்த தாய் தந்தையரைப் பிரிந்ததையும் மறந்திருந்தேன், பரதனை அழச் செய்தேன். தகப்பனாரை அகாலத்தில் பரலோகத்திற் கனுப்பினேன். இந்த துக்க பரம்பரை எல்லாம் இதுவரையில் என் தலையில் ஒருவாறு ஸஹிக்கக் கூடிய பாரமாகத் தான் இருந்தது. ஆனால் ஸீதையை இழந்ததிலிருந்து என் பிராணன் தினேதினே படிப் படியாய் வற்றிவருகிறது. அவளைத் திரும்பப் பெறும் மார்க்கம் கொஞ்சமாவது புலப்படா விட்டால், நீதான் என்னுடைய முடிவை அயோத்தியில் தெரிவிக்க தூதனாகச் செல்ல வேண்டியிருக்கும் போலிருக்கிறது.

லக்ஷ்:—"நாசீலம் கீர்த்தயேத்" அசுப வார்த்தைகள் சொல்லக் கூடாது. மேலும் தேவியவர்கள் தம்மை மீட்கத் தாங்கள் வருவீர்களென்று நிச்சயம் எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

ரா:—ஆம், லக்ஷ்மண! அதுதான் என் மனதை உறுத்துகிறது! இக்க க்ஷணமே என் உள்ளத்தை அவள் அறிவதற்கேற்ற உபாயம் உண்டானால் என் துயர் பாதி நீங்கி விடும். இந்த ஹம்ஸங்களைப் பார்! உங்களைப் பழித்த ஸீதை இந்த வனத்தை விட்டுப் போய்விட்டாள் என்கிற உங்கள் கர்வத்தையும் விளையாட்டையும் மன்னித்து விடுகிறேன். நீங்கள் எனக்காக அவளிடம் தூது சென்று வாருங்கள். "ராமன் உன்னை மறக்கவில்லை, பயப்படாதே" இந்த நாலே வார்த்தை பாடம் செய்வது கடினமா?—அல்லிப்பூக்களைச் சுற்றி வரும் வண்டுகளா! உங்களைக் கூப்பிட்டுப் பயனில்லை; நீங்கள் என் ஸீதையைப் பார்த்திருக்க மாட்டீர்கள்! அவள் புன்னகையில் தோன்றும் பல்வரிசைகளின் ஒளி உங்கள் மேல் வீசியிருக்தால் இப்படித் தலையைச் சொரிந்து கொண்டு அல்லிக்காட்டில் அலையமாட்டீர்கள்! இந்தப் பெண் மானைப் பார்! எத்தனை உயரத்தில் மேயும் ஆண்மானை இங்கிருந்தபடியே உற்றுப் பார்க்கிறது! அதுவும் அங்கிருந்தபடியே இதன் அழைப்பைத் தெரிந்து கொண்டு துள்ளி இறங்குகிறது, பார்! ஏ, மான்களா! நானும் ஸீதையும் பார்த்துக்கொள்ள வழி சொல்லுங்கள். உங்களுக்கு வேடர் பயம் ஒரு நாளும் இல்லாதபடி நானே காவலா யிருக்கிறேன். ஆம், தேவர்களான சூர்ய சந்திரர்களே உண்மையைச்சொல்லப் பயப்படுகையில், புல் மேயும் அற்ப ஜந்துக்களான நீங்கள் என்ன உதவி செய்ய முடியும்? லக்ஷ்மண! எதற்கும் சாக்ஷிகளாகும் இந்த சூர்ய சந்திரர்கள் நமக்கு உண்மையைத் தெரிவிக்கும் வரையில் இவர்களுடைய கதியை நாம் தடுத்து விடுவோமே! நிரபராதிகளான நம்மைத் துன்பப்படுத்த யாருக்கு அதிகாரம்? ஸமுத்திரத்தைக் கலக்கி வற்றச் செய்து விடுவோம்; பர்வதங்களைப் பிளந்தெறிவோம், நதிகளை அடைத்து விடுவோம், வனங்களை அழித்து

விடுவோம்; வா, லக்ஷ்மண! அது தான் ஸரி! அது தான் வீரத்தனம். 'கொட்டினால் தேள்; கொட்டா விட்டால் பிள்ளைப் பூச்சி' என்பது உலக வழக்க மல்லவா?

லக்ஷ் :—அண்ணா! தங்கள் கோபத்தை அபராதம் செய்தவர் மேல் காட்டுவதே நியாயம். எவனோ ஒருவன் செய்த குற்றத்திற்காக கோடானு கோடி ஜீவர்கள் வாழும் லோகத்தையே அழிக்க ஆரம்பித்தால், நிரபராதிகளின் கதி என்ன ஆகும்?

ரா :—ஆம், லக்ஷ்மண! நீதான் எனக்கு ஸரியான ஸமயத்தில் கார்யாகார்யங்களைத் தெளிவாய் எடுத்துக் காட்டுகிறாய். நீ இங்கில்லாவிட்டால், இத்தனை நாள் என் வனவாஸமும் ஆயுளும் எப்படி எப்படியோ முடிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

லக்ஷ்:—''ஸர்வஸ் ஸ்வகார்யேஷ்வபண்டித:'' வைத்தியனும் தன் மகனுக்குத்தானே வைத்தியம் செய்யத் துணிகிறதில்லை. எல்லாம் தாங்கள் எனக்குப் போதித்துப் பதிய வைத்திருக்கிற பாடத்தைத்தான் இப்பொழுது தங்களிடம் ஒப்புவிக்கிறேன்.

ரா :—லக்ஷ்மண! இப்பொழுதுதான் உன் பெருமையை உணர்கிறேன், இந்தப் பதின்மூன்று வருஷங்களாய் நீ உன் பத்னியை விட்டுப் பிரிந்திருக்கிறாயே, நீ தான் தீரன். அவளைப் பற்றி ஸீதை எப்பொழுதாவது பேச்செடுத்தாலும் நீ வேறு பேச்சு ஆரம்பித்து விடுவாய்.

லக்ஷ் :—அப்படியல்ல, ஊர்மிளை இப்பொழுது இன்ன இடத்தில் இன்ன நிலைமையிலிருக்கிறாள் என்று எந்த க்ஷணத்திலும் எனக்கு நிச்சயம் தெரிந்திருக்கிறபடியால் என் துயர் வேறு வகைப்படும். மேலும் தாஸன், ஸேவகன் என்கிற தொழிலுக்கே பிறந்தவர்கள் சொந்த ஸுகதுக்கங்களை வைத்துக் கொள்ளக் கூடாது. ஆண்டவன் சிலரைத் தான் யஜமான ஸ்தானத்துக்கென்று படைத்திருக்கிறான்; ஸுக துக்கங்கள் அவர்களுக்குத் தான் ஏற்பட்டது.

ரா :—எந்த வஸ்துவிலும் அதிகப் பிரீதி வைத்தால் அந்த வஸ்து பாதிக்கப்படும் பொழுது நமக்கு துக்கம் ஏற்படுகிறது. ஒருவன் ஒன்றிலும் பிரீதி வைக்காமல் இருப்பதாமேல்?

லக்ஷ் :—அல்ல, அந்தப் பிரீதி இவ்வளவு நாள் சலிக்காமல் நின்றது நம் அதிர்ஷ்டம் என்று திருப்தியடைவது தான் யுக்தம்.

ரா :—பிரீதிக்குப் போதும் என்கிற அளவுமுண்டோ?

லக்ஷ் :—ஆனால் துக்கத்தை நாமாக வரவழைத்துக் கொள்ளலாமா?

ரா :—உன் வார்த்தைகள் உன் ஸாமர்த்தியத்தை ஒத்திருக்கின்றன!

லக்ஷ் :—அண்ணா! யஜமானவர்கள் ஹிருதயம் அரக்குப் போல வெகு சீக்கிரம் இளகும், வெகு சீக்கிரம் இறுகும்! ஸேவகனுடைய ஹிருதயம் இரும்புபோல் இளக வெகு நேரம் செல்லும், இறுகுவது மட்டும் வெகு சீக்கிரம். அதோ யாரோ இருவர் மாக்கிளைகளின் மறைவில் உட்கார்ந்து கொண்டு நம் பேச்சையே கவனித்துக் கேட்கிறார்கள் போலிருக்கிறது, பாருங்கள்! தெரிகிறதா? நான் போய்ப் பார்த்து வருகிறேன்.—(சற்று தூரம் போய் ஜாடை காட்டுகிறான்; ஹநுமான் பிரவேசம்: ராம லக்ஷ்மணர்களை வந்தனம் செய்து நிற்கிறார்.)

ரா :—பெரியவரே, உட்காரும்! (ஹநுமான் மனுஷ்ய ரூபத்துடன் உட்காருகிறார்.)

லக்ஷ் :—இதென்ன, சற்று முன் ஏதோ ஒரு ஜந்துவைப் போல் தோன்றினீர்களே! அதெப்படி?

அநுமான் :—நாங்கள் வானரஜாதி, எங்களில் சில பிரமுகர்களுக்கு இஷ்ட ரூபம் கிரஹிக்க முடியும்.

லக்ஷ் :—அங்கே இன்னொருவர் சற்று சிறு பிள்ளையாக உம்மோடு பேசிக் கொண்டிருந்தாரே, அவர் எங்கே மறைந்து விட்டார்? யாரவர்?

அநு :—அவர்தான் இந்தக் கிஷ்கிந்தாதிபதி யான வாலிக்குத் தம்பி, யுவராஜா ஸுக்ரீ வன் என்பார்கள்.

லக்ஷ :—அவர் உம்மை அனுப்பினரா, நீராக இங்கு வந்தீரா?

அநு :—இரண்டுந்தான்,—மூன்றுந்தான், தாங்கள் அழைத்துந் தான்.

லக்ஷ :—அவர் ஏன் உம்மோடு வரக்கா ணோம்?

அநு :—நான் அவருடைய பரம விசுவாசத் துக்குக்குரிய மந்திரிதான், ஹநுமான் என்று கூப்பிடலாம் (தன் கன்னத்தைச் சொரிகிறார்.)

லக்ஷ :—நீங்கள் யாரையோ தேடுகிறமாதிரி இருந்ததே, யாரை?

அநு :—யாரையு மில்லை; எங்களைத்தான் யாராவது தேடக்கூடும் என்று சங்கித்துச் சற்று மறைவிடம் தேடினேம். உங்களைப் பார்த்த பிறகு நீங்கள் சத்துருக்களல்ல என்று நிச்சயம் ஏற்பட்டு விட்டதால், இனி நாங்கள் ஒளிய அவசிய மில்லை.

லக்ஷ :—உங்களுக்கும் சத்துருக்களுண்டா?

அநு :—இந்தக் கிஷ்கிந்தாதிபதியே தான்.

லக்ஷ :—அண்ணன் தம்பிகளுக்குள் விரோ தம் வரும் போலிருக்கையிலேயே யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்திருக்கலாமே! ஜ்யேஷ்டர்தான் கனிஷ்டருடைய அபராதத் தை க்ஷமிக்க வேணும்.

அநு:—எங்கள் தேசத்து ஆசாரம் விபரீதம்.

லக்ஷ :—கனிஷ்டரான யுவராஜாவைப் பார்த் தால் மஹா தேஜஸ்வியாய், மஹா பராக்ரம சாலியாய்க் காண்கிறதே! எங்களைக் கண்டு அவர் பயப்பட நியாய மில்லையே!

அநு :—ஜ்யேஷ்டரைப் பார்த்த பிறகு தங் களுடைய அபிப்பிராயம் வேறு படலாம்— நீங்கள் ராஜ குமாரர்கள் என்று தெரிகிறது; ஆனல் ரிஷிகுமாரர்களோ வென்று ஸந்தேஹ மும் ஜனிக்கிறது.

லக்ஷ :—இவர் தான் என்னுடைய ஜ்யேஷ் டர். நாங்கள் கோசலாதிபதியான தசரத சக்ரவர்த்தியின் குமாரர்கள். எங்கள் கனிஷ்ட மாதாவின் ஆக்ஞையைத் திருப்தி செய்வதா கச் சொன்ன தன் வாக்கை நிறைவேற்றும் பொருட்டு எங்கள் பிதா எங்களிவருக்கும் வனவாஸம் விதிக்க நேர்ந்தது. அதுவே அவ ருக்கு மாண ஹேதுவுமாகிவிட்டது.

அநு :—உங்கள் ஜ்யேஷ்டர் பிதாவுக்குப் பிறகு ராஜ்யாபிஷேகம் செய்து கொண்டு விட் டாரா?

லக்ஷ :—பிதா காலமாகி விட்டாலும், அவ ருடைய ஆக்ஞை இன்னும் காலமாக வில்லை.

அநு :—ஆனல் இப்பொழுது தேசம் அராஜ கமாக நிற்கிறதா?

லக்ஷ :—இரண்டாவது ஸஹோதரன் பர தன் ராஜ்யபரிபாலனம் செய்கிறான். ஜ்யேஷ்ட ருடைய பாதுகையை ஸிம்ஹாஸனத்தில் வை த்துத் தான் மந்திரியாகவே இருந்துகொண்டு அயோத்திக்குப் போகாமல் நந்திக்கிராமத் திலிருந்து கொண்டே ராஜ்யபரிபாலனம் செய்து வருகிறான். இன்னும் ஒரு வருஷத் துக்குக்குள் ஜ்யேஷ்டர் வந்து ராஜ்யத்தை ஒப்புக் கொள்ளாவிட்டால் அக்நிப் பிரவேசம் செய்து விடுவான்.

அநு :—அப்படியானல் இப்பொழுதே நீங் கள் ஊருக்கு திரும்பிப் போகப் போகிறீர் களா?

லக்ஷ :—உங்கள் ராஜா இருக்கச் சொன் னல் இருக்கிறோம்.

அநு :—தம்பி பரதன் பிராணன் போனல் போகட்டுமா?

லக்ஷ :—இதோ ஜ்யேஷ்டரான ராம ருடைய—(நான் தான் லக்ஷ்மணன்)—பிராண னைக் காப்பாற்றிக் கொண்டல்லவா பரதனிடம் போகப் புறப்பட வேண்டும்.

அநு :—ஆம், ஸ்ரீராமனுக் கென்ன? ஏன் முகம் சூரியாஸ்தமனத்துத் தாமரைபோல் வாடிக் கிடக்கிறது?

லக்ஷ் :—அவருடைய ஸ்திதியை நீங்கள் சரியாய் கிரஹித்திருக்கிறீர்கள்.

அநு :—அதன் காரணத்தைத் தான் கிரஹிக்க முடியவில்லை.

லக்ஷ் :—அவருடைய தர்மபத்நீ ஸீதையின் வியோகந்தான் காரணம்.

அநு :—மரணம் நேர்ந்து விட்டதா அவருக்கு?

லக்ஷ் :—அல்ல, அபஹரணம் என்று சங்கிக்கிறோம்.

அநு :—யாரா யிருக்கலாம்?

லக்ஷ் :—ரக்ஷோகணங்களால் தானிருக்க வேண்டும்.

அநு :—பக்ஷித்திருப்பார்களோ?

லக்ஷ் :—கிருத்ர (கழுகு) ராஜனான ஜடாயுஸ் மரண காலத்தில் சொன்ன வார்த்தைகள் தான் எங்களுக்குச் சற்று தைரியம் அளிக்கின்றன. லங்காதிபதியான ராவணன் தேவியை அபஹரித்துக் கொண்டு ஆகாச மார்க்கமாகப் போனதாகச் சொன்னார்.

அநு :—அப்படியானால் எங்கள் வசத்திலும் ஆபரணங்கள் முடிந்த ஒரு வஸ்திரத் துண்டு அகப்பட்டிருக்கிறது. அவை ஸ்த்ரீகள் அணிவது தான் ஸந்தேஹமில்லை. ஆகாசத்திலிருந்து தான் விழுந்தது. எங்கள் பாதத்தில் தான் விழுந்தது.

ரா :—(பரப்பரப்புடன்) எங்கே அதைக் காட்டுங்கள் பார்ப்போம்!

அநு :—அவற்றை எடுத்துக் கொண்டு ஸுக்ரீவனையும் அழைத்து வருகிறேன் (நிஷ்க்ரமணம்.)

லக்ஷ் :—நான் அதிகம் பேசிவிட்டேனோ?

ரா :—உங்களிருவருடைய வாக் சாதுர்யம் என் துக்கத்தை மறக்கச் செய்தது. இந்த வனசரப் பிரகிருதிகளிலேகூட இவ்வளவு தீக்ஷணமாயும், ஸ்பஷ்டமாயும் பேசக்கூடியவர்கள் உண்டென்று இன்றைக்குத்தான் எனக்கும் தெரிந்தது. அவர் உனக்குச் சளைத்தவராகப் படவில்லை, லக்ஷ்மணா!

லக்ஷ் .—போகப் போக நான் தான் பயந்து கொண்டே பேசினேன். ஆரம்பத்திலிருந்த தைரியமும் அலக்ஷியத்தனமும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தன. அதோ, வந்து விட்டார்கள் இருவரும்; கையில் ஏதோ சிறு வஸ்திர முடிச்சை வைத்துக் கொண்டிருக்கிறார் ஹநுமான். மேலே என்ன சொல்ல வேண்டும், அண்ணா?

ரா :—எல்லாம் உனக்குத் தெரியாதா? என்னை ஒன்றும் கேட்க வேண்டாம், அப்பனே! (ஹநுமான் ஸுக்ரீவன் இருவரும் பிரவேசம்)

ரா :—(எழுந்திருந்து ஸுக்ரீவனுக்கு ஒரு பாறையைக் காட்டிவிட்டு உட்காருகிறான்.) வானர சிரேஷ்டர்களே, உங்களுக்கு நான் நல்வரவு கூறுகிறேன். இது உங்களுடைய ராஜ்யமாகையால் நீங்களும் எங்களுக்கு அதிதி ஸத்காரம் செய்ய நியாயமுண்டு. அசுவமேத யாகத்தினால் ஸார்வ பௌமனான எங்கள் பிதா சக்ரவர்த்தி அவர்கள் ராஜ்யத்தை என் தம்பி பரதனுக்கும் வனத்தை எனக்குமாக விபாகம் செய்து கொடுத்திருக்கிறார். வனத்தில் நான் பரதனுடைய ஸேவகன்; ராஜ்யத்தில் பரதன் என்னுடைய ஸேவகன்; இவன் தான் என் கனிஷ்டன் லக்ஷ்மணன்.

ஸுக்ரீவன் :—ஹே ராஜன், ஹே ராம! தங்களுடைய பாதகமலங்கள் இந்த ராஜ்யத்தின் எல்லையை மிதித்த தினமே எங்களெல்லாருக்கும் ஸுதினம்; தங்களுக்கு நேர்ந்திருக்கிற துக்கத்தை அறிந்து கொண்டேன். எனக்கு அதே மாதிரியான துக்கம் நேர்ந்திருப்

பதால், ஸ்வாநுபவத்தினால் ஏற்படக்கூடிய யதார்த்தமான அநுதாபம் எனக்குத் தங்களிடம் ஏற்பட்டிருப்பது நியாயந்தான் என்று லோகம் ஒப்புக்கொள்ளும். இந்த வஸ்திரத்தையும் ஆபரணங்களையும் பாருங்கள்.

ரா :—(வஸ்திரத்தைப் பார்த்து விட்டு) ஹா! ஸீதே! (அங்கங்கள் நடுங்கிப் பிறகு மூர்ச்சித்துச் சாய்கிறான். (அநுமார் தன் மடியில் ராமனைப் படுக்கவைத்து சரீரத்தைத் தழுவிக் கொடுக்கிறார். லக்ஷ்மணன் தாமரை இலைகளால் விசிறுகிறான். மூர்ச்சை தெளிந்து)—ஹே! பிரியே, எங்கே ஒளிந்திருக்கிறாய்? நீ போன மார்க்கந் தெரிந்தால் நான் உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து விடுவேனே!

சுக்ரீ :—இது ஸீதாதேவியினுடைய வஸ்துக்கள் என்பது நிச்சயமானால், நாம் அவர்களை நிச்சயம் காண்போம்!

ரா :—(முடிச்சைப் பிரித்து நகைகளைப் பார்த்து விட்டு) லக்ஷ்மணா; நீ பார்த்தவரையில் உனக்கென்ன தோன்றுகிறது?

லக்ஷ் :—பாதச்சிலம்புகளை மட்டுந்தான் தினம் தேவியின் பாதங்களை நமஸ்கரிக்கையில் பார்த்திருக்கிறேன். மற்றவை எனக்குத் தெரியாது.

ரா :—அப்படியானால் ஜடாயுஸ் சொன்னது நிச்சயமாகிறது. லக்ஷ்மணா, நாம் இருவரும் லங்கைக்குப் புறப்படுவோம்; வழியில் தோன்றும் விக்கினங்களை ஆக்கிரமித்து நாசம் செய்வோம், புறப்படு சீக்கிரம்!

சுக்ரீ :—மகாராஜ; மஹா சமுத்திரத்தில் தாங்கள் நடந்து செல்லக்கூடியதான ஸேதுவைப் பாறைகற்களைக் கொண்டு நிர்மாணம் செய்யக்கூடிய தோழர்கள் எங்கள் கூட்டத்தில் இருக்கிறார்கள்; வேலை ஆரம்பித்தால் ஒரே வாரத்தில் முடித்து விடுவார்கள்.

ரா :—அவர்களை நீர் அழைத்துவர முடியுமா?

சுக்ரீ :—நான் அவர்கள் வசிக்கும் ராஜ்யத்தில் பிரவேசித்தால் என் ஜ்யேஷ்டனை வாலி ராஜன் என்னைக் கொன்று விடுவான். இந்த ரிசியமூகபர்வதத்தில் மட்டும் அவன் பிரவேசிக்கக் கூடாதென்று சாபம் பெற்றிருக்கிறான்.

ரா :—உங்களிருவருக்கும் எதனால் விரோதம் ஏற்பட்டது?

சுக்ரீ :—துந்துபி என்னும் மஹிஷாஸுரன் எங்களுடைய உத்தியானங்களை அழித்து வந்தமையால் அவனை வதஞ் செய்யப் புறப்பட்ட வாலி ராஜனைக் கண்டு பயந்து அவ்வரக்கன் பூமிக்குள் வெகு தூரம் சென்று குகைக்குள் புகுந்தான். அவனைத் துரத்திக் கொண்டு வாலியும் குகைக்குட் புகுமுன் என்னை வாயிலிற் காவல் வைத்துப் போனார். நான் வெகு நாட் காத்திருந்து கடைசியில் குகைத் துவாரத்தில் ரத்த வெள்ளம் நுரையுடன் பெருகி வருவதைப் பார்த்து, ''யுத்தம் முடிந்து விட்டது, இனி நம் உதவி தேவையில்லை'' என்று தெரிந்து கொண்டேன். ஆனால் ஒரு ஸமயம் துரதிருஷ்டவசமாக வாலி வதம் செய்யப்பட்டு அவனுடைய ரத்த வெள்ளம் பெருகி வந்திருந்தால் அப்பொழுது சத்துருவான மஹிஷாஸுரனும் அந்தக் குகையை விட்டு வெளியேற மாட்டாமல் சாகட்டும் என்று ஒரு பெரியபாறையைப் புரட்டிக் குகைவாயை அடைத்து விட்டு ராஜ்யத்துக்குத் திரும்பி விட்டேன். அந்தப் பாறையும் நாங்கள் மூவர் மட்டுமே (ஹநுமானைப் பார்த்து) தனியாக நின்று புரட்ட முடியும். வாலி உயிருடனிருந்தால் அந்த பாறையைத் தூக்கித் தள்ளிவிட்டு வெளியே வந்து விடுவார் என்று நினைத்து அப்படிச் செய்தேன். என் கருத்தைத் தப்பாக கிரகித்துக் கொண்டு அன்று முதல் என் ஜ்யேஷ்டர் என் மேல் பரமத் துவேஷங்கொண்டு என்னை ராஜ்யப்பிரஷ்டம் செய்து எனது பிரியையான மகா ரூபவதியான தாரை யென்னும் மஹிஷியையும் அபஹரித்துக் கொண்டார்; என்னை வதஞ் செய்து விடுவாரோ வென்று பயந்து கொண்டே காலந் தள்ளுகிறேன். இந்த மந்திரி ஹநுமான்

எனக்குத் துணை யில்லாவிட்டால் நான் இங்கே ஸஞ்சரிக்க முடியாது.

அநு :—ஸ்ரீராம, ஸுக்ரீவன் சொன்னது முழுவதும் யதார்த்தமே.

ரா :—அப்படியானால் வாலியோடு நீ துவந்துவ யுத்தம் செய்ய மாட்டாயோ?

சுக்ரீ :—செய்வேன், ஆனால் முதலில் என் பிராணனிடத்தில் நிராசையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ரா :—(புன்னகை கொண்டு) பயப்படாதே! நாளைக்கு அவனை நீ யுத்தத்துக்கு அழை; உனக்கு ஆபத்து வரும் போலிருந்தால், நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். நம்மிருவருக்கும் ஒரே மாதிரியான துக்கம் ஏற்பட்டிருக்கிறது. நமது ஸ்நேகம் ஆஹுதி பெற்ற அக்நி போல் வளரும் பொருட்டு அக்நி ஸாக்ஷியிலும் இந்த அக்நி போன்ற (ஹநுமான் முகத்தைப் பார்த்து)—பரிசுத்தனான ஹநுமான் ஸாக்ஷியிலும் நாம் கை கோத்து ஸத்யம் செய்வோம்! (ஹநுமான் காய்ந்த குச்சிகளைப் பொறுக்கித் தீ மூட்டுகிறான்—ராம ஸுக்ரீவர்கள் கை கோத்துக் கொண்டு வலம் வருகின்றனர்.)

(எல்லோரும் நிஷ்க்ராணம்.)

(ஸந்தி: **6**—முற்றிற்று.)

கோபம்–பாபம்–சாபம்: அஹல்யை யார்?

(குருதத்தன்)

பாபம் என்றால் என்ன?

ஸ்ரீவியாஸ பகவான் 18 புராணங்கள் எழுதியிருக்கிறாரல்லவா? எதற்காக? பேதை ஜனங்கள் வெகு எளிதில் பாபம் புண்ணியம் இவை இரண்டையும் அறிந்து பாபத்தை நீக்கிப் புண்ணியத்தைக் கைக்கொண்டு கடைத்தேறும் பொருட்டே யென்பது கற்றோர் அறிக்கை. பிறருக்கு உதவி செய்வதும் பிறருக்குத் தீங்குண்டாக்குவதும் முறையே புண்ணியமும் பாபமுமாகு மென்பது அப் புராணங்களின் ஸாரம். "பசுக்கள் பிறருடைய சுகத்துக்காகவே பால் தருகின்றன. மரங்கள் பிறருடைய நன்மைக்காகவே பழந் தருகின்றன. நதிகள் ஜனங்களின் சௌக்கியத்துக்காகவே ஜலப் பெருக்கைக் கொண்டு வருகின்றன. மேகங்கள் லோகத்தின் க்ஷேமத்துக்காகவே மழை பொழிகின்றன" என்று கற்றுணர்ந்தோர் உதாரணமாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

பிறருக்கு உபயோக மில்லாமல் இடைஞ்சலுண்டாகும்படி செய்யுங் காரியங்களெல்லாம் பாபமென்றே சொல்லவேண்டும். தன் காரியத்துக் கிடைஞ்சலிருந்தாலும் பிறருக்கு நன்மை செய்பவர்களை ஸத்துக்களென்றும் தன் காரியங்களுக் கிடைஞ்சலில்லாமல் பிறருக்கு நன்மை செய்பவர்கள் சாமான்ய ரென்றும் தன் சௌகரியத்தை யுத்தேசித்துப் பிறருக்கு இடைஞ்சல் செய்பவர்களை மனுஷ்ராக்ஷஸர்களென்றும் தனக்கும் உபயோக மில்லாமல் பிறருக்கும் பிரயோஜனமில்லாமல் செய்பவர்களுக்கு எப்படிப் பெயரிடுவதென்று தெரியவில்லை என்றும் பர்த்ருஹரி முதலிய கற்றுணர்ந்தோர் கூறுகின்றனர். தன் மனப்பாங்காக பிறர் நடந்து கொள்ளாவிட்டால் மனத்தில் சஞ்சல முண்டாகிறது. இம் மனப் பொங்குதலுக்குக் 'கோபம்' என்று பெயரிட்டிருக்கிறார்கள். சிலர் இக் கொந்தளிப்பை யடக்கிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் வெகுவாய்க் கொண்டாடத்தக்கவர்கள். சிலர் இந்தக் கொந்தளிப்பை யடக்கமுடியாமலும் முன்பின் யோசனை செய்ய மனதுக்கு இடங்கொடாமல் பேச்சிலோ நடையிலோ காட்டிக் கொள்ளுகிறார்கள். சிலர் கையிலிருக்கிற அல்லது தம் முன்னிருக்கிற விலையுயர்ந்த சாமான்களை உடைத்து விடுகிறார்கள்; பின் வருந்துகிறார்கள். இம்மாதிரி செய்வது மானிடருக்கு மாத்திரம் இயல்பல்ல, ஸர்வஸங்க பரித்தியாகம் செய்து தபஸ், ஞானம் எல்லாவற்றிலும் மேன்மையடைந்த ரிஷிகளுக்குங்கூட இக் கோபம் சகஜம். அதனால் சாபம் கொடுக்கிறார்கள். இக் கோபத்தின் விளைவு பாபமே. துர்வாஸரும் விசுவாமித்திரரும் தகுந்த உதாரணங்கள். நமது புராணங்களில் இதற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுள் முக்கியமாக சில சம்பவங்களை எடுத்து விவரிக்கவேண்டியது வெகு அவசியம். முதன் முதல் அஹல்யையின் கதையை எடுத்துக் கொள்ளுவோம்.

இவ் வஹல்யையின் சரித்திரம் வெகுவாய் பொது ஜனங்களுக்குத் தெரியும். அதிலும் ராமாயணம் படித்தோர்க்கும் கேட்டோர்க்கும் வெகு தெளிவாகத் தெரியும். கற்றுணர்ந்தோர்க்கு "அஹல்யை பாபியா அல்லது சாபத்தின் பயனை யனுவித்தவளா?" என்று ஒரு சந்தேகம். பெரும் பான்மை ஜனங்களும் கற்றுணர்ந்தோரும் அவள் செய்த பாபத்தால் தனக்குப் புருஷனிட்ட தண்டனை என்றே நினைக்கிறார்கள். பிரதி தினமும் வெகுவாய் எல்லா ஹிந்துக்களும் திரௌபதி, ஸீதா, அஹல்யை, தாரை, மண்டோதரி, முதலிய இவ்வைந்து கன்னிகைகளையும் மனதால் நினைத்தாலே எல்லா பாபங்களும் இடர்களும் நீங்குமென்று துதிக்கிறார்கள். அப்படியிருக்க அஹல்யை பாபிஷ்டையானால் அவள் துதிக்கப்படுவளா? அவளை பதிவிரதா சிரோமணிகளுக்குள் முக்கியமானவளென்று தேர்ந்தெடுத்திருப்பார்களா அல்லது ஸ்ரீராமன் கௌதம தடத்துக்குப் போய் அஹல்யைக்கு நன்மை செய்து அவளை நமஸ்கரித்திருப்பாரா? இருக்கவே முடியாது. அஹல்யையின் ஜனன

சரித்திரத்தை யறிந்தோர்க்கு இது நன்கு விளங்கும். ஆனால் வெவ்வேறு புராணங்களில் வெவ்வேறு விதமாகக் கதையை விவரித்திருக்கிறார்கள். அவற்றிலொன்றில் நான் சொல்லப் புகும் கதை சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கேட்டால் அஹல்யையை நாம் நினைக்கவேண்டியது அவசியமென்றும் அவள் பாபியல்லள் என்றும் இடுசாபத்தாலே தான் கஷ்டப்பட்டாளென்றும் புலப்படும்.

அஹல்யை யார்?

வெகு காலத்துக்கு முன்பு பிரம்மதேவர் தன் பிரதான பட்டணமாகிய 'பிரம்ம நகரி' யில் ஓர் ஸர்வகலாசாலை ஸ்தாபனம் செய்தார். அக் கலாசாலைக்குத் தலையங்கத்தினராகவும் முக்கிய உபன்யாஸகராகவும் இருந்தவர் பிரம்மதேவரே. தனக்கு ஓய்வுள்ள சமயத்தில் மட்டுமே உபன்யாஸங்கள் செய்வார். அக்காலத்தில் கலா ஞானத்துக்கு ஆசைப்பட்டு அக்கல்லூரிக்குச் சென்றவர்கள் சிலரே. தேவர்களில் அநேகரும் மானிடரில் சிலரும் சென்றார்கள். அரக்கர்கள் முற்றும் அனுதாவு செய்ததுமன்றி பஹிஷ்காரமும் செய்தார்கள். அப்படியிருந்தும் அக் கலாசாலையிற் பயின்றவர்களுக்குக் கல்வி முடிவடைந்து அவ்வவர்களின் கலைகளுக்குள்ள அடையாளப் பத்திரிகை பெற்று, குருவால் புத்திமதி கூறப் பெற்று தத்தமிடம் போய்ச் சேர்ந்தார்கள். இப்படிப் பயின்றதில் தேவர்களில் முக்கியமானவர் "இந்திரன்"; மானிடரில் முக்கியமானவர் "கௌதமர்". இவ்விருவரும் இணைபிரியாத நண்பர். கலாசாலைப் படிப்பு நீங்கி எல்லோரும் தத்தமிடத்துக்குப் போய்ச் சேர்ந்தார்களென்றாலும், கௌதமர் மட்டும் அங்கேயே தனக்கு வேதாந்தத்தில் சிற்சில சந்தேகங்கள் தோன்றிவிட்டதால் அவைகளைத் தீர்த்துக் கொண்டு போக வேண்டுமென்று தங்கி விட்டார். மாதங்கள் நடந்தன. அவரைக் கண்டு ஸந்தேகம் தீர்த்துக் கொள்ள பிரம்மதேவரைப் பார்த்துப் போக விஷ்ணு, சிவன், சுப்பிரமணியக்கடவுள், கணபதி, குபேரன் முதலியோர், ஒருவர் மாற்றி யொருவராக பிரம்மதேவருக்கு ஓய்வுள்ள சமயமெல்லாம் வந்து கொண்டிருந்தமையால், கௌதமருக்கு அவகாசமில்லாமலே போயிற்று.

ஒரு நாள் யோசனையில் ஆழ்ந்தார், "எல்லாக்கலைகளுக்கும் அதிஷ்டான தேவதை பிரம்ம பத்தினியான கலைமகள் ஸரஸ்வதியல்லவா? ஏன் அத் தேவியை நேரில் நமஸ்கரித்து தெரிந்து கொள்ளக் கூடாது" என்று எண்ணினார். கலைவாணியை தரிசிக்கிறதென்ற தீர்மானத்துக்கு வந்தார். மறு தினம் காலையிலெழுந்து தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு கலைவாணி இருக்கும் மாளிகையை யடைந்தார்.

கௌதமர் கதவருகில் சென்றார். அச்சமயம் ஸரஸ்வதிதேவி கண்ணாடியில் தன் முகம் பார்த்து அலங்காரம் செய்து கொண்டிருந்தார். யாரோ வந்திருப்பதை யறிந்த கலைவாணி உடனே கண்ணாடியிற் றோன்றிய பிம்பத்தினின்று தன் யோக சக்தியால் ஒரு பதுமையைச் சிருஷ்டி செய்து அதைக் கதவண்டை யனுப்பி, 'வந்திருப்பவர் யார்? வந்த காரணமென்ன?' என்று விசாரிக்கச் செய்தார். கண்ணாடிக்கு வடமொழியில் அஹ்யா என்றும் ஒரு பெயருண்டாம். கண்ணாடியினின்றும் பதுமை சிருஷ்டி செய்யப்பட்டதால் அதற்கு அஹல்யை என்று காரணப் பெயர் கொடுக்கப்பட்டது. அஹல்யை கௌதமர் வந்த காரணமறிந்து கலைமகளிடத்தில் கூறினார். அஹல்யையைக் கௌதமரின் சந்தேகங்களைத் தீர்க்கச் சொல்லி திரும்பவும் அனுப்பினார். அது கண்ட கௌதமர் "தங்களிடம் சந்தேகங்கள் தீர்த்துக் கொண்டால் தாங்கள் குருஸ்தானத்தை யடைந்ததாகும். நான் தங்களுக்கு வணங்க வேண்டியவரும். இத்தகைய கஷ்டங்கள் எதற்கு? நான் தேவியின் முகமாகவே தெரிந்து கொள்ளுகிறேன்" என்றார். இவ்விஷயத்தை அஹல்யை ஸரஸ்வதி தேவியிடம் தெரிவித்தவுடன், தேவி புன்னகை புரிந்து நீ மறுபடி யவரிடம சென்று "நானே தங்கள் அடிபணிந்து ஸந்தேகங்களைத் தீர்க்க வந்தால், அப்பொழுது ஆக்ஷேபணை என்ன என்று கேள்" என்றாள். அது கேட்ட கௌதமர் "அப்பொழுது தயார்" என்றார். உடனே கலைவாணி வெகு சந்தோஷப்பட்டு பிரம்மதேவருக்குத் தகவல் சொல்லியனுப்பி இருவரும் யோசனை செய்து அஹல்யையை கௌதமருக்கு யதாக்கிரமமாக பாணிக்கிரஹணம்

செய்து கொடுத்தார்கள். முனிவர்கள், தேவர்கள் எல்லோரும் சடங்குக்கு வந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர். இதில் திருப்தி யில்லாதவர் இந்திரன் ஒருவரே. "தேவலோகத்தில் இருக்கிறவர்களுள் தாம் ஒருவர் எல்லா வைபவங்களோடு கூடியிருக்கும் போது, தம்மை யவமதித்து இவ்வளவு ரூபலாவண்யம் பொருந்திய இவ்வஹல்யையை மானிடனுக்குக் கலியாணம் செய்து கொடுத்தார்களே" என்று துக்கித்து வெகு நேரம் திக்பிரமை பிடித்தவர் போல் ஒன்றும் தோன்றாதவராய் எவரிடமும் வாய்திறவாமல் உட்கார்ந்திருந்து மணமரியாதைகளைப் பெற்றுக் கொண்டு அமராவதியையடைந்தார். இச்சம்பவங்கள் நடந்து நாட்கள் கடந்த போதிலும் அவருக்கு அந்த நினைவு மறக்கவே யில்லை. எப்படியாவது இந்த அஹல்யையை ஒரு நாளாவது தம் வசம் செய்து கொள்ளுகிறதென்று தீர்மானித்தார்.

வருடங்கள் கடந்தன. இந்திரனும் இச்சம்பங்களையும் தானெண்ணிய தீர்மானங்களையும் வெட்டென மறந்தான்.

லோக அரசாட்சியில் யாகயக்ஞங்கள், படிப்பு முதலியவற்றை மேற் பார்ப்பது இந்திரனுடைய பொறுப்பு. இந்த ஹோதாவில் பூலோகத்தைச் சுற்றி வருங் காலத்தில் ஒரு சமயம் தனது சிறு வயதிலிருந்தே சகாவான கௌதமருடைய ஆச்ரமத்தை யடைந்தான். அங்கு அவர் லக்ஷம் சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டு வெகு கௌரவமாயிருப்பதைக் கண்டு களித்தான். அவரிடம் அவரைப் பற்றித் தனக்குள்ள அபிப்பிராயத்தையும் வெளியிட்டான். இது கேட்ட கௌதமர் தம் நண்பனுக்கு விருந்தளிக்கப் போகலாமென்று வேண்டினார். ஆனால் இந்திரன் அச்சமயம் அங்கு தங்குவதற்கில்லை யென்றும் பின்னொரு சமயம் வரும் பொழுது சில தினங்கள் தங்கிப் போவதாயும் வாக்களித்தான். தேவராஜனின் மனம் அறிந்த கௌதமர், அவனுக்கு விடை கொடுத்தனுப்பினார்.

வருடங்கள் கடந்தன; அஹல்யையும் ஓரருமைப் புதல்வனை ஈன்றெடுத்தாள். அவனும் காலக்கிரமத்தில் நன்கு வளர்ந்து சாஸ்திரங்கள் கற்று புகழ் பெற்று வந்தான். சதாநந்தன் என்றால் எல்லாரும் கௌரவிப்பார்கள். சாஸ்திரங்களிலோ அனுஷ்டானங்களிலோ அர்த்த சாஸ்திரத்திலோ எந்த விஷயத்தில் சந்தேகம் தோன்றினாலும் எவ்வரசரும் சதாநந்தரையே கேட்டு தீர்த்துக் கொள்ளுவார்கள்.

வெகு வருடங்கள் கழிந்து, மீண்டும் ஒரு முறை தேவேந்திரன் கௌதமரிடம் வரும்படி நேரிட்டது. இச்சமயம் ஒரு வாரம் இவ்விடம் தங்கிப் போகிறதென்றே தீர்மானித்து வந்தார். வெகு விமர்சையாக விருந்துகள் நடந்தன. இம்மாதிரியான விருந்துகள் தேவலோகத்திலும் கண்டதில்லை. கௌதமரிஷி தன் மன சங்கற்பத்தால் சிருஷ்டிசெய்த விருந்துக்கு ஈடாக யாரும் செய்ய முடியாதல்லவா? இந்திரனுக்கு வெகு திருப்தி, வெகு சந்தோஷம். இந்திரலோகத்தையும் மறந்தான். கௌதமருடன் தான் சிறுவயதில் பள்ளியில் படிக்கும் பொழுது விளையாடின விளையாட்டுகளும், பிரும்மலோகத்து நந்தவனத்தில் செய்த சேஷ்டைகளும் அங்குள்ள மரங்களில் தாங்கள் தங்கள் பெயர்களை சிறு பிள்ளைத்தனமாக வெட்டிய வேடிக்கைகளும் ஒருவருக் கொருவர் பேசிக் கொண்டு, இரவும் பகலும் பேசிப் பேசிப் பொழுது போவது தெரியாமல் நாட்கள் சென்றன. கௌதமர் தம் காரியங்களைச் சரியாகக் கவனித்து வரலானார். இந்திரன் விடைகேட்டுப் போக வழியின்றி பற்பல யோசனைகள் செய்துவந்தான். அஹல்யையின் கலியாண ஞாபகம் வந்தது. தான் அக்காலத்தில் தீர்மானஞ் செய்ததும் ஞாபகம் வரவே, தானிருக்கு மிடத்தையும், தனக்கு நடந்த மரியாதையையும், தான் சாப்பிட்ட சாப்பாட்டையும் மறந்தான். இது சரியான சந்தர்ப்பம் என்று நினைத்தான். தான் எப்படியாவது அஹல்யையைக் கைப்பற்றுகிற தென்று தீர்மானித்தான்.

சூரியன் பொன்கிரணங்களோடு மறைந்தான். சந்திரன் உருக்கி வார்த்த வெள்ளியைப் போன்ற கிரணங்களோடு ஆதிதிசையில் தோன்றினான். இந்திரனுக்குப் பொறுக்க முடியாத ஆசை உண்டாயிற்று. எப்பொழுது சந்திரனும் மேற்கில் மறைவானென்ற எண்ணத்துடன் எட்டி யெட்டிப் பார்த்த வண்ணமா யிருந்தான். இடையில் ஒரு கல்லை

எடுத்து சந்திரனைத் துரத்த முயன்றான். பொழுது விடிய ஒரு ஜாமம் இருக்கும்; இந்திரனுக்கு மனது தாங்கவில்லை. தன் விடுதியினின்று வெளியிலகன்றான். ஒரு காகம் போன்ற ரூபமெடுத்துக் "கா" "கா" என்று கரைந்தான். கௌதமர் விழித்துக் கொண்டார். தாம் வெகு நேரம் தூங்கி விட்டோமென்றெண்ணி தம் அனுஷ்டானத்துக்கு வேண்டிய சாமான்களை எடுத்துக் கொண்டு நதிதீரம் சென்றார்.

இதனிடையில் இந்திரன் கௌதமர் குடிசைக்குட் புகுந்து அஹல்யையிடம் சென்று தான் தேவேந்திரனென்றும் அஹல்யையை எந்தக் காரியத்துக்காக அணுகியிருக்கிறானென்றும் தெரிவித்தான். அஹல்யை சற்று யோசிக்கலானாள்: "அதிதிகள் வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கு உபகாரம் செய்யவேண்டியது தம்பதிகளின் கடமை. வீட்டு யஜமானன் இல்லாத காலத்தில் வீட்டு யஜமானிக்கு அந்தப் பொறுப்பு. நசிகேதஸ் யமதர்மனில்லாத காலத்தில் அவர் வீட்டுக்குப் போய் யமதர்மனுடைய பத்தினி என்ன சொல்லியும் கேட்காமல் பட்டினியிருந்து நான்காவது நாள் யமதர்மன் வந்து தன் வீட்டு வாயிலில் மூன்று நாள் பட்டினியாயிருந்த ரிஷி புத்திரனைப் பார்த்து பயந்து போய் உலகத்தில் பெரிதாயுள்ள எல்லாவற்றையும் கொடுக்கத் தயாராயிருந்து எல்லாவற்றையும் மறுத்ததினால் அக்னிதத்வம் பிரம்ம தத்வம் முதலியவற்றை யமன் அவனுக்கு உபதேசித்தார் என்று நாம் உபநிஷத்தில் வாசித்திருக்கிறோம். ஆகையால், அதிதிகளின் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியதவசியம். ஆயினும் என் கற்புக்கு ஒரு வித கெடுதலும் உண்டாகக் கூடாது" இவ்வாறு ஆலோசனை செய்து தான் பிறந்ததை எண்ணி "என் கலைமகள் சிருஷ்டி செய்தது போல் சிருஷ்டி செய்யக் கூடாது" என்று நினைத்து, ஓரறையைச் சுட்டிக் காட்டி "தேவராஜா, தாங்கள் அங்கே சற்றுப் போயிருங்கள்; நான் சீக்கிரத்தில் வந்து சேருகிறேன்" என்று அவனை அனுப்பிவைத்துத் தான் உள்ளே சென்று, யோகநிஷ்டையில் உட்கார்ந்து, தன் யோகமஹிமையால் தன்னைப் போல் ஒரு ரூபத்தை சிருஷ்டி செய்து அதை தேவராஜனருகிற் சென்று அவருக்குத் திருப்தி செய்து மறைந்து போகும்படி உத்தர விட்டாள். அப்பிம்பமும் அப்படியே செய்தது.

ஆற்றுக்குச் சென்ற கௌதமர் பொழுது விடிவதற்கு வெகு நேரம் இருக்கிறதென்று அறிந்து வீட்டுக்குத் திரும்பலானார். வேதத்தின் சப்தம் காதில் விழவே இந்திரன் திடுக்கிட்டான், மனங் கலங்கினான். ஒன்றும் தோன்றாதவனாய்ப் பிரமித்து நின்றான். தனக்கு ஆபத்து வருமோ என்று பயந்தான். உடனே ஒரு பூனை வேடம் பூண்டு வீட்டு வாசலில் குதித்தான். பூனையைக் கண்ட கௌதமர்; அதை ஓடவொட்டாமல் தடுத்தார். உடனே இந்திரன் "இனி பெரிய கஷ்டங்கள் வருமே" என்று பயந்து தனது நிஜ ரூபத்தைக் காட்டி தான் செய்த தவறுதலை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்பதற்குள் கௌதமர் கோபாவேசத்தில் இந்திரனுக்குச் சாபத்தைக் கொடுத்தார். உடனே உள்ளே சென்று தன் பத்தினிக்கும் 'கல்லாய்ப் போவாயாக' என்று சாபங் கொடுத்தார். அங்கிருந்து சாபம் பெற்றது பிரதிமை. இந்தச் சமயத்தில் நிஷ்டை கலைந்து வந்த அஹல்யை விஷயங்களை யறிந்து கொண்டு "பிராணநாதரே! என் அவசரப்பட்டு என்னைச் சபித்து விட்டீர்கள். என்னை எத்தனை வருஷமாக அறிவீர்கள். நான் துஷ்டையா? பதிவிரதா தர்மத்தை அனுஷ்டிக்கும் ஸ்திரீகள் தன் புருஷனில்லாத சமயங்களில் நடந்து கொள்ள வேண்டிய விதிப்படியல்லவா நான் நடந்து கொண்டேன். அதுவும் என்னுடைய சரீரத்துக்கு யாதொரு விதமான தோஷமுமில்லை. நான் தாங்கள் கற்றுக் கொடுத்த யோக சக்தியால் ஒரு பிரதிமையைச் சிருஷ்டி செய்து அதையல்லவா நான் தேவேந்திரனிடமனுப்பினேன். எல்லாமறிந்த தாங்கள் எனக்கு இப்படி சாபமிட்டீர்களே" என்று துக்கத்துடன் தெரியப்படுத்தினாள்.

இது கேட்ட கௌதமர் தன்னுடைய ஞான திருஷ்டியால் 'எல்லாம் அஹல்யை சொன்னது போலவே' என்று அறிந்து "பிரியே! வாஸ்தவம்; நான் அவசரத்தில் யோசனையில்லாமல் செய்து விட்டேன். நீ மறைந்து போகும்படியாகச் சொன்ன பிரதிமை கல்லாகவே இருக்கட்டும்.

சாபம் சாபந்தான்; இதற்கு மாறுதலில்லை. நீ இங்கேயே தபஸில் இரு. திரேதா யுகத்தில் ஸ்ரீராமன் அவதரிக்கப் போகிறார். அவருடைய பாதம் இந்த இடத்தில் படவே உனக்கு சாப விமோசனமாகும். நான் செய்த தவற்றுக்கு நான் ஹிமாசலத்திற்குச் சென்று தபஸ் செய்யப் போகிறேன். ஸ்ரீராமன் வந்து உனக்கு சாப விமோசனமாகும்போது, நான் இங்கு வந்து சேருவேன். இருவரும் அவருக்கு ஆதித்யம் செய்வோம்" என்று சொல்லி ஹிமாசலத்திற்குப் புறப்பட்டார். அஹல்யையும் ஸமாதியில் ராமநாமஜபம் செய்து கொண்டு உட்கார்ந்தாள். எத்தனையோ ஆயிரம் வருடங்கள் கடந்தன. கௌதம ஆசிரமமானது நல்ல அழகிய புஷ்பச் செடிகளோடு கூடியும் அனேக அழகிய பாரிஜாதாதிகளோடு கூடியும் பார்ப்பவர் மனத்தைக் கவரும்படி அவ்வளவு வசீகரமாய் இருந்தது. ஸ்ரீராமன் சீதையை மணம் புரியும் பொருட்டு இவ்வாசிரமத்தின் வழியே போக நேர்ந்தது. அப்பொழுது விச்வாமித்ரரை ஸ்ரீராமன், "இவ்வழகிய வனம் யாருடையது? பார்த்தால் யாருமில்லை போலிருக்கிறதே" என்று வினவினார். அப்பொழுது விசுவாமித்திரர் மேற் கூறிய அஹல்யையின் விருத்தாந்தத்தைச் சொல்லி, "ஹே ராமா! நீ உள்ளே சென்று ஆசிரமத்தைப் புனிதப்படுத்தி அஹல்யையின் சாபத்தையும் தீர்ப்பாய்" என்றார். ஸ்ரீராமபிரான் அதற்கு இணங்கி ஆசிரமத்துள்ளே சென்றதும், அஹல்யை நிஷ்டை கலைந்தெழுந்ததும் அச்சமயம் ஹிமகிரியிலிருந்து கௌதமர் தோன்றியதும் இருவரும் சேர்ந்து ஸ்ரீராம லக்ஷ்மணர்களை வரவேற்று அவர்களுக்குரிய ஸத்காரங்கள் செய்து புகழ்ந்து விசுவாமித்திரரை ஸ்துதி செய்ததும் வெகு விமர்சையாயிருந்தது. யக்ஷர்கள் தேவர்கள் எல்லோரும் வாத்தியகோஷத்துடன் புஷ்ப மாரி பொழிந்தார்கள்.

இச்சம்பவம் நடந்து யுகங்களாகி விட்டன. கதையும் பற்பல வர்ணங்களுடன் வெளிக்கிளம்பி விட்டது. உள்ளே புகுந்து பார்க்கும்போது, "அஹல்யைக்குப் பாபமில்லை; சாபந்தான்" என்று நன்கு விளங்குகிறது.

மழை காலம்.

(மா. கிருஷ்ணன்)

தினமும் விளக்கேற்றினதும் கணக்கற்ற சிறு பிராணிகள் என் வீட்டினுட் பிரவேசிக்கின்றன. பட்டுப் பூச்சிகளும் மெல்லிய தும்பிகளும் மின்சார விளக்குகளைச் சுற்றி மொய்க்கின்றன; சுவர்களில் களைப்பற்ற எறும்புகளும், தத்துக்கிளிகளும் ஊருகின்றன; வண்டுகள் சுழன்று சுழன்று எங்கும் பறந்து பின் 'பிங்' என்று விளக்குக் குடைகளில் மோதிக் கீழ் விழுகின்றன. இவையெல்லாம் மழை காலத்தின் அறிகுறிகள். சில வேளைகளில், புது மழையில் வீசும் மண் வாசனை படியுமுன், வீடெங்கும் ஈசற்படைகள் வந்து கூடிவிடும்—அப் பொழுதுகளில் நாங்கள் எல்லா விளக்குகளையும் அணைத்து விட்டு இருட்டில் குடியிருப்போம். என் வீட்டைத் தேடி வரும் ஜந்துக்கள் அனைத்தும் சிறிதாகவும் ஸாதுவாகவு மிருப்பதில்லை. நேற்றிரவு சுமார் அரையடி நீளமுள்ள ஒரு தத்துக்கிளியை என் படுக்கையறையினின்றும் அப்புறப்படுத்தினேன்.

ஒரு காலத்தில் என் தோட்டமாக விருந்த சேற்றுக் காட்டிலிருந்தும் சுற்றுமுள்ள அகழிகளிலிருந்தும் இரவெல்லாம் தவளைகள் சப்திக்கின்றன. பிறகு பகல் முழுதும் முன் முற்றத்தில் சிறு தேரைக் குட்டிகள் குதித்து விளையாடும். என் புத்தக அலமாரியினடியில் வெகு நாட்களாக ஒரு பிரமாண்டமான தேரை குடியிருக்கிறது. அதை நான் வெளியே துரத்த முயல்வதில்லை. முயன்று பயனில்லை—மறுபடியும் எப்படியோ அங்கு வந்து சேர்ந்துவிடும். மேலும் எனக்குத் தெரிந்த ஒரு கனவானைப் போலவே அது இருப்பதனால் அதை எவ்விதத்திலும் வருத்த எனக்கு இஷ்டமில்லை. அவரும் புத்தகப் பிரியர், அவரும் ஸ்தூல சரீரமுடையவர்—மற்ற விஷயங்களிலும் சில பொருத்தங்களுண்டு.

என் வீடு சதுப்பு நிலத்தில் அமைந்துள்ளது. ஆகையினாலே தான் மழை காலத்தில் எங்கும் இப்படித் தண்ணீர் தேங்கி நிற்கிறது. "சதுப்பு நிலத்தில் வீடு கட்டினால் ஏன் தண்ணீர் தங்காது——கட்டாயமாகத் தங்கும்." என்று மேற் குறித்த நண்பர் விளக்கிக் கூறுவார். வழியிலுள்ள குட்டைகளையும் சகதியையும் கடந்து வந்து இதை அநேக முறை என்

னிடம் சொல்லியிருக்கிறார். ஆனால் விதியை மதியால் வெல்லலாம். போன வருஷமட்டும் வென்று மிருக்கிறேன். தோட்டச் சுவரின் அடிப்பாகத்தில் தண்ணீர் போகுமாறு காலே ந்து இடங்களில் இடித்து விடுவேன்——அண் டைவீட்டுத் தோட்டம் எங்கள் தோட்டத்தி னும் கீழ்படிந்துள்ளது.

இந்த வருஷம் யாரோ ஒரு பணக்காரர் அடுத்துள்ள நிலத்தை விலைக்கு வாங்கி விட் டார். ஏழடி ஆழமட்டும் அஸ்திவாரம் தோண்டி, மேலும் பூமியினின்றும் ஐந்தடி மட்டும் தரை மட்டத்தைத் தூக்கி, அவர் வீடு கட்டுகிறார். அஸ்திவாரத்திற்காகத் தோண் டிய களிமண்ணை யெல்லாம் தோட்டச் சுவரின் பக்கமாகக் குவித்திருக்கின்றார். இந்த சுவர் அவரைச் சேர்ந்தது—அவர் இஷ்டம் போல் அதன் மீது களிமண்ணை சாத்திக் கொள்ள லாம். எவ்வளவோ சிரமப்பட்டு சுவரிலும் களிமண்ணிலும் இரகசியமாய் சுரங்கம் வைத் தும் பயனில்லாமல் போய்விட்டது. அவர் அதை உடனே எளிதாக அடைத்து விடு கிறார். எங்கள் வீட்டுத் தண்ணீர் எங்களி டமே தங்கி விடுகிறது.

“உங்கள் அண்டை வீட்டுக்காரர் வீடு கட்டு கிறாரே, எவ்வளவு நேர்த்தியாயிருக்கிறது! என்ன உயர்ந்த தரை மட்டம், என்ன ஸ்திர மான கட்டிடம்!” என்று என் நண்பர் அடிக் கடி வியந்து பேசுகிறார்.

ஒரு வித எறும்பும், கறையானும், மற்றும் சில அறிவற்ற பிராணிகளும், ஸ்திரமாகவும் உயரமாகவும் அற்புதமாகவும் வீடு கட்டு மென்பது பலரு மறிந்த விஷயம். என் நண் பருக்கு மட்டும் இது தெரியாது போலும்!



மொழிபெயர்ப்புப் பகுதி.

நீர்ப்பூ விரியும் நிலையம்.

(தமிழ் வித்துவான், கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர்)

மேனாட்டுக் கவிஞர் ஜேம்ஸ் ரஸ்ஸல் லோவெல் (James Russell Lowell) என்பவர், இயற்றிய 'நீர்ப்பூ விரியும் நிலையம்' (The Fountain) என்னும் கவியின் மொழிபெயர்ப்பு.

(நிலைமண்டில ஆசிரியம்.)

1. வெயிலில் விளங்குவை முழுவொளி யோடும்,
பாய்ந்து குதித்துப் பளீர்ப்பளீர் என்றே
காலை தோட்டுக் கங்குல் வரையிலும்;

2. பான்மதி நிலவினில், பனியினும் வெண்மையாய்
அசைந்தசைந் தாடுவை யணிமலர் போல் நீ
காற்று வீசுங் காலந் தன்னில்;

3. நட்சத் திரங்கள் நல்கிடும் ஒளியில் நீ
துளித்துளி யாகத் துளித்து மோதுவை,
நள்ளிலும் மகிழ்குவை, நாளிலும் மகிழ்குவை;

4. என்றும் இயங்குவை, குதூகலச் சிரிப்பினை,
இன்னந் தாவி யேறுவை விண்ணுற,
இல்லை சோர்வே என்று முனக்கே;

5. களிப்படை வாய்நீ காணுமெப் பருவமும்,
என்றும் எழிலுடன் விளங்குவை மிகவே,
உயர்ந்தோ தாழ்ந்தோ ஓடலுன் ஓய்வாம்;

6. மாற்ற முடியா மாண்பினை யாயினும்
மாறி மாறிக் காண்குவை கணந்தோறும்,
என்றும் ஒன்றும் இயல்பினை நீயே;

7. அடங்கா ஆசைகள், அடங்காத் திருப்தி,
இருளோ, அன்றி இரவியின் வெயிலோ,
இரண்டு முனக்கே இயைந்த பொருள்களாம்;

8. விரிபுகழ் நீர்ப்பூ விரியும் நிலையமே!
என்றன் இதயமும் புதுமை பல் வண்ணத்தில்,
உறுதியில், உயர்வில் உனைப்போல் உறைகவே.

உமர் கையூமின் ருபையத்து.

"பாரத்வாஜன்"

சீஸரின் செங்குருதி நிலமிசை யுதிர்ந்த காவிடை யலர்ந்த
ரோஸையின் மலரினும் மேம்படு ரோஸெ வணுமிலதே யத்தகைப்
பேசுறு பூம்பொழி லுதிர்ந்திடு தவிசுறை மலரெலாம் அன்றலர்த்
தேசுறு வளகத் தீங்குரல் மடந்தையர் சிரமதி லுதிர்ந்த நறுமலரன்றோ!

செவ்விதழ் மடந்தையர் துஞ்சினர்; பூம்பொழி லகத்திடை யுற்றனர் நீள்துயில்
அங்கவர் சடலமு மாய்ந்திடு காலை யாயது; புற்றரை பைம்புன லணித்தாய்
தங்கிடு மாந்தரும் யாமும் காமுறு பைந்தரை "என்னெழில்!" என்பேம்;
"உன்னிடு! உன்னிடு!! அப்புற்றரை தானெவ் வெழிலுறு வதரத் தாளுடை
கவினே!"

மங்கை நீ கேண்மோ! மதுவுடன் நல்காய் மாந்துபு, மாந்துபு
இன்றையி னேக்கமு மில்லதேயாக இனியொரு பயமு முற்றிலதாக
பொன்றுவ தொன்றே, நின் புகழ் பொழி வள்ளம்—எனில் எவர் பாரில்
சென்றநா ளெண்ணிச் சிந்தை நொந்தயர்வர் கண் டெழுவா யிரமாயினு மொன்றே!

காமரு கண்ணர் கவின்பெறு விளைஞர் நறைபிழி காலன் தருமது வயின்று
தாமொரு விரண்டு தவிசிடை நுகர்ந்து தமதகம் புகுந்து துயிலுவர் முயங்கி
ஏமுறு நண்பர் இவரிணையன்றோ யாவரு மிருந்து பிணிறந்துமே செல்வர்
நாமுமே யன்னவர் நடுக்குறு மௌனம் களிபின ரெய்துவம் சாதமீ தாமால்!

இவ்வறை தனில் யாம் என்னணம் துய்த்தேம்; மதுவுட னிளமை மாதரார் புல்லி
வெளவுறு விளவெனில் புத்தரை யுடுத்துப் புதுமையா யியற்றும்
ஒவ்வியம் நோக்கி யிறும்பூ தடைந்தேம்; இணைமலர்த் தவிசில்
செவ்விதின மர்ந்தேம் சின்னணம் பின்னர் மண்ணதாய் மாறி மற்றெவர்க்
காவோம் மலர்த்தவி சாமால்.

மண்ணுடன் மண்ணாய் மடிவுறு வமயங் காணுதி கண்முன் கணந்தோறும்
எண்ணிடு வதன் முனர் இனிமைசால் எஃதெனில் தனைநீ யிக்கணந் துய்ப்பா
யன்றேல்
பண்ணிலதாகும் பாதமே யியற்றும் பெண்ணில தாகும் தேநறை நண்ணில தாகும்
எண்ணிலதாகும் இன்னணம் நீயும் எய்துறு வுறக்கம் உளதெதே, துய்ப்பாய்!
துய்ப்பாய்!"—

நீலகண்ட தீக்ஷிதரது கலி விடம்பனம்.

(R. S. ஸுந்தரேச சாஸ்திரிகள்)

பெண்கள்.

(1) பிணியாளியுள்ள வீட்டில் உள்ள ஸ்திரீகள் வியாதிகளின் மூலகாரணங்களையும், அவைகளின் பெயர் வரிசைகளையும், தாதுக்களின் ஸமநிலைமையிலும் மாறுபட்ட நிலைமையிலும் செய்யப்படவேண்டிய சிகித்ஸை முறையையும் இவ்வெல்லா விஷயங்களையும் தாங்களே உபதேசம் செய்ய முன் வருவார்கள்.

(2) புகுந்த இல்லத்திலிருந்து ஒரு தடவை புதல்வி வந்து சென்றால் தனக்குப் புதுவிதமாகத் தோன்றும் ஆபரணங்கள், ஆடைகள், பாத்திரங்கள் குழந்தைகளுக்கு வேண்டிய விளையாட்டுக் கருவிகள் என்று ஒன்றன்பின் ஒன்றாக வாங்கிக்கொண்டு செல்லுகிறாள். இதனால் தந்தையின் இல்லமே சுத்தமாகி விடுகிறது.

(3) ஒருவனுக்கு இரண்டு மனைவிகள்; அவ்விருவருக்கும் தனித்தனியே புத்திரர்களும் உளர். அத்துடன் கணவனை யிழந்த ஒரு சகோதரி. இவ்வெல்லோரும் ஓரே இல்லத்திலிருப்பார்களானால் மனிதனின் (கிருஹஸ்தனின்) இல்லற வாழ்வு என்றாவது கலகமற்று அமைதியுடன் இருக்குமா?

(4) ஒருவனுக்கு மனைவிகளிருவர். அவனோ வறுமையிலிருக்கிறான்; பிணியும் பீடிக்கிறது. அத்துடன் செயலற்று தொண்டு கிழவர்களான பெற்றோர்கள். இவற்றில் ஒன்றுடனாவது நரகயாதனையை ஒப்பிட முடியுமா?

கடன் கொடுத்தவன்.

(1) கடனாளி கடன் கொடுத்தவனைப் பற்றி ஒரு தரம் நினைப்பானாகில் உடல் பதறுகிறான். அவனைக் கண்டு விட்டாலோ மூர்ச்சையாகிறான். நினைத்தமட்டிலோ அல்லது பார்த்தமட்டிலோ இத்தகைய மாறுதலைத் தருகின்ற கடன்காரன் என்ற பெரும் பிசாசை எவ்விதந் தான் நான்முகன் படைத்தானோ?

(2) யமன் மனிதர்களைத் தான் அணுகுவதற்கு அவர்களின் ஆயுள் முடிவு என்ற காலவரையை எதிர்பார்க்கிறான். ஆனால் கடன் கொடுத்தவனோ அவ்வரைக் குட்படாது நினைத்த பொழுதெல்லாம் மனிதர்களை யணுகித் துன்புறுத்துகிறான்.

(3) கடனளித்திருப்பவனுக்கு யமனுக்குள்ளது போல் வாயில் கோரைப் பற்களைக் காணோம்; கையிலொரு பாசத்தையுங் காணோம். எனினும், அவனைக் கண்ட அளவில் மனிதர்கள் நடு நடுங்குகிறார்கள். என்ன ஆச்சரியம்!

தாரித்ரியம்.

(1) உலகில் மனிதன் தனது பகைவர்களைத் தணிந்த சொற்களால் வசப்படுத்தி விடலாம். எவ்வித வியாதிகளையும் தக்க ஔஷதங்களைக் கொண்டு விலக்கிக் கொள்ளலாம். காலன் அணுகினாலும் காலனுக்குக் காலனான சிவபிரானைத் தியானிப்பதனால் வென்று விடலாம். ஆனால் தாரித்ரியத்தின வாய்ப்பட்டால் எதைக்கொண்டு அதை விலக்க முடியும்?

(2) நடக்கச் செயலற்ற மனிதனுக்கு ஓடித் திரிந்து சம்பாதிக்கும் சக்தியளிக்கும் ஔஷதம் யாது? மழை, பனி, வெயில்களை தாங்கச்செய்வது யாது? எதைத் தின்றாலும் ஜரிக்கச் செய்வது யாது? எல்லாம் நல்குரவே.

(3) நல்குரவை முன்னிட்டு யாசிக்கப் புறப்படுகிறவனுக்கு நாணத்தினால் முதலில் சொல் தடுமாறுகிறது. கண்கள் குவிகின்றன; கால்கள் தள்ளாடுகின்றன. எனினும், அவனது தாரித்ரியம் அரசனது கட்டளை போல் மனிதனைக் கட்டுப்படுத்துகிறது. அதனால் மனிதன் தைரியமடைந்து விடுகிறான்.

(4) ஆனால் தரித்திரன் வைராக்கியம் பெற்றுப் பேரறிவைப் பெற முயல்வானானால் நல்குரவே இவன் பேரின்ப மடைவதற்கு இன்றியமையாத கருவியாயுள்ளது. ஏனென்றால், உலகில் சாதாரணமாக தனிகர்களின் பயத்திற்குக் காரணமான திருடர்கள் கோட்சொல்லிகள், பங்காளிகள், அரசர்கள் இவர்களால் இவனுக்குத் துன்பம் நேர இடமில்லை யல்லவா? இவ்வித வசதி ராஜ்யாதிபதிகளுக்குக் கிடைக்குமா?

பணக்காரன்.

(1) ஸ்ரீதேவியின் புதிய கடைப் பார்வைக்குள்ளான தனிகன் தன்னிடத்திலுள்ள பொருளைப் பறிப்பதற்காகச் சிலர் தன்னை பொய்யாகப் புகழ்வதை உண்மை யென்றே கருதுகிறான். தன்னை தெய்வத்தின் உருவமென்றே நினைக்கிறான். மற்ற மனிதர்களைப் புழுக்களுக்கு ஒப்பாக நினைக்கிறான். பிறர் சொல்வதைத் தான் செவியுற்றுக் கொண்டே செவிடன்போல் மறுபடியும் சொல்லக் கேட்கிறான். தான் பார்த்துக்கொண்டே யிருந்தும் பார்த்ததை அறிந்துகொள்வதில்லை.

(2) தன்னால் புகழப்பட வேண்டியவர்களும், வணங்கப்பட வேண்டியவர்களும் தன்னைப் புகழவும் வணங்கவும் வேண்டுமென்று ஆசை கொள்ளுகிறான். தான் செய்வது குற்றம் என்றும் அச்சங்கொள்வதே யில்லை.

(3) மதுபானம் செய்தவனும், பிசாசங்களால் பற்றப்பட்டவனும் சுய அறிவை இழக்கிறான் என்பது உண்மை. ஆனால் சில நாழிகைகளுக்குப் பிறகோ அல்லது சில நாட்களுக்குப் பிறகோ, அவன் சுய உணர்ச்சியைத் திரும்பப் பெறுகிறான். செல்வத்தினால் மதியை யிழந்தவன் தன்னுடல் உள்ளவரையிலும் சுயமதியைப் பெறுவதில்லை.

(4) செல்வம் தான் பற்றிய மனிதனை ஒரு மாதமோ அல்லது அதிலும் சிறிது காலமோ, ஆட்டிவைத்துவிட்டுப் பிறகு மறைந்து விடுகிறது. ஆனால் அச்செல்வத்தினால் மனிதனுக்கேற்பட்ட மாறுதல் வெள்ளைப்பூண்டு செலவானபோதிலும் அதன் மணம் நீடித்திருப்பது போல் நீடித்திருக்கிறது.

(5) எவனிடத்தில் செல்வம் இருக்கிறதோ அல்லது முன்பாவது இருந்ததோ, அவனுக்கு மதிமயக்கம் ஏற்பட்டால் அது ஒரு விதத்தில் நியாயமென்று ஒப்புக்கொள்வோம்; செல்வ சம்பந்தமே யில்லாத அவன் வமிசமுழுவதையுமே செருக்கானது குஷ்டம், அபஸ்மாரம் முதலிய கர்ம வியாதிகள் போல் அல்லவோ பற்றிக் கொள்ளுகிறது.

(6) அற்பச் செல்வம் படைத்தவர்கள் கூட தான் கற்றறிவில்லாத போதிலும் சிறந்த அறிவாளர்களுக்குக் கூட சாஸ்திரங்களைக் கற்பிக்கிறார்கள்; அவர்களை பெரும்பாலும் உதறித் தள்ளுகிறார்கள் தன் பிறவி முதலியவைகளை அடியோடு மறந்து விடுகிறார்கள்.

யாசகன்.

(1) ஸ்ரீமானுயுள்ள பிரபு தனது ஊழியர்க்கு ஏராளமாகப் பணங்கொடுக்கட்டும், யாசகர்களுக்கும் வேண்டிய பொருளைக் கொடுக்கட்டும். ஆனால் யாசகர்கள் மட்டிலும் அந்தப் பிரபுவையும் ஒரு யாசகன் (அதாவது தமது) நிலைக்குக் கொண்டுவராமல் விடமாட்டார்கள்.

துஷ்டன்.

பருந்து அல்லது கழுகு வீட்டின் கூரை மீது உட்கார்ந்தால் எப்பொழுதோ வரும் காலத்தில் அந்த கிருஹஸ்தனுக்குத் தீமை நேரும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் துஷ்டன் வீட்டிற்கு அருகிலிருந்தால் போதும், உடனே வந்தது ஆபத்து.

உலோபி

(1) உலகிலுள்ள பலவித தர்மங்களுக்குள் உலோபிகளால் சுத்த உபவாஸமே விரும்பத்தக்கது; வியாதிகளுக்கு ஔடதமாகவும் அதுவே. தினஸரி செய்யப்பட வேண்டிய பஞ்ச யக்ஞங்களுக்குள் காயத்திரீ முதலிய மந்திரங்களை ஜபிக்கிறது என்ற யக்ஞமே விரும்பப்படுகிறது. (இதற்குக் காரணம் விளக்க வேண்டியதில்லை.)

(2) யாசகன் தனிகனிடம் (உலோபியிடம்) நெருங்கும்பொழுது "பிரபுவின் விடை என்ன வருமோ" என்று எவ்வளவு நடுங்குகிறானோ, அவ்வளவோ அதற்கும் அதிகமாகவோ உலோ

பியும் "வருகிறவன் எதைக்கேட்டு விடுகிறு னோ" என்று பதறுகிறான்.

(3) பிச்சையாக அளிக்கப்படும் ஒவ்வொரு கவளத்தையும் மேரு மலைபாகக் கருதும் உலோபிகள் அதிதிகளுக்கு உபசாரம் செய் யும்படி தூண்டும் சாஸ்திரங்களை நன்கு ஆராய் ந்து தெரிந்து கொள்ளுகிறார்கள். (அதிதிக் குள்ள லக்ஷணங்கள் வந்த அதிதியிடம் இல்லை என்று அவனைத் திருப்பியனுப்புவதற்கு).

(4) தனத்தைக் காக்கும் பூதமொன்று. தனப்பேராசை பிடித்த பூதமொன்று. இதில் முதற் பூதம் தான் காத்துவந்த தனத்திற் குரிய யஜமானன் வந்ததும் அதை அவனிடங் கொடுத்து விலகி விடுகிறது. இரண்டாவதோ எவனுக்கும் கொடுக்க விரும்புகிறதில்லை.

விருந்தாளி

விருந்தாளியாக வந்தவன் தான் வரும் பொழுதே உடனே புறப்பட வேண்டுமென் றே ஒருவனில்லத்தில் நுழைவான். ஒவ் வொரு நாளும் புறப்பட்டுக் கொண்டே யிருப் பான். ஒவ்வொரு புறப்பாட்டிலும் பற்பல விதமான தடைகளைக் கற்பனை செய்வான். இவன் வெகுகாலந் தங்கலாம் என்ற எண்ணத் துடன் அல்லவோ வந்தவன்?

தாம்பிகன்.

(1) கற்றறிவு பெற்றவனுக்கு உலகு எதா வது கொடுக்குமாகில் அதைப்போல் பத்து மடங்கு கவித்திறமை யுள்ளவனுக்குக் கொடு க்கும். நூறு மடங்கு நடிகனுக்குக் கொடுக் கும். தனது போலிச் செய்கைகளால் உலகை ஏமாற்றும் வஞ்சகனுக்கு ஆயிரம் மடங்கு கொடுக்கும். ஆறு அங்கங்களுடன் வேத மறிந்தவனுக்குச் சிறிதும் கிடையாது.

(2) உலகை ஏமாற்றிப் பொருள் பறிக்கப் புறப்பட்டவன் தானுகப் பொருள் திரளும்ப டிச் சில தாகர்களை ஏற்படுத்துவான். அவர் களுக்குத் தக்கபடி பொருளால் உதவி செய் வான். தான் எவ்வகையிலும் பற்றற்றவன் என நடிப்பான். இவன் தனது அறியாமை யை மறைத்திருக்கும் வரையில் ஏமாந்த ஜன ங்கள் பணத்தைச் சொரிவார்கள்.

(3) ஸகல சாஸ்திரங்களிலுமுள்ள ரஹ ஸ்யங்களையு மொரு புறம் வைத்து ஒரு துளஸி மணியும் ஒரு புறம் வைத்தால் துளஸிமணி யின் மதிப்பே சிறந்ததாகும். இது சொல்லக் கூடாத ரஹஸ்யமாயினும், சிறிதாவது சொ ல்லியாக வேண்டு மென்று சொல்லுகிறேன். மூலிகைகள், செடி கொடிகள் இவைகளின் அற்புத குணாதிசயங்களை விரிந்த நூலாக இயற் றிய 'வாஹடர்' என்பவர் துளஸியின் அநேக குணங்களைச் சொல்லியிருந்த போதிலும், 'துளஸி உலகையே வசப்படுத்தத் தக்கது, அளவற்ற செல்வத்தை யளிக்கத்தக்கது' என்ற இருகுணங்களையும் சொல்ல மறந்து விட் டார்.

(4) கௌபீனத்தை மட்டிலும் அணிந்து கொண்டும், நீற்றை உடம்பெல்லாம் பூசிக் கொண்டும், தர்ப்பாசனத்தில் அமர்ந்து கொண் டும் ருத்திராக்ஷ மாலைகளை தரித்துக் கொண் டும், வாய்திறவாமலும், ஒரே ஆஸனத்தை மாற்றாமலும், இவ் வாறுவித உபாயங்க ளால் மூடன் உலகை ஏமாற்றிப் பிழைக்கி றான்.

கவிகள்.

(1) ஒரு பிடி யரிசிக்குக் கவிபாடுங் கவிகள் தங்களுக்குச் சிறிது ஸஹாயமளிக்கும் தனிகர் களோ அல்லது சிற்றரசர்களோ, யாராயினும் ஸரி, அவர்களிடமுள்ள தீய குணங்கள், உலோப குணம், தைரியமின்மை, அறியாமை முதலியவைகள் மறையுமாறு கவி பாடி விடு கிறார்கள்.

(2) சில கவிகள் தாங்கள் ஒரு மனிதனை யோ அல்லது ஒரு பொருளையோ துதிக் கத்தக்க காரணங்கள் ஒன்று மில்லாமலேயே துதிக்கப் புறப்பட்டு விடுகிறார்கள். ஒரு வேளை யவர்களுக்குத் தாங்கள் எதையாவது துதிக் காமலிருந்து விட்டால் நாக்கு 'தரு தரு' என்று துடிக்குமோ என்னவோ? தேனீ என் பது ஈ என்ற வகையைத் தழுவியது. அதற்கு எவ்வளவோ விதமான பெயர்களைச் சூட்டி எவ்வளவுதான் வருணிக்கிறார்கள்!

(3) கவியின் கவித் திறமை ஒரே விதமா யிருந்த போதிலும் சில விடங்களில் சில ஸம யங்களில் (கவியின் அதிருஷ்டத்திற் கேற்ப) கவிபாடியவனுக்கு கிராமம் யானை, குதிரை முதலிய ஸம்மானங்களைத் தருகிறது. சில ருக்கு உணவு, ஆடை, தாம்பூலம் முதலியவை களை கொடுக்கச் செய்கிறது.

(4) 'சப்தம்' என்ற பிரம்மத்தை அதற் குத் தேவையான பல அணிகளால் அலங் கரித்துச் சிலர் விற்று விடுகிறார்கள். சிலர் தாங் கள் ஒரு லாபத்தையும் அடையாது வீணுகச் செலவிடுகிறார்கள்.

(5) கலைமகளின் திருக்கடைப் பார்வை யருளுக்குப் பாத்திரமா யிருந்தும் சில கவி கள் ஒரு வித மேன்மையுமில்லாது மனிதத் தோற்ற முள்ள ஒருவனை மிகைப்படுத்தி வருணிக்கிறார்கள். இவர்களை எப்படி வருணிப் பது? பல தபசுகள் செய்து பெறத்தக்க காம தேனுவை ஒருவன் தன் அதிருஷ்டத்தினால் பெற்று விட்டால் அதைக் கலப்பையில் பிணைத்தா உழவேண்டும்? இவ்விதம் உள்ளதை மறைத்து வெவ்வேறு விதமாக வருணிக்கும் ஆசைக் கடிமையான கவிகள் என்று தான் இச் சம்சார சாகரத்தைக் கடப்பார்களோ?

(6) இவ்விதம் சந்தர்ப்பங்களை யமைப்பதிலும் பொருள், அணிமுதலியவைகளை ஜோடிப்பதி லும், வியங்கியமான விசேஷங்களைப் புகுத்து வதிலும் ஊக்கங்கொண்ட இக்கவிகளின் கவி கள் ஆனந்தரூபியான சிவபிரானைத் தழுவியி ருப்பின் அவை நிர்விகல்பக ஸமாதியைவிடச் சிறந்த யோகமாகாதா?

கீதப் பகுதி

ஸ்ரீஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களது கிருதி விளக்கம்: ராஸக்கிரீடை.

(தமிழ் வித்துவான், R. முத்துவையர்.)

பகவானுடைய திவ்விய குணாதிசயங்களை விவரித்துக் கூறி அதில் ஈடுபடுபவர்களுக்குக் கடவுள் பக்தியை உண்டாக்கும் சிறந்த நூல்களில் தலைமை வாய்ந்தது ஸ்ரீமத் பாகவத புராணமாகும். இந் நூலை வேதங்களை நான்காகப் பிரித்து உபநிடத நுட்பங்களைத் திரட்டியெடுத்து பிரம்மஸூத்ரமாகச் செய்து பல இதிஹாஸ புராணங்களையும் உண்டாக்கிய ஸ்ரீவேதவியாச முனிவர் இயற்றினர். பற்பல ஞான நூற்கள் இயற்றியும் அவைகள் சில்வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினராகிய கலியுகத்தவர்க்குப் பயன் பெருதன கண்டு கலங்கிய வேதவியாசர் நாரதமுனிவரின் தூண்டுதலால் பாகவத புராணத்தைச் செய்து முடித்தார். ஞானம், கர்மம் என்றிவைகளால் பிறவிப் பெருங்கடலைக் கடந்து கரையேனும் சக்தியில்லாத கலியுகத்தவர்களுக்குப் பக்தி வேரூன்றித் தழைத்து அதன் வழியாக முக்தி பெறக்கூடிய எளிய முறையை உயர்ந்த நோக்கத்துடன் இந் நூலில் விளக்கி யிருக்கிறார். ஆகலால், பாகவத புராணத்தில் தொட்ட தொட்ட இடந்தொறும் பக்திப் பிரவாகம் பெருக்கெடுத்து ஊறுவதைக் காணலாம். தன்னிடம் வந்து சேரும் அழுக்கு நீரையும் தூய்மை யாக்கித் தன்னோடு சேர்த்துக் கொண்டு, தன்னில் வந்து நீராடும் ஏனையோர்களது கொடிய பாபங்களையும் போக்கி மோக்ஷங் கொடுக்கும் கங்காநதி போல, பாகவத புராணமும் தன்னிடமுள்ள பகவத் குணங்களை அன்புடன் படிப்பவர்க்கும் ஆர்வமுடன் கேட்பவருக்கும் பாபத்தைப் போக்கிக் கடவுளிடம் பக்தியை உண்டாக்கி முக்தியையுங் கொடுக்

கும். இதனுல் பக்தி வேரூன்றி நிற்பதற்குரிய பகவத்குணங்களே இந்நூலில் மிகவும் விரிவாகக் கூறப்படுவனவாகும்.

இப் புண்ணிய நூலில் பன்னிரண்டு ஸ்கந்தங்கள் உண்டு. அவைகளில் பத்தாவது ஸ்கந்தமே மிகவும் முக்கியமானது. இதிலே தான் கிருஷ்ணுவதார சரித்திரம் கூறப்படுகிறது. ஏனென்ருல் கிருஷ்ண கதா சிரவணமே எளிதில் மனதைக் கவர்ந்து பதிந்து பக்தியை உண்டாக்கக் கூடியதென்பது பெரியோர் கண்ட உண்மையாகும். இவ் வுண்மையைப் பாகவத புராணத்தை நன்கு ஆழ்ந்து கற்றுத் தெரிந்து தேர்ந்த ஸ்ரீஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களும் தாம் இயற்றிய ஹிந்தி பாஷைக் கீர்த்தனை யொன்றின் சரணத்தில் ''தசமஸ்கந்த பாகவதகாவே'' அதாவது பாகவதம் தசமஸ்கந்தத்தைப் பாடுவோம் என்று கூறியிருக்கிருர். தசமஸ்கந்தத்திலும் கண்ணபிரானுடைய பால லீலைகளை விவரிக்கும் முற்பாகமே மிகவும் சிறந்ததென்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

கண்ணபிரானுடைய பால லீலைகள் பலவற்றில் ராஸக்கிரீடை என்பதும் ஒன்று. ராஸக்கிரீடையென்பது பரமானந்த ரஸத்தைக் கொடுக்கக்கூடிய இன்ப விளையாட்டு என்தாகும். அதாவது, சிருங்கார ரஸத்தில் மூழ்கின கோபஸ்திரீகள் வட்டமாக நின்று விசித்திரமான பல தாளலயங்களுடன் பாடி, மெதுவாகவும், வேகமாகவும், உயர்ந்தும், நர்த்தனஞ் செய்யும் இன்பரஸ விளையாட்டாகும். ரஸமென்பது தைத்திரிய உபநிஷத்தில் பிரம்மானந்த ரஸமென்று விவரிக்கப்பட்டிருக்கிறது. இந்த பிரம்மானந்த ரஸத்தை விட பக்தியினுல் உண்டாகும் பிரம்மானந்த ரஸமே மிகச் சிறந்ததாகையால் அதையே ராஸக்கிரீடையாக வர்ணித்திருக்கிருர். ஆகவே ராஸம் என்பது ரஸம் ததும்பியது என்று பொருள் படுவதால் தத்திதாந்த நாமமாகும்.

ராஸக்கிரீடையைப் பற்றி பாகவதம் தசமஸ்கந்தத்தில் இருபத் தொன்பதாவது அத்தியாயம் முதல் முப்பத்து மூன்ருவது, அத்தியாயம் வரையில் விவரிக்கப்பட்டுள்ளது. அங்கு பல சுலோகங்களால் விரிவாகக்கூறப்பட்டிருப்பதைச் சுருக்கமாக ஸ்ரீஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்கள் ''ராஸவிலாஸ லோல'' என்று தொடங்கும் காம்போதி ராகம் ஆதிதாளக் கிருதியாக அமைத்திருக்கிருர். இந்தக் கிருதியானது உயர்ந்த முறையில் ராக தாள பாவம் பூர்ணமாய் அமையப்பெற்று கம்பீரமான எடுப்போடு அனுபவித்து பாடுவதற்கு வேண்டியமட்டும் இடங் கொடுக்கும் முறையில் ஸாஹித்ய நெருக்க மில்லாமல் அமைந்திருக்கிறது. தவிர, அனுபல்லவி, சரணங்களின முடிவில் மேலான பதகார்ப்பத்தோடு கூடின மத்யமகால ஸாஹித்யமும் ஸ்வரமும் ஜதியும் கலந்து இறுதியில் தீர்மானச் சொற்கட்டுகளோடு கூடிய சிட்டஸ்வரமும் அமைந்திருக்கும் பெருமை அநுபவித்துப் போற்றத்தக்கதாகும். அக்கிருதியின் ஸாஹித்யம் அடியில் வருமாறு:—

ராகம் காம்போதி தாளம் ஆதி

பல்லவி.

ராஸ விலாஸ லோல லஸதி பவான் தேவ.

அனுபல்லவி.

பாஸுர காளிந்தீ பரிஸரே மதுவனே.

சரணம்.

கேச பார நிபத்த கேகி பர்ஹோ நிகாமம்
பேசலமணி பூஷ பீத வஸன சாலீ
நாசயன்னிஹ குஸுமாசுக மதம் காந்த்யா
கேசவோம்ருது விஹஸ வதனே முனி
கேய கீர்த்தி ரமலமூர்த்தி ரதிபாவனே
ஜகதி (ரா)

மதனுதுர கோபிகா மண்டல மத்யகதோ
முத மனுபமந்தாஸாம் முரளீர வேண திசந்
தததுல கான முதித லோல மௌலிரிஹ
பதயுக விலஸந் நவமணி நூபுர
பவ்ய நாத விஜித ஹம்ஸநிநாதோ ரமா
ரமண (ரா)

விவித நிர்மல பான வீடதான சும்பன
ப்ரவித்த புஜாச்லேஷாதி விலாஸ சதை
ரஹோ
விவசயந்நமும் யதுவீர கோபீ ஸஞ்சயம்
திவிஸ முபாகத நிர்ஜர ஸன்னுத
திவ்ய சோப ஜலஜ நாப சரணுகதாதி ஹர
(ரா)

இந்தக் கிருதியானது மஹாராஜா அவர்கள் ஸ்ரீகிருஷ்ண பரமாகச் செய்த ஸம்ஸ்கிருத உருப்படிகளில் ஒன்றாகும். இதில் கண்ண பிரானது ராஸக்கிரீடை மட்டும் விவரிக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஸம்ஸ்கிருத கிருதிகளெல்லாம் பெரும்பாலும் ஸம்போதன முறையிலேயே அமைந்திருக்கின்றன. அதுபோலவே, இதுவும் கண்ணபிரானை முன்னிலைப் படுத்தி ஸம்போதனையாகவே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதில் அமைந்த பொருளும் முறையும், நன்றாக எளிதில் தெரிந்து கொள்ளும் பொருட்டு முன்னிலைப் பொருளைப் படர்க்கைப் பொருளாக்கி அடியில் வருவாறு தொகுக்கப் பெற்றிருக்கிறது:—

“தேவனான கண்ணபிரான் பிரகாசித்துக் கொண்டிருக்கும் யமுனை நதி பக்கத்திலுள்ள மதுவனத்தில் ராஸக்கிரீடையில் மிகவும் விருப்பங் கொண்டு விளங்குகிறார்.

“அவரது அடர்ந்த தலை முடி யுச்சியில் மயிற்பீலி மிகவும் அழகாய் விளங்குகிறது. அழகிய ரத்தினாபரணங்கள் புனைந்து மந்தஹாஸ முகத்துடன் இருக்கிறார். அரையிற் பீதாம்பரம் தரித்திருக்கிறார். இந்த அழகான தோற்றமானது மன்மதனது கர்வத்தையும் அழிக்கிறது. முனிவர்களும் புகழ்ந்து பாடத்தக்க கீர்த்தியும் தூய்மையும் உடையவர்.

“லக்ஷ்மீகாந்தனான பகவான் மன்மத தாபத்திற்குள்ளான கோபியர் சூழ்ந்த வட்டத்தின் நடுவிலிருந்து வேணுகானம் செய்கின்றார். அதைக் கேட்டுக் கோபியர்கள் ஒப்பற்ற பேரானந்தம் அடைகிறார்கள். அக் கோபியர் பாடுகின்ற இணையற்ற பாடல்களைக் கேட்டுக் களித்துக் கண்ணன் தலையசைக்கிறான். அன்னப் பறவைகளின் குரலை வெல்லும் மங்கள நாதமுடைய புதிய ரத்தினச் சிலம்புகள் அவரது கால்களில் விளங்குகின்றன.”

திவ்யசுந்தரனும், யதுவீரனும், பத்மநாபனும், புகலடைந்தவர்களது மனோவ்யாதியை அகற்றுபவனும், தேவர் துதிக்கப் பெற்றவனுமான கண்ணபிரான் பலவித சுத்தமான பானவகை, தாம்பூலாதிகள், பலவகை முத்தம், பல்வேறு வித காடாலிங்கனம் முதலிய நூற்றுக்கணக்கான சிருங்காரலீலைகள் செய்து கோபியர்களைப் பரவசப் படுத்துகிறார். என்ன ஆச்சரியம்!”.

இதனால் ராஸக்கிரீடை யமுனை நதிக்கரையிலுள்ள மதுவனத்தில் நடந்ததென்றும் அப்பொழுது கண்ணன் கொண்ட கோலமும் ராஸ மண்டல அமைப்பும், நடுவிலிருந்து கண்ணன் வேணுகானஞ் செய்ததும், கண்ணனது இன்ப விளையாட்டும், கோபியரைப் பரவசப்படுத்தியதையும், மற்றும் கண்ணனைப் பற்றியே விவரிக்கப் பட்டிருக்கிறது. கோபியரது செயல், காதல் விளையாட்டு நடனம், பாட்டு, முதலிய இன்ப லீலை ஊகித்தறியும்படிக்கு விடப்பட்டிருக்கின்றன. அவை முதனூலைக் கொண்டுதான் தெரியவேண்டி யிருக்கின்றன. ஆதலால் ராஸக்கிரீடையைப் பற்றி முதனூலிற் குறிப்பிடுவதைத் தெரிந்தால் இந்த கிருதி ஆசிரியர் சுருக்கிக்கூறி யிருக்கும் சாதுரியமும் அதற்கு விளக்கமாக முதனூல் அமைந்திருப்பதும் நன்கு புலப்படுவதாகும். முதனூற் பொருள் வருமாறு.

“கண்ணன் தன் யோக மகிமையால் ஒவ்வொரு கோபியும் தனித்தனியே தன் பக்கத்தில் தான் இருப்பதாக நினைக்கவேண்டுமென்றெண்ணி இருவர்க்கு நடுவில் ஒருவன் வீதம் நின்று ஒரு கையால் ஒருத்தி தோளையும் மற்றொரு கையால் மற்றொருத்தி கையையும் அணைத்து, வட்டமாக நின்று கொண்டு ராஸக்கிரீடை செய்யத் தொடங்கினார்.”

“தேவர்கள் வானத்திலிருந்து அதிசயித்து மலர் மாரி தூவினர். தேவதுந்துபி, முழங்கியது. கந்தருவர் மனைவியரோடும் கண்ணனது புகழைப் பாடினர்.”

“ராஸ மண்டலத்திலுள்ள சுந்தரிகளின் கை வளை, காற் சிலம்பு, இடைமேகலை முதலியன ஒன்று சேர்ந்து இனிமையாக ஒலித்தன. பொன் மணிகளின் நடுவில் மரகதமணி போல விளங்கும் கண்ணன் பாடினான் (குழல் வாசித்தான்). அதற் கேற்ப பெண்களும் தத்தம் கால்களை ஒன்று போல் தூக்கி வைத்தும், புஜங்களை அசைத்தும், புன் சிரிப்புடன் அழகாகப் புருவங்களை நெரித்தும் இடை ஒடிந்து விடு

மோ என்று ஐயுறும்படி பலவாறு அழகாக வளைத்தும் கொங்கை குலுங்க, கன்னங்களிற் குண்டலம் புரள, முகம் வியர்க்க, கூந்தலேயும், அரைப் பட்டையையும் இறுக்கக் கட்டிக் கொண்டு நடித்தனர். இத் தோற்றம் மேக மண்டலத்தில் மின்னலொளி போலிருந்தது.''

''பிறகு கண்ணனை அணைத்துப் பரமானந்த மடைந்தனர். அவருடன் ரமிக்க மிக விருப் புடன் பல ராகங்களை இனிய குரலின் ராஸ மண்டலம் நிறையும்படி உரக்கப்பாடினர்.''

''அவர்களிலோருத்தி ஷட்ஜாதிஸ்வரங்கள் ஒன்றோடொன்று கலவாமல் உச்சஸ்தாயியில பாடினள். கண்ணனும் கேட்டு இன்புற்று மெச்சினன். உடனே மீண்டும் அவள் ஸ்வரங்களை த்ருவதாளத்தில் அமைத் துப் பாடினள். கண்ணனும் அவளுக்குப் பல பரிசுகள் வழங்கினன். மற்றொருத்தி, ராஸக்கிரீடையில் களைத்து, வளைகளும், மல் லிகை மாலேயும் தளர, அருகிலிருக்கும் கண் ணன் தோளிற் சாய்ந்தாள். மற்றொருத்தி தன் தோளிற் வைத்திருந்த சந்தனமும் நெய்தல் வாசனையும் கமழும் கண்ணனுடைய புஜத்தை முகர்ந்து மயிர் சிலிர்த்து அன்புடன் அதை முத்த மிட்டாள். ஒருத்தி நடிக்கும் போது குண்டலப்பிரகாசம் பெற்ற தன் கன்னத்தைக் கண்ணன் கன்னத்தோடு ஒட்டி வைத்தபோது அவன் தான் மெல்லும் தாம்பூலத்தை தன் வாய் மூலமாகவே அவளுக்குக் கொடுத்தான். ஒருத்தி ஆடிப்பாடிக் களைத்துக் கண்ண னுடைய கரகமலங்களைத் தன் கொங்கை மீது வைத்துக் களித்தாள். கண்ணனைத் தத்தம் காதலனைக் கொண்ட கோபியர் அவனது கை களைத் தம் தோள்களின் மீது வைத்துத் தழுவி அவனது புகழ் பாடி நடித்தனர். இவ் வாறு கோபியர் கண்ணனுடன் சேர்ந்து தலே யும், மாலேயும், நெகிழ அவைகளிலிருந்து வீசும் வாசனையை விரும்பித் தொடரும், வண்டுகளா கிய பாடகர்கள் சுற்றிவர, வளையல் சிலம்பு என்றிவைகளின் ஒலியாகிய வாத்திய கோஷங் கங்களுடன் நர்த்தனஞ் செய்தனர். காதில் நெய்தல் மலரும் முன் அளகபாரத்தில் பலவித அலங்காரமும் செய்து கொண்டனர். அழகிய முகத்திலும் கன்னத்திலும் முத்து முத்தாக வேர்வை யரும்பியது.''

''கண்ணனும் அவர்களை அணைந்தும் காத லால் நோக்கியும் அளவற்ற மனோபாவத்தால் சிரித்தும் குழந்தை தன் நிழலோடு விளையாடு தல் போலத் தன் லீலைகளையே அவர்களிடம் செலுத்தி விளையாடினன். கோபியரும் கண் ணனுடைய உறுப்புகள் தம் மேல் ஒன்று சேர்ந்ததால் பேரானந்தமடைந்து ஐம்புலன் களும் கலங்க, மாலே, ஆபரணம், கூந்தல், ஆடை, ரவிக்கை முதலியன குலேயப்பெற்ற னர். அவைகளைத் திருத்தி அமைத்துக் கொள் ளவும் கூட அவர்கள் அறிவற்றவர்களாயினர்.''

''இந்த லீலைகளைக் கண்ட தேவ மாதர் களும், காம பரவச மானார்கள். சந்திரனும் அசுவினி முதலிய தன் மனைவியருடன் கண்டு பிரமித்து அவ்விடத்திலேயே மெய் மறந்து நின்றதனல் கிரகஸஞ்சாரமும் நின்று விட் டது. கண்ணபிரான் தன்னைத்தானே ஆத்மா னந்தம் அனுபவிப்பவனாயினும் தானே ஒவ் வொருவருக்கும் தனித் தனி நாயகனாக வர வேண்டுமென்று, கோபியர் ஒரு காலத்தில் காத்தியாயணி விரதம் அனுஷ்டித்ததை அறிந்து அவர்கள் கோரிக்கை நிறைவேற ஒவ் வொரு கோபிக்கும் தனித்தனி ஒவ்வொரு கண்ணனாக உருவங் கொண்டு இன்புற்று விளை யாடினன்.''

''ஆடிப்பாடி ஆனந்தித்துக் களைத்தவர் முக ங்களைக் கண்ணன் கருணையோடு அன்பாகத் தனது மலர்க்கையால் சுகமாகத் தடவித் துடைத்தான். அப்பொழுது கண்ணனுடைய நகக்குறி பட்டு அவர்கள் பேரானந்த மடைந் தனர். குண்டலத்தின் ஒளியும் கூந்தலின் கருமையும் ஒன்று சேர்ந்து பிரதி பிம்பிக்கிற கபோலங்களுடைய கோபியர் அமுதப் புன் சிரிப்போடு காதற் பார்வையால் கண்ணனை உபசரித்து பரம பாவனமான அவனுடைய லீலைகளைப் புகழ்ந்து பாடினர்''.

இதிலிருந்து ராஸக்கிரீடை பௌர்ணமை நிலவில் நடந்ததென்றும், கோபாங்கனைகளின் அழகும், அவர்கள் கண்ணனது திவ்விய ஸௌந்தரியத்தில் ஈடுபட்டு மயங்கி அவனோடு விளையாடி, மெய்மறந்து பலவித ஆடல் பாடல் முதலியவற்றால் கண்ணனுக்குச் செய்த உபசாரமும், ராஸக்கிரீடையில் களைத்தவர்களுக்குக் கண்ணன் செய்த உபசாரங்களும் கண்ணபிரானது அமாநுஷத்தன்மையும் ராஸக்கிரீடையின் காரணமும் மற்றும் விளங்குகின்றன.

தியாகராஜ சுவாமிகள் கண்ணபிரானைக் குறித்துப் பல கீர்த்தனைகள் பாடியிருக்கிறார்கள். அவைகளில் ''வேணுகான லோலுனி'' என்ற கேதாரகௌள ராகம் ரூபகதாளக் கீர்த்தனை ராஸக்கிரீடையைக் குறித்ததாகும். அதன் பொருள் வாருமாறு:—''வேணுகான லோலனை கண்ணனைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். அழகான பெண்மணிகள் திருஷ்டி சுற்றி எறிந்து வணங்குகின்றனர். விரிந்த செந்தாமரை மலர் முகங்களுடைய பெண்கள் பல விதமான கதிவரிசைகளுடன் கால்களைத் தூக்கி வைத்து நர்த்தனஞ் செய்கின்றனர். ஒருவருக் கொருவர் கைகளைக் கொடுத்துக் கொண்டு கடைக்கண்ணால் பார்க்கின்றனர். கிளி மொழி மடவார் சுகமாகப் பாடுகின்றனர். தேவர்கள் எல்லோரும் தியாகராஜ நண்பனை வேண்டுகின்றார்கள்.'' என்பதாகும்.

தியாகராஜ சுவாமிகளும் மஹாராஜா அவர்களும் கோபியர் நடுவிலிருந்து கண்ணன் வேணுகானஞ் செய்ய அனைவரும் ஆனந்தித்து நர்த்தனஞ் செய்யும் முறை ஒன்று தான் கூறியிருக்கிறார்கள். பாகவதத்தில் ஒவ்வொரு கோபிக்கும் தனித்தனி ஒவ்வொரு கண்ணனாயிருந்தும் அவர்களுடன் தானும் கை கொடுத்துக் கொண்டு ஆடுதல் முதலிய பலவித ராஸக்கிரீடைகள் பல்வேறு முறைகளில் கூறப்பட்டிருக்கிறது.

நம் நாட்டில் பஜனை செய்யும் பொழுது பக்தர்கள் ராஸக்கிரீடையை நடித்துக் காட்டுவதுண்டு. அதுவே தீபப்பிரதக்ஷணமாகும். சூரியனை கிரகமண்டலம் சூழ்ந்திருப்பதையும் பரமாத்மாவை ஜீவாத்மாக்கள் சுற்றியிருப்பதையும் குறிப்பிடுவதே இதன் உட்பொருளாகும். திவ்யநாம ஸங்கீர்த்தனத்தோடு தீபப்பிரதக்ஷணஞ் செய்யும் பக்த மண்டலத்தின் நடுவில் வைக்கப்படும் தீபமே கண்ணனையும் சூரியனையும் பரமாத்மாவையும் குறிப்பிடுவதாகும்.

''கோபியருடன் கலந்து இன்புற எண்ணிய கண்ணன் கூதிர்ப்பருவத்தில் ஒரு நாள் இரவில் பால் நிலாக்காலத்தில் யமுனைக்கரை மணல் மேட்டிலிருந்து வாசித்த வேணுகானத்தைக் கேட்டு ஆயர்பாடியிலுள்ள அழகிய கோபியர் பவளவாய் அன்னங்களைப் போல் வந்து கூடின'' சென்றார் அவர்களைக் கண்ணன் ''உங்கள் நாயகர்களுக்குத் தெரியாமல் நீங்கள் இந்த இரவில் என்னிடம் வந்தது தருமமா? திரும்பிப் போங்கள்'' என்று கூறியதாகவும் அதற்கு அவர்கள் வெட்கி முகங் கவிழ்ந்து 'நாங்கள் நல்ல தருமங்களைக் கேட்பதற்காக வன்றோ இங்கு வந்தோம்' என்று கூறிக் கண்ணனது ஸௌந்தரியாம்ருதத்தை அள்ளிக் குடித்தனர்'' என்றும் தமிழ்ப் பாகவத நூலாசிரியர் முதலிற் கூறுகிறார்.

அவர்களுக்கு எதிரில் கண்ணபிரான் நின்ற அழகிய நிலையை;

> ''தேனும் அமுதும் பொருவும் சில்மழலை நல்லார்
> மானும் எறிவேலும் நிகர் மைவிழி களிப்ப
> வேனில் அரசாளனும் வியக்கும் உருவுற்ற
> நீனிற முகுந்தன் எதிர் நின்றனன் உவந்தே''

என்று கூறினர். அதாவது நீலநிறக் கண்ணன் தேனும் அமுதும் ஒத்த மழலை மொழியும், மானும் வேலும் போன்ற மைவிழியும் களிப்படைய மன்மதனும் அதிசயிக்கும் உருவுடன் களிப்போடு அவர் முன் நின்றான்.' என்பதுவே. பிறகு மணிவண்ணன் அன்ன நடை மாதருடன் அங்குள்ள மணல் மேட்டிலும் சோலையிலும் தனித்தனி ஒருத்திக்கு ஒரு

வனைய் நின்று அவர்களோடு கை கோத்து மகிழ்ந்து விளையாடினன். 'கண்ணன் கோபியரை அணைந்ததில் அவர்களது மார்பிலணிந்த செஞ்சாந்தும் செஞ்சுண்ணப்பொடியும் தனது நீல மேனியிற்படியப் பெற்று செக்கர்வானம் போல் விளங்கினன்' என்று வர்ணித்த ஆலிங்கன அழகு பாராட்டத்தக்க தாகும். கோபியர் மனம் மகிழச் செய்த லீலைகளைக் குறித்து,

''அருப்பு இள நிலவு கால ஆரம் ஒத்து இலங்கும் அந்தண்
சிரிப்பினும், புருவம் செய்பம் செயலினும், நகை கூர்தீஞ்சொல்
விருப்பினும், மலர்க்கண் நோக்கின் விளைவினும், களிநல்யானை
மருப்பு இளங் கொங்கை மாதர் மனம் மகிழ் விளைத்தல் செய்தான்.''

என்று கூறியிருக்கிறார். இறுதியில்,

''பொடித்த பிறை போல எழில் பூத்த நுதல் வேர்
துடைத்து, அணியணிந்து, மலர் சூட்டி, மடவாரொடு
அடுத்து நெடுமால் குரவை பாடிய தோற்றம்
எடுத்து நவிலும் திறன் எவர்க்குளது மன்னே.''

என்று கூறினர். அதாவது 'கண்ணன் கோபியாது பிறை போன்ற அழகு பூத்த நெற்றி வேர்வை துடைத்து நகைகளைத் திருத்தி அமைத்து மாலை சூட்டி அவர்களுடன் குரவையாடின அழகை எடுத்துக் கூறும் திறமை யாருக்குண்டு? ஒருவருக்கு மில்லை' என்பதுவே.

ராஸக்கிரீடை குரவைக் கூத்தின் இனத்தைச் சேர்ந்ததாகும். அதனாலேயே பாகவத ஆசிரியர் 'நெடுமால் குரவை யாடிய தோற்றம்' என்று கூறினர். ''குரவைக்கூத்தே கைகோத்தாடல்'' என்று திவாகரத்திற் கூறியபடி ஒருவருக்கொருவர் கை கோத்துக் கொண்டு வட்டமாய் நின்று ஆடுதலாகும். இதன் இலக்கணத்தை அடியார்க்கு நல்லார்:

''குரவை என்பது கூறுங் காலை
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்தக் கூறும் இயல்பிற்று என்ப.''

என்று மேற் கோள் காட்டி 'குரவை என்பது காமமும் வென்றியும் பொருளாக குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கை பிணைத்து ஆடுவது' என்று கூறியிருக்கிறார். ஆகவே கண்ணபிரானது வெற்றிகளைப் புகழ்ந்து பாடி அபிநயித்து அவரது அழகில் ஈடுபட்டு அவருடன் கலந்த ஒரு வித இன்ப நாட்டியமே ராஸக்கிரீடையாகும்.

இந்த ராஸக்கிரீடை வெளித் தோற்றத்திற்குச் சிற்றின்பமாயினும் ஆழ்ந்து பார்த்தால் பேரின்பமே யாகும். அன்றிச் சிற்றின்பத்தைப் பகவானிடம் பெற்றனரென்றால், குபேரனிடம் குன்றி மணி யாசித்த பெருமைதான் ஏற்படும். ஆதலால் ஆழ்ந்த அரிய பொருள்கள் இலை மறை காய் போல் அமைந்திருக்கின்றன. வியாஸ பகவான் கண்ணனை ''தன்னில் தானே ஆனந்தா அனுபவிப்பவன்'' என்றும், 'தன் யோக மகிமையால் கோபியரின் அன்பை நிறைவேற்றச் செய்த திருவிளையாடலைத் தவிர வேறில்லை' யென்றும், 'குழந்தை தன் நிழலுடன் விளையாடுதல் போல விளையாடினன்' என்றும் கூறியிருக்கிறார். இதனால் தனக்குள் தானே ஆனந்திப்பவன் பிறரிடம் சென்று ஆனந்தம் பெற வேண்டிய தில்லை என்றும், யோகி போகத்தில் ஈடுபடுவது இயற்கையன்று; ஈடுபட்டாலும் தாமரை இலைத் தண்ணீர் போலிருப்பதால் பாதிக்காது என்றும், கோபியர் கண்ணனுடைய பிரதிபிம்பங்களே யாதலால் தன் பிரதிபிம்பத்தோடுதான் விளையாடினன் என்றும், ஏற்படுகிறது.

தவிர, பரமாத்மாவுக்கு ஜீவாத்மாவுக்கு ஏற்படுவது போல பாபத் தொடர்பு உண்டாவதில்லை. பஞ்சபூதங்கள் உயிர்வருக்கங்களிடத்திலெல்லாம் வியாபித்திருத்தல் போல பகவான் பெண் பாலரிடத்தும் அவர்களுடைய கணவர்களிடத்தும் மற்றும் ஆத்ம கோடிகளிலும் வியாபித்திருக்கிறார். அந்த பரமாத்மா

வுக்குப் புதிதாக ஒரு சம்பந்தமும் வருவதில்லை. அன்றி, கண்ணன் தன்னைப் பாபம் சாராத ஏழு வயதிற்குள் உபநயனமாவதற்கு முந்தி ஆயர்பாடியிலிருந்த பொழுது கோபியருடன் கலந்திருந்தானே யன்றி அதன் பிறகு அவர்களைக் கண்ணெடுத்தும் பார்த்ததில்லை.

கோபியர் கண்ணனிடம் செலுத்திய காதலை பக்தியாகவே கொள்ளல் வேண்டும். கடவுளிடம் செலுத்தவேண்டும் அன்பிற்கு அனுபவித்த பெரியோர்கள் கள் "சோர நடத்தையுள்ள ஒரு யுவதிக்கு சோர நாயகனிடத்து ஏற்பட்ட காதலையே" உவமானங்கூறி யிருக்கிறார்கள். ஆதலால் கோபியரின் அனுராகம் நீக்கமற்ற ஆழ்ந்த பக்தியே யாகும். பக்திப்பிரவாகம் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கினால் வரம்பு கடந்து சென்று முக்திக் கடலிற்றான் நிலைக்குமே யன்றி இடையில் தடை படுவதில்லை. அது போல கோபியரும் உயர்ந்த நிலையிலுள்ள பக்தி மேலீட்டால் செய்தவைகளை, பித்தர், பேதையர், பக்தர் என்பவர்களின் செயல்களைச் சீர்தூக்கலாகாதது போல ஸாதாரண நிலைமையில் வைத்து எண்ணல் கூடாது. தவிர, கண்ணன் தன்னைச் சேர்ந்தவர்களுடைய பாபங்களை யெல்லாம் போகச் செய்யும் தூயன். அக்கோபியரும் வேதாந்த நிர்ணயப்படி செலுத்த வேண்டிய இடத்திலேயே அன்பைச் செலுத்தினர். ஆதலால் அவர்களது பாவங்களெல்லாம் நீங்குமே யன்றி உண்டாவதில்லை. ஆகவே பிரம்மசைதன்யத்தைக் கண்ணனாகவும் அதன் உபாஸனை முறையைக் கோபியர் செயலாகவும் கொண்டு அன்பு செலுத்த வேண்டும்.

இக் கட்டுரையிலிருந்து ராஸக்கிரீடையின் விவரமும், அனுபவித்து விளையாடிய முறையும், முதனூலிற் கூறப்பட்ட விபரமும், அதிலிருந்து ஒரு சிறிது பாவமும் பொருளும் குறையாமல் திரும்பத் திரும்பப் பாடி ஆனந்திப்பதற் கேற்றபடி உயர்ந்த முறையில் சுருக்கமாக ராஸக்கிரீடையின் நவநீதம் போல் அமைந்த மஹாராஜா அவர்களது ஸாஹித்யமும், அதனால் ஆசிரியர்க்கு ஆழ்ந்த அறிவும் பக்தியும் பிறவும் நன்கு விளங்குவ தாகும்.